உ

ஓம் விராட் விஸ்வப் பிரஹ்மணே நமஹ

# நீர்வேலி வடக்கு
# இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர்



வெளியீடு :

தேர்த்திருப்பணிச் சபை,

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

24.05.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்ட

# சிறப்புமலர்

## 24.05.2010


மலராசிரியர் :

**வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்,** B.A.(Hons), M.Phil.,

முன்னைநாள் துணை விரிவுரையாளர்,

யாழ். பல்கலைக்கழகம்,

செயற்றிட்ட அலுவலர், முறைசாராக் கல்வி,

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்.



வெளியீடு :

**மலர் வெளியீட்டுக் குழு,**

**தேர்த் திருப்பணிச் சபை,**

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,**

**சங்கணவைப்பதி, நீர்வேலி வடக்கு,**

**நீர்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பதிப்புத் தரவுகள்


நீர்வேலி வடக்கு, இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர்
வெள்ளோட்டச் சிறப்புமலர்



©: கட்டுரை, கவிதை ஆக்கியோர்களுக்கு



மலராசிரியர் :
வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், M.Phil.,

மலர் வெளியீட்டுக் குழுச் செயலாளர் :
பத்மநாதன் பரமேஸ்வரன், B.B.A.,

வெளியீட்டு நாள் :
சித்திரத்தேர் வெள்ளோட்டத் திருநாளை முன்னிட்டு
24.05.2010ம் திகதி திங்கட்கிழமை
வெளியிடப்பெற்ற சிறப்பு வெளியீடு.

பிரதிகள் : 500

பதிப்பகம் :
தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி.

வெளியீடு :
மலர் வெளியீட்டுக் குழு,
தேர்த் திருப்பணிச் சபை,
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,
'சங்கணவைப்பதி', நீர்வேலி வடக்கு,
நீர்வேலி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அண்ட சராசரங்கள் அனைத்தையும்
படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் வருகின்ற
ஒப்புவமையில்லாத் தலைவியும் தெய்வ கணங்களின்
பேரருட் சக்தியும் மூலமுமாகிய பரப்பிரம்மத்தின்
பூவுலகப் படைப்பாளர்களாகிய விஸ்வகர்மாக்கள் எனப்படும்
மநு, மய, துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞன் எனும் பஞ்ச கோத்திர
சமூகத்தவர்களின் காத்தற் கடவுளாக அமர்ந்து,
இலங்கை விஸ்வப் பிரம்ம குலத்தார்க்கு
கலை, அறிவு, திறன், தன்னருள் என்பவற்றை வழங்கிப்
பேரருள் பாலிக்கும் வண்ணம் யாழ்ப்பாணத் திருநாட்டின்
சங்கணைப்பதி, நீர்வேலியில் எழுந்தருளி நிற்கும்
அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன்
திருவடிகளில்
குரு பீடாதிபதிகள், ஆச்சாரியப் பெருமக்கள், ஆய்வியற்
பேரறிஞர்கள், அறிஞர், புலவர் தம் பெருந்திறனாக்கங்கள் நிரம்பிய
இத்திருமலரை
சமர்ப்பணம் செய்து மகிழ்கின்றோம்.

**மலர் வெளியீட்டுக் குழுவினர்,**
*தேர்த் திருப்பணிச் சபை,*
*சங்கணைப்பதி*
*இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,*
*நீர்வேலி.*
*24.05.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய எழுந்தருளி மூர்த்தத்தின் அழகுத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : I

## அருளாசிச்செய்தி, ஆசியுரை, வாழ்த்துரை, பிரார்த்தனை உரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


சமர்ப்பணம் ........................................ III

பொருளடக்கம் ........................................ V

பகுதி : I

அருளாசிச்செய்தி, ஆசியுரை, வாழ்த்துரை, பிரார்த்தனை உரைகள்

அருளாசிச்செய்தி :

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் - VII

ஆசியுரை :

- சிவஸ்ரீ ந. நகுலேஸ்வரக் குருக்கள் - ........................................ VIII

வாழ்த்துச்செய்திகள் :

- விஸ்வப்பிரம்மஸ்ரீ இராசையா ஸ்ரீதரன் ஆச்சாரியார் - ........................ IX

- விஸ்வப்பிரம்மஸ்ரீ த. பரராசசிங்கம் - ........................................ X

பிரார்த்தனை உரைகள் :

- விஸ்வப்பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரன் ஆச்சாரியார் - ........................ XI

- விஸ்வப்பிரம்மஸ்ரீ த. பத்மநாதன் ஆச்சாரியார் - ........................ XII

பகுதி : II

சக்தி - சமூகம் - தேர்ப் பண்பாடு - கலா விமர்சனம்

1. சக்தி வழிபாடு புராதனமானது ........................................ 1
   - விஸ்வப்பிரம்மஸ்ரீ த. பரராஜசிங்கம் -
2. அன்னை காமாட்சி ........................................ 5
   - நடராஜசிவம் -
3. ஜெகத்குரு ஆதிசங்கரர் ........................................ 8
   - நடராஜசிவம் -
4. வழிபாடும் வாகனங்களும் ........................................ 11
   - பேராசிரியர் கோ. தெய்வநாயகம் -
5. தேர்த் திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம் ........................ 32
   - பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் -
6. இலங்கையில் விஸ்வகர்மா : விரிவான வரலாற்றுப் பார்வை ............ 35
   - விஸ்வப்பிரம்மஸ்ரீ பூ. ம. செல்லத்துரை -
7. இந்துப் பண்பாட்டில் தேர் : கலை, வரலாற்று நிலை நிற்கும் ஓர் ஆய்வு.. 43
   - வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், M. Phil., -
8. வரலாற்றில் வெள்ளோட்டம் காணும் வடநீர்வை இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர் ........................................ 51
   - வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், M. Phil., -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி : III

**ஆலய பக்தி இலக்கியம் : பதிகம் - ஊஞ்சல்**

9. இராஜராஜேஸ்வரி பதிகம் ............................................................ 57

- விஸ்வப்பிரம்மஸ்ரீ த. சண்முகதாஸ் -

10. ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் திருவூஞ்சல் ............................................ 59

- விஸ்வப்பிரம்மஸ்ரீ தெ. கோபாலசிங்கம் ஆச்சாரியார் -

பகுதி : IV

**அம்மனை வாழ்த்திநிற்கும் விளம்பரதாரர்கள்**

பக்கம் : (63 - 70)

நன்றியுரை ................................................................................ 71

- வேலுப்பிள்ளை அம்பிகைபாகன், M. Phil., -

- பத்மநாதன் பரமேஸ்வரன், B.B.A. -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்,**

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**

**வழங்கிய**

# அருளாசிச் செய்தி

நீர்வையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான அம்பிகைக்குப் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதையறிந்து பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

அம்பிகையின் அடியார்கள் ஒருசேர்ந்து நல்லமுறையில் உருவான இக்கைங்கரியம் பாராட்டப்பட வேண்டியது. இத்தனை நாளும் அம்பிகை உலாவர ஒரு தேர் இல்லையே என்ற குறையை நிறைவுசெய்த அடியார் பெருமக்களின் முயற்சி வரவேற்கத்தக்கது.

அழகிய வடிவிலமைந்த அற்புத சித்திரத் தேர் வெள்ளோட்டமானது நல்ல முறையில் நிறைவெய்தி சிறப்புற எல்லாம்வல்ல உமையவளை வழுத்தி, நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

அடியார்கள் நல்லெண்ணத்தோடு ஆரம்பித்த இத்திருப்பணி சிறப்புற நிறைவேறி இன்று தேர் வெள்ளோட்டம் நிகழுவது பாராட்டப்பட வேண்டியதே. இதில் பங்குகொண்ட அம்பிகை அடியவர்கள் அனைவருக்கும் அருட்சக்தி இராஜராஜேஸ்வரித் தாயின் பரிபூரண கிருபை கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு.'

***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.***

***19.05.2010***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கிரியா தத்துவநிதி', சிவஸ்ரீ ந. நகுலேஸ்வரக் குருக்கள் வழங்கிய

# ஆசியுரை

## நீர்வையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பழைய) அம்பாள் தேவஸ்தான இரதோற்சவ மகிமை

சைவ மக்கள் யாவருக்கும் ஆலய வழிபாடு இன்றியமையாதது. ஆலய வழிபாட்டை முறையாகச் செய்து வருபவர்கள் சிறந்த ஆன்மலாபத்தைப் பெறுகின்றனர். ஆலயங்களில் ஆகம முறைப்படி விதிமுறை நழுவாது பூஜைகள் நடைபெறவேண்டும். நித்திய, நைமித்திய, மஹோற்சவம் இவைகள் முறையாக நடைபெறவேண்டும். பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தினங்களைக் கொண்டு மஹோற்சவம் நடைபெறுவதுண்டு. மஹோற்சவத்தில் இறைவன் பஞ்சகிருத்தியங்கள் (ஐந்தொழில்கள்) செய்தருளுகின்றார் என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது.

சகல ஜீவர்களின் மும்மலங்களை ஒடுக்குவதாகும் மும்மலங்களையும் மூன்று அசுரர்களாக வேத புராணங்கள் கற்பித்துக் கூறுகின்றன. அசுரர்களை அழிக்கப் பரமேஸ்வரன் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரனைத் தேர்ச் சில்லாகவும், வேதங்களைக் குதிரையாகவும், அயனைத் தேர்ப்பாகனாகவும், மேருவை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டு தேரில் ஆரோகணித்து திரிபுரத்தை அடைந்து முப்புரங்களையும் எரித்தார். தேரில் ஏறி ஆயுதங்களைக் கொண்டு யுத்த சன்னத்தராகப் புறப்பட்டுச் சென்று தனக்குள் யாவும் அடக்கம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட அவ்வாறு அருள்புரிந்தார். ஆகவே இந்த உற்சவம் அழித்தலை (ஒடுக்குதல்) உணர்த்துகின்றது.

இரதோற்சவத்தன்று தேர் முடியிலிருந்து சில்லின் அடிப்பாகம் வரையிலும் ஒரே ஸ்வரூபமாக மூன்று பிரிவாக இல்லாமல் நின்று அருள்புரிகின்றார். அதாவது முழு ஸ்வரூபமும் பீடசக்தி, முழு சொரூபமும் உருவத் திருமேனி, முழுவதிலும் மறைந்து நிற்கும் சிவஸ்வரூபம் என்ற ஒரே பாவனையாக தரிசிக்கலாம். பிரபஞ்சம் பீடசக்தி. அதில் காணப்படும் பொருட்கள் உருவத்திருமேனி. அதனுள் மறைந்து நிற்பது சிவஸ்வரூபம் என்று சிவோஹம் பாவனை பெற்ற சிவஞானிக்கு யாவும் சிவமாக எப்படித் தோன்றுமோ அதேபோல இரதம் முழுவதையும் சிவஸ்வரூபமாக பாவித்து தரிசிக்கவேண்டும் என்பது கருத்தாகும். இரதமானது பெரும் மரங்களை வெட்டி சிறுதுண்டுகளாக ஆக்கித் தருபவன் தச்சன். சிற்ப சாஸ்திர நுணுக்கத்தின்படி அவைகளை உருவாக்கித் தருபவன் சிற்பாசாரி. அமைந்த உருவம் தேர். அதில் வீற்றிருப்பவன் தலைவன். இவ்வாறு நீர்வையம்பதியிலே அம்பிகையின் திருவருளால் அடியார்களால் அமைக்கப்பெற்ற சித்திரப் பெருந்தேரை வந்து தரிசித்து தேரின் வடத்தைப் பிடித்து அம்பாளின் திருவருள் பெற்றுய்வீர்களாக.

சாந்தா பிருதீவீ. சிவம் அந்தரிஷம் தியென ந<br>
தேவீம் அபயம் ந. அஸ் தீ;

அம்பிகையின் அடியவன்,<br>
***சிவஸ்ரீ ந. நகுலேஸ்வரக் குருக்கள்,***<br>
ஸ்ரீ வித்யா உபாசகர், பிரதம குருக்கள்.

*17.05.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வில்லிசைச் செல்வர், சிவநெறிக் கலாநிதி,

### இராசையா ஸ்ரீதரன் ஆச்சாரியார் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

## நீர்வையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை ஆதிபராசக்தி யானவள் அடியார்க்கருள்புரிய புண்ணியப்பதியாம் நீர்வையம்பதியிலே இராஜராஜேஸ்வரி அம்பிகையாக எழுந்தருளி வீற்றிருக்கின்றாள். வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி அருளாட்சி புரிகின்ற அம்பிகைக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உலகில் தாயன்புக்கு நிகராக வேறு எதையுமே கூறமுடியாது. ஜீவராசிகள் அனைத்துக்குமே அன்னையாக விளங்குகின்ற அம்பிகை ஸ்ரீ இராஜராஜேஸ்வதிக்கு அடியார்கள் ஒன்றுசேர்ந்து அழகிய முறையில் உருவாக்கியிருக்கும் சித்திரத் தேரானது அதியற்புதமாகக் காட்சிதருவதையிட்டு இறும்பூதெய்துகின்றோம். இந்த உயரிய திருப்பணிக்கு உதவியவர்கள் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்கள். இதனை முன்னின்று நடத்தி, பணிசெய்த அடியார்களுக்கும் மற்றும் அன்புள்ளங்களுக்கும் எல்லாம்வல்ல தாய் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பிகையின் பரிபூரண கிருபா கடாக்ஷம் கிட்டவேண்டும் என்று பிரார்த்தித்து ஆசி நல்குகின்றேன்.

இன்று நிகழும் தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

***இராசையா ஸ்ரீதரன்.***

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
*19.05.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி சமூகசோதி த. பரராசசிங்கம்
## சமாதான நீதவான் வழங்கிய
# வாழ்த்துச் செய்தி

திங்களைச் சடையி லேந்தும் சங்கரன் தேவியரே
சங்கடங்கள் தீர்த்தே யெம்மைக் காத்திடுவாயம்மா
சங்கணவைப் பதியுறையும் இராஜராஜேஸ்வரியே
மங்காத செல்வமெலாந் தந்தெமைக் காத்திடம்மா.

நீர்வேலி அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில் தேர்ச்சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நீர்வேலியில் பழம்பெருமை வாய்ந்ததும், சங்கணக்கடவை என்ற பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்து அடியார்கள் அல்லல் தீர்த்தருளும் பெருமைமிக்க அன்னைக்கு கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கேற்ப இவ்வாண்டு எதிர்பாராத விதமாக இராஜ கோபுரம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றதும் புதிதாக சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைய சித்திரத்தேர் செய்யப்பட்டதும், அத்தேருக்கான தரிப்பிடம் அமைக்கப்பட்டதும் எதிர்பாராத நிகழ்வுகளாக நடைபெற்றுள்ளன.

இதனை 'சக்தி'யின் சக்தி என்று கூறினால் மிகையாகாது. 'தெய்வத்தால் ஆகாததொன்றில்லை' என்ற உண்மையை எடுத்தியம்பும் செயற்பாடுகளாய் அமைந்துள்ளன.

இப்படியான அருள்மிக்க அன்னையின் பேரருளை வேண்டி இச்சிறப்பு மிகு திருப்பணிகள் நிறைவேற உழைத்த ஆலய நிர்வாகிகள், சிரமதானத் தொண்டர்கள், சிற்ப ஆசாரியர்கள், கட்டட சிற்பக் கலைஞர்கள், நிதி வழங்கியவர்கள் எனப் பல திறத்தவர்களுக்கும் அருள்மிகு அன்னை இராஜஇராஜேஸ்வரி அருள் என்றும் கிடைக்க வேண்டுமென அன்னையின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

*18.05.2010* — *த. பரராஜசிங்கம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத்தேர் நிர்மாண ஸ்தபதி,
## மயிலிட்டி சிந்துஜா கலைக்கூட முதல்வர்,
## விஸ்வப்பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரன் ஆச்சாரியார்
## வழங்கிய

# பிரார்த்தனை உரை

நீர்வேலி வடக்கு, 'சங்கணைவைப்பதி', இராஜராஜேஸ்வரி அம்மனுக்கு எம்மால் நிர்மாணிக்கப்பெற்றுவரும் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் வெளிவரவுள்ள 'சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்பு மலருக்கு எல்லாம் வல்ல அன்னையாரின் அருள் வேண்டிப் பிரார்த்தனை உரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

பிரதம சிற்பியின் மனத்திற் கருக்கொண்ட கலைப்படைப்பு, ஆலய மூலமூர்த்தியின் அருட் பிரவாகத்தினையும் பெற்று, உயிரோட்டத்துடன் நிறைவு கொண்டு வெள்ளோட்டம் காண்கின்றது என்பது இந்து சிற்பாகமம் கூறும் கலைத் தத்துவம் ஆகும்.

தேர் வெள்ளோட்டம், திருத்தேர் மண்டப நிர்மாணம், கோபுர நிர்மாணம் ஆகிய திருப்பணிகளின் நிறைவில் வெளிவருகின்ற தேர் வெள்ளோட்ட சிறப்புமலர், ஞான முதல்வர்கள், குருமணிகள், அறிஞர்கள், ஆய்வறிஞர்கள் தம் அரிய கருத்தாக்கங்களுடன் சிறப்பாக மலர்ந்து மணம்வீச எல்லாம் வல்ல நீர்வேலி சங்கணைவைப்பதி இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவடி பணிந்து பிரார்த்தித்து நிற்கின்றேன்.

'எல்லாம் அம்மன் செயலே'

தெய்வீகக் கலைப்பணியில்

*20.05.2010.* **ஸ்தபதி த. ஸ்ரீதரன் ஆச்சாரியார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பரிபாலனசபைத் தலைவர்
## விஸ்வப்பிரம்மஸ்ரீ த. பத்மநாதன் அவர்களின்
# பிரார்த்தனை உரை

எல்லாம் வல்ல நீர்வேலி, சங்கணவைப்பதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவருளை முன்னிட்டு :

அனைத்தையும் படைத்தும் காத்தும் இயக்கியும் அருள்செய்து நிற்கும் அன்னை இராஜராஜேஸ்வரி அம்மனுக்கு சித்திரத்தேர் ஒன்று நிர்மாணித்தும் அதன் வெள்ளோட்ட தினமாகிய இன்று (24.05.2010ம் திகதி) சக்தி வழிபாடு, இந்துப் பெரியோர் விஸ்வப்பிரம்ம சமூகத்தின் முக்கியத்துவமும் பரம்பலும், தேர்த் திருவிழா, தேரின் முக்கியத்துவம், தேரமைத்த கலைஞர் திறனும் சிறப்பும் பற்றிய அறிஞர், ஆய்வறிவாளர்களின் ஆக்கங்களைத் தாங்கிய வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர் வெளிவருவதையிட்டு மிக மனம் மகிழ்வடைவதுடன் இவை இரண்டு நிகழ்வுகளும் சிறப்பாக நிறைவேறுவதற்கு எல்லாம்வல்ல அம்பாளின் திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

'எல்லாம் அவள் செயலே'

தெய்வீகப் பணியில்,

***த. பத்மநாதன்***

அம்பாள் அடியவன்

*19.05.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பகுதி : II

# சக்தி - சமூகம் - தேர்ப் பண்பாடு - கலா விமர்சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# சக்தி வழிபாடு புராதனமானது

***விஸ்வப்பிரம்மஸ்ரீ த. பரராசசிங்கம்,*** *J.P.*
*செயலாளர்,*
*காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை,*
*நீர்வேலி.*

பெண் தெய்வ வழிபாடு அல்லது தாய்த் தெய்வவழிபாடு மிகவும் புராதனமானது. பழைய கற்காலத்தில் பெண் தெய்வ வழிபாடு உலகெங்கணும் காணப்பட்டதற்கான சான்றுகள் தொல்பொருளியலாளர்களால் வெளிக்கொணரப் பட்டுள்ளன.

தேவி (பராசக்தி) ஒருத்தியே முன்பு இருந்தாள், அந்தத் தேவியே சராசரங்களின் வடிவமான பிரமாண்டத்தைப் படைத்தாள். அவள் காமகலை எனவும், சிருங்காரகலையெனவும் அறியப்படுகின்றாள்.

அவளிடமிருந்தே பிரமா உண்டானார், விஷ்ணு உண்டானார், உருத்திரன் எல்லாத் தெய்வங்களும் கந்தர்வர்கள், அப்ஸரசுகள், கின்னரர்கள் உண்டாயினர். போக வஸ்துக்களும் சக்தி படைத்த அனைத்தும் உண்டாயிற்று. எல்லாப் பிராணிகளும், தாபர சங்கமங்களும் உண்டாயின.

கல், எலும்பு, களிமண் ஆகியவற்றினாலான அளவில் சிற்றுருவிலான வழிபாட்டுக்குரிய பெண் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடவேண்டியன.

பெண் தெய்வ வழிபாடு பபிலோனியா, எகிப்து, கிரேக்கம் ஆகிய பகுதிகளில் காணப்பட்டதோடு, அது ஞானம், தீர்க்க தரிசனம் என்பனவற்றைத் தருவதாகவும் கருதப்பட்டது. மத்தியதரைக் கடற்பிரதேசத்தில் பாம்பு பெண் தெய்வமாகவும் வழிபட்டமைக்கான சான்றுகளும் உள்ளன. இவ்வாறு தொடக்ககாலச் சமயத்தில் பெண் தெய்வ வழிபாடு நடைமுறையிலிருந்ததென்றும், காலப்போக்கில் ஆண் தெய்வம் முதன்மைபெற்றதென்றும் அறியக்கிடக்கின்றது.

சங்க இலக்கியங்களில் பெண் தெய்வமான கொற்றவையின் வழிபாடு காணப்பட்டது. கொற்றவை பரவலாக திராவிட மக்களால் வழிபடப்பட்டவள். தென் இந்தியாவில் காணப்பட்ட வேட்டையாடும் இனக் குழுக்களால் வழிபடப்பட்டவளென்றும், வெற்றியைப் பெற்றுத் தருபவளென்றும் போற்றப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மரபில் பெண்ணாக ஆள் நிலைப்படுத்தப்பட்ட ஆற்றலே சக்தி தத்துவமெனவும், அதன் வழிபாடு சக்தி வழிபாடு எனவும் அழைக்கப்படும். சக்தி தத்துவம் ஆண் தத்துவத்திலிருந்து வேறுபட்டதும், செயல் முனைப்புடையதாயு முள்ளதொன்றாகும். சக்தி வழிபாடு பற்றிய குறிப்புகள் இருக்கு வேதத்தில் மிகவும் குறைவாகவேயுள்ளன. வேதகால மனிதன் தொடர்ச்சியாக தெய்வீக அருளை வேண்டி நின்றான். அவ்வருள் தெய்வங்களின் உள்ளுறை ஆற்றலாகக் கொள்ளப்படாது "சசி" என்ற பிறிதொரு மூலத்திலிருந்து பெறப்பட்டதாகவே இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. இயற்கை ஆற்றலைப் பெண்மைத் தத்துவமாக உருவகிக்கும் சிந்தனை வேதங்களில் இடம்பெற்றாலும் கோட்பாடுகளிலேயே அது சக்தி வழிபாடாக முதன்மை பெற்றது. வேதங்களும், பிராமணங்களும் கிரியைகளை முதன்மைப்படுத்தியதால் அக்காலத்தில் சக்தி வழிபாடு பெரு வழக்குப் பெறாதிருந்திருக்கலாம்.

பிற்காலத்தில் இந்துமரபில் செல்வாக்குப்பெற்ற சிவவழிபாடு பெண் தெய்வ வழிபாட்டுடன் கலப்புற்றநிலையில் சக்தி வழிபாடாகியது. பார்வதி, உமை முதலிய பெண் தெய்வங்கள் தொடக்கத்திலே சக்தி தத்துவத்துடன் வெளிப்படையான தொடர்பைக் கொண்டிராதபோதும் காலப்போக்கில் அவை சக்தி வழிபாட்டின் முதன்மைத் தெய்வங்களாயின.

இந்து மரபில் சக்தியை வழிபடுபவர்கள் சாக்தர்கள் என அழைக்கப்படுவர். செயல்முனைப்புடைய தத்துவமாகிய சக்தி தத்துவமே அனைத்திற்கும் ஆதாரமானதென அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். சக்தி இலக்கண ரீதியான பெண்பாலை மட்டும் சுட்டாது, கருத்தடிப்படையில் பெண் தத்துவத்தைச் சுட்டுகின்றது. மகேசுவர மூர்த்தங்களைவிடத் (தேவியின்) சக்தி மூர்த்தங்களும் ஆலய வழிபாட்டில் இடம்பெறுகின்றன. உமாதேவியார் சிவபெருமானுடைய அருட்சக்தி என்று கூறப்படுபவர். சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக அமைகின்றாள். சிவன் உலகத் தோற்றத்துக்கு அடிப்படையாக அமையும்போது சக்தி அதன் இயக்குந் தத்துவமாக விளங்குகிறாள். சாக்த தத்துவத்தில் தாய் முதலிடம் பெறுகிறாள். சக்தியைப் பெண்ணாகக் கொள்வது சாக்தநெறி. சாக்தர் உலகத்தை மேலாகக் கொண்டு அதனோடு சக்தியின் வியாபகத்தை எங்கும் எல்லாவற்றிலும் காண்கின்றனர். சக்திதான் தெய்வத்திற்கெல்லாம் தெய்வம், சக்தியில்லாமல் சிவ தத்துவம் ஒன்றையும் இயக்கமாட்டாது என்று சாக்தர்கள் கருதுகின்றார்கள்.

இவர்கள் சக்தியைத் தனித் தெய்வமாக வழிபடுகின்றார்கள். ஆற்றலுக்குரியவர் இறைவன் என்றால் அந்த ஆற்றலின் இயக்கத்துக்கு சக்தி என்ற பெயர் வழங்கப்படுகின்றது. சக்தியின் பிரபாவத்தை உயர்த்திப் பேசுபவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாய், சிவமாய் என்றும், சக்தியை உடையவன் சிவன் என்றும் இறைவன் 'சக்திதரன்' என்றும் கூறுவர். சக்தியை வழிபடுபவர்கள் சக்திமான்களாவர் என்பது சாக்தர்களின் நம்பிக்கையாகும். "சக்தியின்றி சிவம் இல்லையென்பது முடிந்த முடிவு".

இந்தியாவிலே சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலே தாய்த் தெய்வ வழிபாடு நிலவிவந்துள்ளது. இந்துப் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழ்வது சிந்துவெளி நாகரிகமாகும். இந்துக்களிடம் நிலவியதுபோல வேறெந்த நாட்டிலும் தாய்த்தெய்வ வழிபாடு நிலைத்து நின்றதாக இல்லை. சிந்துவெளி நாகரிகத்தில் சக்தியின் வடிவங்கள் கோர வடிவமாகவும், சாந்த வடிவமாகவும் காணப்பட்டன. கோர வடிவமான தெய்வங்களை துர்க்கை, காளி, நீலி என்ற பெயர்களினாலும் சாந்த வடிவமான தெய்வங்களை கௌரி, கல்யாணி, வடிவாம்பிகை என்ற பெயர்களினாலும் அழைத்து வழிபடுவர்.

தாயாக விளங்கும் அன்னை பராசக்தி, மாகாளி, உமை, பார்வதி, மீனாட்சி, காமாட்சி, முத்துமாரி, பகவதி, வைஷ்ணவி, பைரவி, இராசராஜேஸ்வரி, மனோன்மணி, கண்ணகை, மகாலட்சுமி எனப் பல்வேறு பெயர்களால் மக்களால் வழிபடப்படுகின்றாள். சக்தி வழிபாடு சிந்துவெளிக் காலந்தொட்டு வாழ்வியலில் கலந்துவருகின்றது. வேத காலத்திலும் சக்தி வழிபாடு உண்டு. இக்காலங்களில் உஷை, ராயத்திரி போன்ற பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டன. ஆறுகளும் பெண்ணாகக் கருதி வழிபடும் வழக்கமும் இருந்தது. "கன்னியாகுமாரி" என்ற ஆறு தெய்வமாக அக்காலத்தில் பெருமைபெற்றிருந்தது.

"சிவனின்றேல் சக்தி இல்லை", "சக்தி இன்றேல் சிவமில்லை" என்ற கருத்துக்கேற்ப புராணங்கள் சக்தியின் பெருமையைக் கூறுகின்றன. இதற்காக வகுக்கப்பட்ட உருவமே அர்த்தநாரீஸ்வரர் உருவம்.

அர்த்தம் - பாதி; நாரி - சக்தி; ஈஸ்வரர் - சிவன். எனவே, ஆண்பாதி; பெண்பாதி; பாதி - உமை; பாதி - சிவன். மேலும், இதிகாசத்தில் சக்தி வீரத்திற்குரிய தெய்வமாக வழிபடப்பட்டுள்ளார்.

அம்பிகை வழிபாட்டு முறையிலே காயத்திரி மந்திரம் முக்கிய இடம் பெறுகின்றது. துர்க்கை, காளி என்பது காயத்திரி மகா சக்தியின் ஒரு அம்சமேயாகும். வேதங்கள் கூறிய வழியிலே சக்தியை வழிபடுகின்றவர்களுக்கு இந்திரப் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்த் தெய்வ வழிபாடு உயரிய மட்டத்தில் ஆகம விதிகளுக்கமைய நடைபெறுகின்றது. இவ்வழிபாட்டில் "ஸ்ரீ சக்கர பூசை" முதலிடம் பெறுகின்றது. அம்பிகையை நவ சக்திகளாகப் பாவனை செய்து நடைபெறும் பூசை "நவசக்தி அர்ச்சனை" எனவும் சக்தி வழிபாட்டில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

மதுரையிலே மீனாட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கேரளத்திலே பகவதியாகவும் இன்னும் பலபல இடங்களில் வெவ்வேறு பெயர் கொண்டும் வழிபாடாற்றி வரும் அம்பிகையின் அருளைப் பெற்ற அருளாளர்களில் அபிராமிப்பட்டர் அருளிய "அபிராமி அந்தாதி"யும் குமரகுருபரர் அருளிய "மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழும்" கம்பன் அருளிய "சரஸ்வதி அந்தாதி"யும் அம்பிகையின் அருட்பிரவாகத்தைப் பக்திச் சுவைசொட்ட கூறும் சிறப்புப் பிரபந்தங்களாகக் காணலாம்.

நாமும் அம்பிகையைப் பிரார்த்தித்து அதிகவரம் பெற்று சிறப்பாக வாழ்வோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# அன்னை காமாட்சி

*நடராஜசிவம்*

பூவுலகின்கண் உள்ள மிக முக்கியத் தலங்களாக அன்னை பராசக்திக்குரியவை என பல இருப்பினும், மூன்றை மட்டுமே முக்தி தரும் அதிமுக்கியத் தலங்கள் என்று குறிப்பிடுவர். அவைகளாவன : காஞ்சி, மதுரை, காசி. காசியில் விசாலாட்சியாக விஸ்வநாதப் பெருமானுடனும், மதுரையம்பதியில் மீனாட்சியாக சொக்கநாதப் பெருமானுடனும், காஞ்சியில் காமாட்சியாக ஏகம்பவாணப் பெருமானுடனும் காட்சியளிப்பதுடன், மற்ற இடமெங்கிலும் நிறைந்து அருளாட்சி புரிந்து வருகின்றாள் அன்னை!

இங்கு நாம் கச்சி எனும் காஞ்சியம்பதியைப் பற்றி, காஞ்சி காமாட்சியைப் பற்றி சிறிதே காண்போம்.

**க - அஞ்சி - காஞ்சி. க - பிரமம், அஞ்சுதல் - விரும்புதல்**

பிரமமாகிய சிவபெருமான் அஞ்சிங்கப்பட்டிருக்கும் தலம் காஞ்சி.

இப்பதியை நினைத்தாலும் கேட்டாலும், சொன்னாலும், வணங்கினாலும் எத்தகையோர்களுக்கும் பேரின்ப வீடு கிடைக்கும். யானையை சிறுமுயல் ஓடச்செய்த இடம். உயிர் நீங்கிய உடம்புகள் உயிர்பெற்று எழும் இடம். இறவாத் தனம் முதலிய இடங்களும், பற்பல அற்புதங்களும் நிறைந்த இக்காஞ்சிக்கு காவல் தெய்வங்களாக விநாயகர், பைரவர், முருகப்பெருமான் முதலியோர் உள்ளனர். சிவபெருமான் எக்காலத்தும் உமையன்னையோடு நீங்காது விளங்கும் தலம் இது.

எல்லா காமப் பொருளுக்கும் ஆதாரமாய் நிற்பதால் 'காமக்கோட்டம்' எனவும், சக்திபீடங்கள் பலவற்றுக்கும் முதற்பீடம் ஆதலால் 'ஆதிபீடம்' என்றும் சொல்லப்படுகிற இத்தலத்தில்தான் உமாதேவி, இறைவனை (சிவன்) மணலால் ஸ்தாபித்து பூஜித்ததாக வரலாறு உண்டு. இறைவனை ஒருசேர அடையும் பொருட்டு பூஜித்துவந்த அன்னையை, அவளுடைய அன்பினை சோதிக்கக் கருதிய சிவன், அத்தலத்திற்கருகே உள்ள கம்பா நதியைப் பெருகியோடும்படி செய்தார். ஆண்டவன் கட்டளையாயிற்றே. மீறமுடியுமா? கம்பா நதி பெரும் சீற்றத்துடன் பாய்ந்துவந்தது. வந்த வேகத்திலேயே கரைகளையும், கரைகளில் இருந்த மரங்களையும் பெயர்த்துக் கொண்டு நுரை பொங்க புதுவெள்ளம் போல் பரந்துவந்தது. அவ்வாற்றின் கரையில் ஓரிடத்தில் மணலால் தானே நிறுவிய சிவலிங்கத்தை நாள்தோறும் பூஜித்துவந்த தேவி, அன்றைய தினம் ஆற்றில் வழக்கத்திற்கு மாறாக பெருவெள்ளம் பெருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதைக் கண்டு அஞ்சி, மண்ணாலான சிவலிங்கம் கரைந்து போய்விடக்கூடுமோ என்றஞ்சி, அச்சிவலிங்கத்தினை இறுகத் தழுவிக் கொண்டுவிட்டாள். பின் நடந்தது என்னவென்று நாம் ஊகித்தறிய வேண்டியதுதான். அம்மை அப்பனைத் தழுவினாள், அத்தழுவலில் தேவியினுடைய முலைத்தழும்பும், கைவளைத் தழும்பும் அவரது திருமேனியில் அழுந்திப் பதியுமாறு தன் சிவலிங்கத் திருமேனியை குழைவாக்கிக் காட்டினார். அவ்வாறு ஏற்பட்ட தழும்பு இன்னும் கச்சியம்பதியிலுள்ள அச் சிவலிங்கத்தின் மீது இருப்பதைக் கண்டு மகிழலாம். அதன் பின்னர் இறைவன் உமைக்குக் காட்சி நல்கியதோடு அருள்பாலித்துத் தன்னுடன் இணைத்துக் கொண்டருளினார்.

காமகோடிப் பீடமும், கம்பாநதியும், காமக் கோட்டமும் குமரக் கோட்டமும் கொண்டபடி விளங்கும் காஞ்சிப் பதி சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் போன்ற சமயக் குரவர்களால் பாடப்பெற்ற தலமாக விளங்குகிறது.

உலகீன்ற பச்சையுமையவள், எல்லாவற்றிலுமே வளர்ச்சிக்குக் காரணமாக உள்ள காமத்தை அளித்திருக்கிறாள். அதன் பொருட்டே காமேசுவரி என்ற பெயர் அன்னைக்கு வழங்குவதுடன், காமத்தை ஆட்சி செய்யும் 'காமாட்சி' என்ற சிறப்புப் பெயரும் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

கா - என்பது - சரஸ்வதி தேவியையும் (கலைமகள்)
மா - என்பது - திருமகளையும்
அட்சி - என்பது - கண்ணாகப் பெற்றவள்.

அதாவது, கலைம்கள், திருமகள் ஆகிய இருவரையும் தன்னிரு கண்களாகப் பெற்றவள். அத்துடன் உக்கிர சக்தி கொண்ட தனது நெற்றிக் கண்ணில் 'துர்க்கை'யை கொண்டிருப்பவள். இவ்விதமான முச்சக்திகளையும் (கல்வி, செல்வம், வீரம்) தன்னுள் கொண்டிருக்கும் மகாசக்தியே ரஜோ, தமோ, சத்வக் குணங்களையுடைய மும்மூர்த்திகளான பிரம்ம, விஷ்ணு, உருத்திரர் ஆகியோரையும், அந்தந்த குணங்களுடன் இருந்த நிலையில் முறையே தோற்றுவித்து அவர்களுக்குரிய கடமையை உணர்த்தியருள் புரிந்தவள் சக்தி!

அண்டங்கள், கோள்கள் அனைத்தும் அதிருமளவுக்கு உக்கிரமான சக்தியைப் பெற்றிருந்தாலும் அன்னையின் கருணை, அன்பு, அரவணைப்பு எல்லா உயிர்களுக்கும் எந்நேரமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. பரமசாந்தமுள்ள அக்கருணையால்தான் உலகும் உயிர்களும் இன்னும் 'அன்பு' என்ற நிலையைக் கொண்டு இயங்கி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகு கருணையின் மற்றொரு உருவே 'காமாட்சி'. அவ்வன்னையானவள் கடைக்கண் நோக்கால் திருவருள் புரிபவளாதலால் அபய, வரத முத்திரைகளின்றி, நான்கு கைகளிலும் முறையே பாசம், அங்குசம், மலர்க்கணை, கரும்பு வில் ஆகியவற்றுடன் தோன்றுகின்றாள். கரும்பு வில்லை உடையவன் மன்மதன். அவனது தொழில் காம இச்சையை உண்டாக்குவது. அத்தகைய கரும்பு வில்லை காமாட்சி அன்னை தாங்கியிருக்கிறாள் என்றால், அதன் பொருள் என்ன? பெயரைக் கொண்டே சொல்லிவிடலாமே? **காமத்தை அடக்கியாள்வாள் காமாட்சி. காம குரோதத்தால் சிக்கித் தவிக்கின்ற மக்களுக்கெல்லாம் கதிமோட்சம் தருபவள் காமாட்சித் தாயே!** அவளை எண்ணினால், காமம் விலகும். குரோதம் மறையும். அவளைத் தொழுதால் மலங்கள் யாவும் நீங்குவதுடன் நல்லறிவான ஞானத்தையும், அருட்செல்வத்துடன் பொன் பொருளையும் தந்து மனங்குளிரச் செய்திடுவாள்.

**"நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச**
**சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு**
**வாய-கி மாலினி வாராகி சூலினி மாதங்கி - என்**
**நாயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே!"**

(எல்லா உலகங்களுக்கும் தலைவியே, பிரம்மதேவனின் சக்தியாகிய கலைமகளையும், திருமாலின் சக்தியாகிய திருமகளையும், நளினமான உனது கையில் தாமரை மலரையும், மலர்க்கணைகளையும் கொண்டவளே, மலமற்ற சம்பு சங்கரனின் சக்தியே, சியாமளாதேவியே, நஞ்சு பொருந்திய வாயுடைய நல்ல பாம்பை அணியாகப் பெற்றவளே, நிலமகளே, சூலத்தை உடைய என் நாயகியே, ஆதியானவளே, உன் திருவடிகளே எமக்குத் துணையாகும்.)

காமக்கோட்டத்தை இருப்பிடமாகக் கொண்ட அந்த காமாட்சி தேவி பார்வைக்கு எட்டிய இடங்களிலேயே தனது மைந்தர்களை மூர்த்தங்களாக்கி (கோயில்களில்) கண்காணித்துக் கொண்டிருக்கிறாள். காஞ்சியில்! அப்படியிருக்க, அத்தலத்தை நாம் நேரில் சென்று பார்த்தால் அதன் தத்துவமும். உண்மையும் நன்கு புலனாகிவிடும்.

இத்தகு கச்சி நகருக்குப் பல பெயர்கள் சங்ககாலம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம். புவனசாரம், மும்மூர்த்திவாசம், விண்டுபுரம், காஞ்சி, கலிசித்து, இலயசித்து, சகலசித்திபுரம், தபோமயம், பிரமபுரம், ஆதிபீடம், கன்னிக்காப்பு, சிவபுரம் என்ற பன்னிரு காரணப் பெயர்களுடன் விளங்குவது காஞ்சி.

**"நச்சி நாளும் நயந்தடி யார் தொழ**
**இச்சை யாலுமை நங்கை வழிபடக்**
**கொச்சை யார்குறு கார்செறி தீம்பொழில்**
**கச்சி யேகம்ப மேகை தொழுமினே!"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# ஜெகத்குரு ஆதி சங்கரர்

***நடராஜசிவம்***

நம் பாரதப் பூமியில் தொன்மைக் காலந்தொட்டே சிறப்புடன் வழங்கி வந்ததே வேத மதமென்றழைக்கப்படும், இந்து மதத்திற்கு ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்திலிருந்து வந்த இடர்ப்பாடுகளைக் களைவதற்காகவே ஒரு மாபெரும் பக்தி இயக்கம் தோன்றலாயிற்று. அந்த இயக்கத்தில் உதித்த முதல்வரே - ஸ்ரீ சங்கரர்!

ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கேரள மாநிலத்திலுள்ள 'காலடி' எனும் புண்ணிய பூமியில் - அந்தணர் குலத்தில் பக்திப் பெருக்குடன் வாழ்ந்துவந்தனர் சிவகுரு, ஆர்யாம்பிகை என்னும் தம்பதியினர், ஈசன்பால் பேரன்பும் பக்தியும் கொண்டிருந்த அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாமலிருந்தது ஒரு பெரும் குறையாகவே இருந்து, அந்நிலை கண்டு இரங்கிய இறைவன் ஒரு நாள் கனவில் தோன்றி அருள்புரிந்து மறைந்தார். அதையொட்டி தம்பதிகள் இருவரும் திருச்சூரில் உள்ள சிவாலயம் ஒன்றுக்குச் சென்று இறைவனை வேண்டி நின்றனர். இரக்கமே உருவான அம்மையப்பன் அவர்களுக்கு நல்வழி காட்டி அருள் புரிந்தான். ஆர்யாம்பிகை எனும் அந்தத் தாய் உலகத்து நாயகியால் அருளப்பட்ட மகவைச் சுமந்து பெற்றெடுத்தாள். பரமேஸ்வரனே அந்த தாயின் வயிற்றில் குடிகொண்டு பிறந்ததைப் போன்று தேஜோமயமான அந்தக் குழந்தையைக் கண்டு அகமும் உளமும் பூரித்து மகிழ்ந்து, இறைவனைப் போற்றினர். 'சங்கரன்' என்னும் திருநாமத்தை சூட்டினர்.

அழகுடன் அறிவும் நிரம்பப் பெற்றிருந்த சங்கரனின் இளம்பிராயத்திலேயே தந்தை சிவகுரு திருவருள் எய்தினார். தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்ததோடு, அன்னையிடமே கல்வி கற்கவும் தொடங்கினார். அத்துடன், குருகுலக் கல்வியிலும் அனைத்தையும் பயிலத் தொடங்கி சிறந்தமுறையில் விளங்கினார். தமது 16ம் வயதிற்குள்ளாக சகல வேத பாடங்களையும் சம்பிரதாய முறைகளுடன் பிற நூல்களையும் கற்றுணர்ந்தார். தெளிந்த அறிவும் பெற்றார்.

இவரது எட்டாவது வயதில்தான் மிக முக்கிய நிகழ்ச்சி ஒன்று நடந்தேறியது. தமது இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு நதியில் இறங்கி நீராட முனைந்தபோது, அந்நதியிலிருந்த ஒரு முதலையானது அவரது காலை கவ்விக் கொண்டுவிட்டது! அலறினார், கூக்குரலிட்டார். அவரது குரலைக் கேட்ட அவரது தாய் ஓடோடி வந்தார். மகனைக் காப்பாற்ற முனைந்தார். நதியில் இறங்கத் தொடங்கினார். அப்போது சங்கரர், தாயைப் பார்த்து 'தாயே! நீங்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கவேண்டாம். நான் ஒருவனே முதலைக்குப் பலியானாலும் பரவாயில்லை. நீங்களும் வந்து மாட்டிக் கொள்ளவேண்டாம்' என்று கூறியதைக் கேட்ட தாய் அழுதுகொண்டே இறைவனை வேண்டிக் கொண்டு நின்றார்.

இதற்கு முன் ஒரு தடவை சங்கரர் தம் தாயிடம் கூறியதை நினைத்துப் பார்த்தார். தாம் சந்நியாசம் வாங்கிக் கொண்டால்தான் தனது பிறவிப் பயன் தீரும், அதன்மூலம் பல காரியங்களைச் செய்யமுடியும் என்று முன்னரே ஞானத்தினால் உணர்ந்திருந்த சங்கரர், தன் தாயிடம் அதைக் கூறவே, தாய் அதற்கு மறுத்துவிட்டாள். அப்போதிருந்தே சொல்லிக் கொண்டிருந்தார். தன்னை சந்நியாசம் வாங்கிக்கொள்ள அனுமதிக்காவிட்டால் நதியில் இறங்கி முதலையிடம் மாட்டிக் கொள்ளப் போவதாகக் கூறியதையும், அந்த சமயத்தில் தாய் நினைத்துப் பார்த்தாள், துடித்தாள். இறைவா இது என்ன சோதனை! என்று பரிதவித்து ஒரு முடிவுக்கும் வந்தாள், "மகனே, நீ உன் விருப்பப்படியே சந்நியாசம் வாங்கிக்கொள். சன்னியாசம் வாங்கிக் கொள்வது வேறு ஜென்மம் எடுப்பது போலாகும். இந்த ஜென்மத்தில் எனக்காக நீ செய்த கடமைகள் எல்லாம் போதும், இனி நீ நாட்டுக்கும், சமயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை செவ்வனே செய்ய, சன்னியாசம் வாங்கிக் கொள்ளலாம்" என்று கூறியதுதான் தாமதம், சங்கரரின் காலைப் பிடித்திருந்த முதலை தன் பிடியை விலக்கிக் கொண்டுவிட்டு, அவரை விட்டது. கரையேறி முதலைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, தாயிடம் சென்றார். முதலை உருவில் வந்து அவரை சன்னியாசம் வாங்கிக்கொள்ள வழி செய்தது - சாட்சாத் பரமேஸ்வரன் தான் என்பதை அறிந்திருந்தார் சங்கரர். அதற்காகவே நன்றி தெரிவித்தார். அது முதற்கொண்டு துறவற வாழ்க்கையிலேயே காலத்தைக் கழிக்கத் தொடங்கினார்.

இல்லற வாழ்வில் ஈடுபடும் வயதில் இவரது மனம், சிந்தனை, செயல் யாவும் கடவுள் தியானம், தொண்டு, பாராயணம் என்று சென்று கொண்டிருந்தது. பரமேஸ்வரனே சங்கரராகத் தோன்றினார் என்னும் எண்ணம் பலரின் மனதில் உதிக்க அரும்பணியும், அருட்செயல்களும் புரிந்து வந்தார். அதனால் இல்லற வாழ்வை இவர் மனம் வெறுத்தது என்பதில் ஆச்சரியமேதுமில்லை! இவரது அரிய சிந்தனையும், இந்துமத வேத பாராயணமும் இவரை மேலும் உசுப்பி எழச்செய்தது. அந்த சமயத்தில்தான் ஸநாதன தர்ம நெறிகளை கடைப்பிடித்து வந்த மக்களிடையே பிற மதங்களின் ஆதிக்கம் வேர்விட ஆரம்பித்தது. அதைக் கண்டும் அவர்களது நெறிமுறைகளைக் கண்டும் வெகுண்டெழுந்தார். இந்து சமயத்தின் மீது தீவிர நாட்டங் கொண்டு, பக்தி இயக்கம் ஒன்றையும் ஸ்தாபித்தார். ஞான மார்க்க வழிகளைக் காட்டினார். இவ்வரும் காரியத்தால் இந்து மக்களிடத்தில் தலையிட ஆரம்பித்த பிற மதங்களின் தலையீட்டை கிள்ளியெறித்தார்.

கலியுகத்தில் நெல் விளையும் கழனியில், புல் பூண்டாகக் கிளம்பிய பிற சமயங்களை வேருடன் களைய வழிவகை செய்த முதல் சமயப் புருஷர் சங்கரர்! இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபின் அவை யாவும் இருக்குமிடம் தெரியாமலே போய்விட்டன. அதற்காக தேசம் தேசமாக, ஊர் ஊராக, கிராமம் கிராமமாக 'திக் விஜயம்' செய்யலானார். இவ்விஜயமே 'சங்கரர் திக் விஜயம்' என்ற பெயரைப்பெற்று சிறந்து விளங்கலாயிற்று. இந்தக் காலத்தில் இவர் செல்லாத ஊரில்லை, சொல்லாத உபதேசமில்லை, செய்யாத தர்க்க சாஸ்திரமில்லை. தான் சென்ற இடங்களில் எல்லாம் மக்களுக்கு அரும்பெரும் உபதேசங்கள் பலவும் செய்து வெற்றிக்கொடியை நிலைநாட்டினார்.

கடவுள் பக்தி தர்ம நீதி நியதிகளைக் கடைப்பிடித்து வந்த மக்களின் போக்கில் மாறுதலை உண்டுபண்ண எழுந்த புத்த சமயத்தில் கடவுளைப் பற்றியும் தர்ம நெறிகளைப் பற்றியும் முரணாக சொல்லி ஒழுக்கல்லாமல் போனதைக் கண்டு மனம் வருந்தி, அச்சமயத்தில் உள்ள கொள்கைகளைக் கண்டனம் செய்து, வாதங்கள் புரிந்து கடவுள் கொள்கையில் இருக்கும் நன்மைகளையும், தர்ம நெறிகளை கடைப்பிடிப்பதில் உள்ள பலன்களையும் யாவரும் வியக்கும்படி நிரூபணம் செய்தார். அதற்காகவே பலவித சூத்திரங்களை எழுதினார். மக்களை அறியாமையினின்றும் காத்து விழிப்படையச் செய்த பெருமை இவரையே சாரும். இவருக்கு முன்பாகவே, பூர்வமீமாம்சகர்களான குமாரில பட்டர், உதயனாசாரியார் போன்றோரும் பௌத்த கொள்கைகளை கண்டனம் செய்திருந்த போதிலும், சங்கரர் ஒருவராலேயே அக் கொள்கை முழுவதுமாக பிற்காலத்தில் மாற்றமுடிந்தது. மேலும் பலவாகப் பிரிந்துபோன சமயங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து தேவையில்லாத சமயநெறிகளை அகற்றி 'ஷண்மதம்' என்றழைக்கப்படும் ஆறுவகைச் சமய வழிபாட்டை, இந்து சமயத்தாருக்கு போதித்தவர் சங்கர பகவத் பாதாள் அவர்களே!

ஷண்மத ஸ்தாபகரான இவர் வேதமுறைப்படி உள்ள தனித்தனி வழிபாட்டு முறைகளை பஞ்சாயதன முறையுடன் (ஐவகை வழிபாடு) கௌமாரம் என்னும் குமரக் கடவுள் வழிபாட்டையும் சேர்த்து - ஆறு சமயத்தை இயற்றினார். "ஆதித்யம் - அம்பிகாம் - விஷ்ணும் - கணநாதம் - மஹேச்வரம்" என்பதே பஞ்சமூர்த்தமாகும். இவற்றோடு முருகக் கடவுளையும் இணைத்தார் ஆதிசங்கரர்.

**காணாபத்தியம் என்னும் விநாயகர் வழிபாட்டையும்**
**சைவம் என்னும் சிவபெருமான் வழிபாட்டையும்**
**வைஷ்ணவம் என்னும் திருமால் வழிபாட்டையும்**
**சாக்தம் என்னும் சக்தி வழிபாட்டையும்**
**சௌரம் என்னும் சூரியன் வழிபாட்டையும்**
**கௌமாரம் என்னும் முருகன் வழிபாட்டையும் இணைத்தார்!**

இந்த 'ஷண்மத' வழிபாடே இந்து மதத்தின் முக்கிய அடிப்படையாகும். இவ்வழிபாடே பக்தி மார்க்கத்திலுள்ள ஒருவனை உன்னத நிலைக்கு கொண்டு சேர்க்கும் என்பதை நாம் உணர வேண்டியது இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4**

# வழிபாடும் வாகனங்களும்

*பேராசிரியர் கோ. தெய்வநாயகம்*

## 1. இயற்கையும் மனிதனும் :-

வானவெளியில் உலகம் இடையறாது காலக்கணிப்புடன் சுழன்று நின்றியங்குவதே இயற்கையின் அடிப்படை. அவ்வியக்கத்திற்கு ஆக்கமும் தேற்றமும் தருவதுபோல அண்டவெளியில் அணுக்களின் செறிந்தவியற்கையாகவும் ஒன்றற்கொன்று மாறுபட்ட தன்மை உடையனவாகவும் நிகழ்வன தட்பமும் வெப்பமும் ஆகும். உலகை மையமாக வைத்து தட்பமும் வெப்பமும் சார்ந்து நிற்பதால் ஒளி நிலையும் ஒளித்திறனும் உலகோடு ஒன்றிக் கலந்து துலங்கும் இயற்கையியல்பு தோன்றியுளது. அத்தோற்றம் அருவமாக நின்றதிலிருந்து உருவமாக புலப்பாடுற்றதே உலகின் மேற்பரப்பில் விளைவுகொண்டு துலங்கும் இயற்கை வளங்களும் கடல்களும் என்ப.

நுண்ணுயிர்த் தன்மையால் நுணுக்கமாகத் தோன்றிய பொருள்கள் தந்நிலையில் காலத்தோடு கணிப்பிட்டு வளர்ந்துள்ளன. அவற்றிலொன்றே அளவிட்ட உருவினுள் ஆருயிர் நின்று இயக்கிய சீவனாகும்.

சீவன்களின் கால வளர்ச்சியின் ஒருகூறு தெளிந்ததாக வளர்ந்தது. அதுவே மானுடம். [1]

## மானுடம் :-

சீவன்களாக உருவாகி உலகெங்கும் வளர்ந்து திரிந்தவற்றைப் பறப்பன. நடப்பன, தத்துவன, நீந்துவன என்று நால்வகைப் பிறப்பென வகுத்தனர் ஆன்றோர்கள். அவற்றுள் நடப்பனவென்பது ஆடு, மாடு, புலி, சிங்கம் போன்ற விலங்கினங்களைக் குறிப்பதாகும்.

விலங்கினங்கள் அனைத்தும் ஒருசில உணர்வுகளின் இயல்பினாலேயே வாழ்கின்றன. அவ்வுணர்வே அறிவு என்று சுட்டிக் கூறப்பட்டது. அறிவியலை சீவராசிகள் அனைத்திடத்தும் கண்ட சான்றோர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து அறிவு ஆறெனப்படுமென்று கணித்தனர். உயிர்களிடத்துப் பொருந்தி, இயற்கையின் கொடையாக இயக்கம் கொண்ட அறிவின் திறனைப் பாகுபடுத்தி, ஓரறிவுயிர், ஈரறிவுயிர் என்ற முறையில், பறவைகள், விலங்குகள் என்ற அளவில் ஐந்தறிவு பெற்ற நிலையிலேயே இயங்கி வாழ்வு மேற்கொண்டுள்ளதை அறிந்து அறுதியிட்டனர். இதனை, உலகியற் பொருள்களின் உயர்த்தன்மைக்காம் அறிவியலை அளவிட்டுக் கண்டுணர்த்திய ஆன்றோர்வழி நின்று கூறும் தொல்காப்பியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மாவும் மாக்களும் ஐயறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**

என்று வரையறை செய்து கூறியுள்ளார். [2]

(மா - பறவைகள், மாக்கள் - விலங்குகள், பிறவும் - வௌவால், ஆமை முதலியன) இவ்வாறு வகுத்துக்கூறிய தொல்காப்பியர் அடுத்துக் கூறியதே ஆறறிவுயிர்களின் அருமைச் சிறப்பாகும்.

உலகில் தோன்றிய சீவன்களுடன் தானும் ஒப்பத் தோன்றும், உயிர்க்குணமாம் அறிவியலில் தேற்றமும் ஏற்றமும் தெளிவும் கண்டது மானுடம் என்னும் மதிப்பமைந்த உருவென்பதனைக் காட்டும் நெறியே அவற்றிற்கமைந்த அருங்குணமாம் அறிவு. அறிவினையும் கூட்டி ஆறறிவு பெற்றது மானுடம் என்று திண்ணிதின் உரைக்குமுகத்தான்.

**"மக்கள் தாமே ஆறறி வுயிரே"**

என்று தேற்றேகாரத்தான் தெளியக் கூறினாரென்ப. [3]

இவ்வாறாக, அறுதியிட்டுக் காண்பதற்கு அமைந்திருந்த புலனுணர்வாம் ஆறாவதறிவினை மனவுணர்வோடு மயக்கி சிந்தித்துத் தெளிந்து செயலாக்கம்கொள்ளும் தேர்வுகொள் மனத்தைப் பெற்றதால் மனிதன் என்ற மாண்புப் பெயரையும் மண்ணுலகிற் பெறுவானாயினன்.

இயற்கையின் இடையே பிறந்து வளர்ந்த மனிதன் அவ்வப்போது இயற்கைகளின் எழுச்சியாகவும், தோற்றமாகவும், துலங்கல்களாகவும் நிகழ்ந்த நிகழ்ச்சிகட்கு இலக்காகி நிற்கும் ஈடுபாட்டின் முதிர்ச்சியாகச் சிந்தித்து அறிந்தது தெய்வீகமெனப்பட்டது.

கால வளர்ச்சியில் இயற்கைகளின் எழிலும், ஆக்கமும், அழிப்பும் தெய்வங்களாகக் கணிப்புப் பெற்று, மனித வடிவின் அடிப்படையில் உருவங்களும் ஆக்கப்பட்டன.

ஆக்கம் பிறப்பாகியது, பிறப்புக்கு பிரமன் தெய்வமானான், அழகிற்குக் காப்பு அமைந்து நின்றது. காப்புக்குத் திருமால் கடவுளானார். அழிப்பு, முளைப்பு, நிலைப்பு, முடிப்பு என்ற நிலைகள் மூன்றும் ஒன்றழிந்து ஒன்றாகி இறுதியில் இயற்கையோடு இயைந்த நிலைபெறுந்திறன் ஈசனாக்கியது. இதனை ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்திறனும் கொண்ட முழுமுதல் என்றனர். [4]

இம்முறையில் இயற்கையின் ஆற்றல்கட்கேற்ப முத்திறக் கடவுளரை மனிதன் ஆக்கிக் கொண்டதோடு, தன் வாழ்வியற் கூறுபாடுகட்கேற்ப பல்வேறுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளரையும், தெய்வங்களையும், தேவதைகளையும் உருவாக்கி முதலாக்கி வைத்து, அவற்றிற்கு உணர்வும் செயலும் உண்டென்று தத்துவங் கண்டு, அவற்றை உயர்வாக்கித் தன்னைத் தணிவாக்கி, வழிபாடு செய்து மனத்தளர்ச்சிக்கு மருந்தாகக் கொண்டு வாழலானான்.

## வீர வழிபாடு :-

இயற்கைச் சுவடுகளையும் இயற்கையால் விளைந்த செயல்களையும் உருவகப்படுத்தி உருவாக்கிய மனிதன், அவற்றிற்கு மனித இனத்திற்கு மேம்பட்ட மதிப்பியல்பு தந்து தெய்வமாக்கினான். அத்துடன் மனிதப் பிறப்பினுள்ளேயே மாண்புறு செயல்களால் மதிக்கப்பெற்ற மானுடனுக்கும் உருவாக்கம் தரலாயினன்.

மக்களைக் காக்கும் மாண்பினாலும், போரில் புறமுதுகிடாது வீரமுடன் போரிட்டு வீழ்ந்த ஆண்மையினாலும் தன்னுயிர் தந்து மண்ணுயிர் காத்த மாவீரர்களையும் தெய்வமாகக் கண்டு வணங்கி, வழிபாடு செய்து, வரம்பெற்று வாழும் மனவமைப்பினை அமைத்துக் கொண்டான். [5]

இத்திறனால் உருவான சின்னங்களே சங்க இலக்கியங்கள் காட்டும் நடுகற்களாகும். கல்லில் அவ்வீரனின் உருவைப் பொறித்து, அடியில் அவனது பீடும் பெயரும் எழுத்தால் பொறித்து ஏற்ற இடத்தில் நட்டு வழிபட்டான்.

இதனை

**"நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"**

எனவும்,

**விழுத்தொடை மறவர் வில்லிடை வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல்"**

எனவும்,

**"விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்**
**நல்நிலை பொறித்த கல்நிலை அதர்"**

எனவும் அகநானூறு தெளிவாகக் குறிப்பிடுகின்றது. [6] இவ்வழிபாட்டு நிலை மனிதப் பிறப்பிற்குரிய ஆண், பெண் இருபாலர்க்குள்ளும் பிறர் செய்யாத செயலாற்றல் செய்து இறந்துபட்டவர்கட்கே உரியதாகி நின்றது. [7]

நடுகற்கள் வீரக்கற்களாயின. வீரக்கற்களுக்குப் பாதுகாவலிட்ட சிற்றில்லங்கள், கல்லைக் கோலியதாக எடுக்கப்பெற்று 'கோயில்' என்ற பெயரால் குறிக்கப்பட்டன. கால வழக்கில் வீரக்கல் கோயில் வீரன் கோயிலாகியது. வீரன் ஐயனானான். வீரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண், பிடாரி, காளி என்ற பெயர்களால் குறிக்கப்பெற்ற தெய்வங்களாக வழங்கப்பெற்றாள். வீர வழிபாட்டின் வழியே காலந்தோறும் மாறுபட்ட பெயர்களுடனும் வடிவங்களுடனும் கிராமங்கள் தோறும் வளர்ச்சியடைந்திருந்த இத் தெய்வங்களைச் சிறு தெய்வங்களென ஆராய்ச்சியாளர்கள் வகை செய்து வைத்தனர். [7]

இயற்கையை முதலிடமாகவும் தோற்றமாகவும் மனிதன் கண்டு உணர்வுடன் உருவாக்கியவை கடவுளர், தெய்வம் என்ற தகுதிகளால் குறிக்கப்பட்டன. இவற்றைப் பெருந் தெய்வங்கள் என்றும் கூறலாம்.

மனிதனாகப் பிறந்து மாண்புறு செயலால் மடிந்தார்க்கு மக்கள் இட்ட நடுகற்களின் வளர்ச்சியால் பல்வேறு தரங்களில் மல்கி உருவாகி நின்ற ஆண், பெண்களுக்கமைந்த வீர உருவங்கள் சிறு தெய்வங்களாயின எனவும் கருத வேண்டியுள்ளது.

## தெய்வ உருவங்கள் :

உலகெங்கனும் மனிதனின் மதிநுட்பத்தாலும் மக்களிடம் திகழ்ந்த புதுமைகளாலும் உருவாக்கப்பட்டதே தெய்வ வடிவங்களாகும். தெய்வ உருவிற்கு இனம் தேடிய ஆய்வின் முதிர்ச்சியாக மனித வடிவே உருவாக்கம் பெற்றது.

மனித வடிவம், நடுகல்லில் வீரனின் உருவை உளி கொண்டு உருவாக்கியதில் முதலில் இடம்பெற்றுளது. நடுகல்லின் ஒருதிறமாகும் வீரக்கல், மாசதிக்கல் ஆகியவற்றில் ஒப்பனைத்திறமும் உளி வண்மையால் கட்டப்பட்டுள்ளதைப் பண்டைய நடுகற்கள் காட்டுகின்றன.

1) வீரக்கல் : வீரனுக்கேற்ற பெருமிதம், முகப்பொலிவு, மிடுக்கு, வரித்துக் கட்டிய ஆடைகள், வீரத்திற்கணியாகும் அணிகலன்கள், கொண்டை, அம்பு, வில் ஆகியவை ஏந்திய கைகள் என்ற அமைப்புடன் அவ்வீரனால் கொல்லப்பட்ட பகைவனது உருவமும் பொறிக்கப்பட்டன.

மேலும் புலிகுத்திப்பட்டான் கல், கரடிக்கல் போன்ற நடுகற்களில் மனிதன் புலி, கரடி போன்ற ஆற்றல் வாய்ந்த விலங்குகளோடு தனித்துப் போராடி அதனையழித்துத் தானும் அழிந்து ஊரைக் காத்த ஒப்பறும் வீரச்செயலைப் பாராட்டும் வண்ணம் அவ்விலங்கொடு அவ்வீரன் போராடும் காட்சி செதுக்கப்பட்டு காணப்படுகிறது. இச்சிற்பங்கள் மனிதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விலங்குகளை ஆற்றலினடிப்படையில் எந்த அளவிற்குப் போற்றியுள்ளான் என்பதனைப் புலப்படுத்துகின்றன.

2) மாசதிக்கல் : இது போரில் முன்னின்று பகைவரை அழித்து, இறந்துபட்ட வீரனுடன் அவனது மனைவி அல்லது மனைவியர் உடன் கட்டையேறுதல் என்னும் உடன் தீப்பாய்தலால் தெய்வத்திறம் பெற்ற உயர்வுக்கு மக்கள் மரியாதை செய்து பக்தியுடன் வழிபடுதற்குச் செய்தமைத்த சிற்பத்திறம் பெற்ற கற்கள் ஆகும். [10]

இக்கற்களில், வீரன் போரிடுவது, பகைவரால் படுவது, மனைவியருடன் வீர சுவர்க்கம் செல்வது, மேல் அவர்கள் தேவர்களால் வழிபடப்பெறுவது என்பன போன்ற காட்சிகள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

போரிடுங்கால் சிற்பி வீரனின் வடிவில் பெருமிதம், சினம், படைகளை ஏவும் திறன் ஆகியவற்றைச் சித்தரித்தல் இச்சிற்பங்களின் இயல்பு.

வீர சுவர்க்கம் மனைவியருடன் செல்லும்போது அழகிய அமைதியான முகப்பொலிவுடன் தேவர்கள் வணங்கும் பாங்கில் வீரனையும் அவனது மனைவியரையும் உருவாக்கிக் காட்டுதல் உண்டு. [11]

## வடிவ வகையும் மாட்சியும் :-

இவ்வாறாக வீரம், சாந்தம், அழகு ஆகிய திறங்களில் வீர வழிபாட்டுக் கற்களில் உருவாக்கப்பட்ட வடிவங்களின் வளர்ச்சியே தெய்வ வடிவங்கட்கும் அடிப்படையாக அமைந்தது.

பிரமன் அமைதியின் வடிவமாகப் பத்மாசனம் இட்டு அமர்ந்த வடிவில் உருவானான். [12]

திருமால் அழகிய வடிவில் ஆடை அணிகலன்களுடன் உருவானான். [13]

சிவன், அழிப்புக்கடவுள் தன்மையனாதலின், சுடலைநீறு பூசி, துடியும் சூலமும் கொண்டு, புலித்தோலணிந்து நிற்கும் காட்சியனாக அமைக்கப்பட்டான். [14]

இவ்வாறே தீமையையும், பகையையும் அழிக்கும் ஆற்றலுக்கு உருவாக்கம் கண்ட கொற்றவையும் காளியும், கோரைப் பற்கள், சுடரிடு முடிகள், சூலாயுதம், வேலாயுதம் ஏந்திய கைகள் ஆகியவற்றுடன் கோர வடிவில் உருவாக்கப்பெற்றனர். [15]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய தெய்வங்களையும் இவ்வடிப்படைக் கொள்கையிலேயே மனிதன் பல்வேறுபட்ட நிலைகளில் ஒப்பனைகளுடன் உருவாக்கியுள்ளான். எனவே, பண்பின் அடிப்படையிலேயே தெய்வ உருவங்கள் கற்பிக்கப்பட்டு அவ்வவற்றின் திறன்களுக்கேற்ற உருவங்களில் உருவாக்கப்பெற்றுள்ளன என்பது புலனாகின்றது.

## கற்பனைக் கலப்பமைந்த தெய்வ வடிவங்கள் :-

மண்ணுலகில் மனிதன் அறிவினால் உயர்ந்த பிறப்பாக அறிவிக்கப் பட்டுள்ளான். ஆனால் ஆறாவது அறிவு படைத்த மனிதனைவிட வலிமையால் உயர்ந்த பறவைகளும், விலங்குகளும் மனிதனைக் கொன்று அழிப்பது பண்டைய மனிதர் கண்ட வாழ்வியல் கூறுபாடாகவே இருந்தது. அக்காலத்தில், பறவையுள் வலிமைமிக்க கழுகும், விலங்கினுள் வலிமைமிக்க சிங்கம், புலி, யானை ஆகிய கொடிய இனங்களும் மனிதர்கட்டுப் பகையாகவே இருந்தன.

மனித இனத்திற்கு அச்சத்தை விளைவித்த பறவைகளும் விலங்குகளும் மனிதன் வணங்கும் தெய்வங்களாக இருந்துள்ளன. [16]

இவ்வாறாக மனிதனுக்கு மேம்பட்ட வலிமையும் திறனும் பெற்ற பறவைகள், விலங்குகள் ஆகியவற்றைப் பெரும்பாலும் வீர தெய்வங்களாகக் கொண்டு வடிவமைத்த மனிதன், வலிமைக்குரிய அங்கங்களை பெற்ற மனித உடலைச் சித்தரித்து, அதன் தலையை மட்டும் மனிதத் தலையாக உருவாக்காமல், தான் கருதிய கழுகு, யானை, புலி, கரடி, சிங்கம் ஆகியவற்றின் தலைகளுடன் உருவாக்கி தெய்வ வடிவாக்கம் கண்டுள்ளான். [17] எகிப்திய நாட்டு 'ஸ்பிங்ஸ்' இம்முறையினைத் தலை மாற்றமாகக் கொண்டு உடல் பகுதி சிங்கத்தைப் போன்றும் தலை எகிப்திய 'பாரோ' முகமாகவும் அமைந்துள்ளது. ஆயினும் இவ்வுருவக் கலப்பு மனிதனை விலங்கொடு இணைத்துப் பெருமை கண்ட வீரப்போற்றலாகவே இருப்பது கருதத்தக்கதாகும்.

தமிழகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள இத்தகைய இனக் கலப்புத் தெய்வ வடிவங்களுள் பிள்ளையார், ஹயக்ரீவர், நந்தி தேவர், சரபம் (சரபமூர்த்தி), நரசிம்மம், சிங்கமுகாசூரன், கஜமுகன் (யானை), ஜாம்பவான் (கரடி), இராகு (பாம்பு), கேது ஆகிய தெய்வ வடிவங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்தகைய மனித உடலில் மாறுபட்ட பறவை, விலங்கு ஆகியவற்றின் தலைகளுடன் உருவாக்கப்பட்ட தெய்வங்கள் வீரத்தின் சின்னங்களாகவே தெய்வீகத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இதனை அறிஞர் மெக்கன்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"An animal, therefore was not feared or worshipped for its own sake, but because it was liable to be possessed by a good or evil sprit"* என விளக்கிடுகின்றார். [18]

இவ்வழிமுறையினைக் கையாளும் கொள்கையுடன் பண்டைய மனிதன் சாந்தம், அன்பு, அமைதி, கருணை, அறிவு ஆகிய பண்பியல்புகட்கு இலக்காகக் காட்டிய தெய்வங்கட்டு, மனிதனுடன் மாறுபடாது இணைந்து வாழும் உயிரினங்களை இணைத்துக் காட்டி நிறுவியுளான்.

அவை,

கிளித் தலை - சுகபிர்மம் (துறவி) சாந்தம்
குதிரைத் தலை - அசுவத்தாமா (யோகி) அறிவு
காலைத் தலை - இடபதேவர் (பக்தி) அன்பு
மான் தலை - ருஷியசிருங்கர் (ஆச்சாரியன்) கருணை

ஆகிய வடிவங்களேயாம்.

இத்தகைய முறையில் வீரத்திற்கும் வெற்றிக்கும் சின்னங்களாகவே பாபிலோனியரும், ரோமானியரும், எகிப்தியரும் காளை, சிங்கம், கழுகு ஆகிய தலைகளுடன் வீரர்களையும் மன்னர்களையும் உருவாக்கி தெய்வமாகவும் வணங்க முற்பட்டுள்ளனர்.

இவ்வாறாக, விலங்கு, பறவை ஆகியவற்றின் தலையை மட்டும் புனைந்த நிலையில் இந்தியரும் வெளிநாட்டவரும் தெய்வ உருவங்களை அமைத்ததினின்றும் ஓர் புதினமாகவும், பொருள் நிறைந்ததாகவும், தத்துவம் கொண்டதாகவும், காட்சிக்கு மாட்சிமை பொருந்தியதாகவும் இந்தியாவில் அன்று வாழ்ந்த அறிஞருள் தெய்வத்திறத்திற்கு இலக்கணம் கண்ட சான்றோர்கள் இரு புதிய படைப் புருவங்களை ஆக்கி வைத்துள்ளனர்.

## கற்பகமும், காமதேனும் :-

மக்களாயினார் நெறி பிறழாது உயர்தவமியற்றின் இந்திரபோகங்களை அனுபவிப்பதற்குரிய தேவராகி வானுலகு சென்று கற்பகம், காமதேனு ஆகிய தெய்வீகங்களினால் விரும்பிய சுகம் பெறுவர் என்று புராணங்களில் விளக்கம் செய்தனர்.

அவ் விளக்கங்கட்கு உருவமைத்த சிற்பியர் கற்பகம் என்பது கேட்டதைக் கொடுக்கும் தெய்வ மரமாகக் காணும் வகையில் அழகிய மரமொன்றினைக் கற்களில் பொறித்துக் காட்டினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமதேனுவென்பது, முத்திறப் பிறப்பாகக் கொண்டு தலையுடன் மார்பளவும் அழகிய தெய்வப் பெண்ணுருவும், உடல் பால்வளம் தரும் பசுவாகவும், வால் பன்னிறங்களுடன் பார்ப்பவரைக் கவரும் மயில் தோகையாகவும் ஆக்கிப் படைத்ததுடன், அத்தெய்வப் பசுவிற்குப் பறக்கும் திறனையும் கூட்டியதாக இருபுறமும் இறக்கைகளையும் அழகுடன் அமைத்து வழங்கினர். [19]

இவ்வாறாக ஈதலுக்கும் அருளுக்கும் இலக்காகக் கற்பகமும் காமதேனுவும் கற்பனைக்குச் சிற்பியற்கு இலக்காகி உருப்பெற்று விளங்குகின்றன.

## தாவர தெய்வங்கள் :-

புல், பூண்டு, மரம் ஆகிய தாவர இனங்களையும் மனிதன் தெய்வமாகக் கண்டுள்ளான். மக்கள் மாசற்ற உள்ளத்தையும் மருவற்ற வாழ்க்கையையும் நோயற்ற உடலையும் பெறுவதற்கு மருந்தாகி நின்ற தாவரங்களைப் பேணிக்காக்கும் பெருஞ் சிறப்புடன் தெய்வ நலம் அவற்றின்பால் கற்பித்து வழிபட்டும் பாதுகாத்தும் பயன்பெற்றும் வந்துள்ளனர். [20]

ஆயுள் வளர்க்கும் அறுகம்புல்லும், நோய்கள் பல நீக்கும் துளசிச் செடியும், வளம்பல நல்கும் அரசும் வேம்பும் தெய்வத் தாவரங்களாக விளங்கின.

இவ்வாறு மனித வாழ்விற்கு மருந்தாகி நின்ற மரங்களும், பயனாகி நின்ற மரங்களும் ஊரிலுள்ள கோயில்களில் பொதுநிலையில் வைத்துக் காக்கப்பட்டதன் வளர்ச்சியே அவைகள் தல மரங்களாயின எனக் கூறலாம்.

அவற்றுள், மா, பலா, வாழை, வில்வம், வாகை, வேம்பு, மூங்கில் ஆகிய மர வகைகள் தமிழகமெங்கும் தல விருட்சங்களாகி நிற்பது யாவரும் கண்டறியும் உண்மையேயாகும்.

## தெய்வங்களும் வாகனங்களும் :-

தமிழகத்தில் வளர்ச்சியடைந்துள்ள தெய்வங்களுள் முப்பெருந் தெய்வங்கள் முதன்மை பெற்றுள்ளன. அவை பிரமன், திருமால், சிவன் என்பனவாகும். இவற்றைச் சார்ந்த நிலையில் சிவன், பிரமன், திருமால் ஆகியோரின் படைத்தல், காத்தல் தொழில்களையும் கொண்ட திறனால் ஈசன் என்றும், முழுமுதல் கடவுள் என்றும் கூறப்பெற்றார். படைப்பு உலகவியலுக்கு ஒருங்காகி நிற்பதால், காத்தலைத் தம்பால் காட்டும் திறனாக அறிவோர்கள் திருமாலையும் சிவனையும் இணைத்து ஒருருவாக்கி சங்கர நாராயணன் என்று பெயரிட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறமைந்த கடவுளர்கட்கு ஏற்புடைய ஆற்றல் காட்டப்பட்டதற்குரிய இலச்சினையாகவும், பண்டைய மனிதன் இடம்விட்டு இடம்பெயர ஏறிச்சென்ற விலங்கினங்களின்மீது கொண்ட ஈடுபாட்டுடன் தாம் கண்ட தெய்வங்கட்கும் ஊர்திகள் அமைத்து உருவாக்கி மகிழ்ந்துள்ளான்.

அவ்வழக்குத் தொடர்ந்து புராண இதிகாசங்களில் விளக்கமுற்று ஆகமங்களில் அடைவுமுறை பெற்றுள்ளன. அவற்றைக் கொண்டே தெய்வங்கட்கு வாகனங்கள் அமைத்து வழிபடும் செயல் பக்திநெறியுடன் வழிபாட்டு வழக்கில் வளர்ச்சி பெற்றுள்ளது.

சிவன் : வல்லமை பெற்ற முழுமுதற் கடவுளாதலின் காளை சிவனுக்கு வாகனமாயிற்று.

திருமால் : காத்தற் கடவுளாகவும் அழகின் திருவாகவும் விளங்கியதற்கொப்ப கருடன் என்னும் பறவை வாகனமாயிற்று.

பிரமன் : படைத்தற் கடவுளாதலின் அமைதியும் அறிவும் நிரம்பிய அன்னம் வாகனமாயிற்று.

கொற்றவை : வெற்றிக்கு தெய்வமாக விளங்கியதால் சிங்கம் வாகனமாயிற்று.

இவ்வாறே உமைக்கு மான், கிளி ஆகியவையும் முருகனுக்கு யானை, மயில் ஆகியவையும் வாகனங்களாயின. இவ்வாறு தெய்வங்களின் திறங்கட்கு ஏற்புடைய ஊர்திகள் அமைத்து வழிபட்டு வளர்ச்சி செய்வித்த அறிவியலறிஞர்களின் திறனால் உருவான வாகனங்கள் சமயங்களின் சார்பில் வளர்ச்சியடைந்துள்ளன.

## திருவிழாக்கள் :-

பக்திநெறியினைப் பண்ணமைந்த பாடல்களால் நாடெங்கும் தலயாத்திரை செய்து பரப்பிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர்களின் காலங்கட்கு முன்னரே, தெய்வங்கட்கு விழாவெடுக்கும் சிறப்பு தொடர்ந்து வந்திருப்பதை அவர்களின் தேவாரப் பாடல்கள் தெளிவு செய்கின்றன. [21]

விழாக்கள் ஆண்டிற்குரிய பன்னிரண்டு திங்கள்களிலும் நிகழ்ந்துள்ளன வாயினும் மக்கள் பயிர்செய்து பயன் கண்டு ஓய்வு காணும் மாசி, பங்குனி, சித்திரை ஆகிய முப்பெரும் மாதங்களிலேயே சிறந்த விழாக்களை கோயில்களில் அமைத்து வழிபட்டுள்ளனர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 28 நாள் விழாவெனக் குறித்திடும் இந்திர விழா இளவேனிற் காலத்திலேயே கொண்டாடப்பட்டுள்ளது என்பதனை

**'சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென'**

என்ற தொடராலும் [22]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மேலோர் விழைய விழாக்கோளெடுத்த**
**நாளேழ் நாளினும்"** [23]

என்ற தொடராலும் அறியமுடிகின்றது.

## வீதியுலா :-

கோயிலில் இடம்பெற்ற தெய்வத்தை வீதிகள்தோறும் எழுந்தருளச் செய்யும் விழாவே வீதியுலாவாகும். வீதியுலாவினை மூன்று நாள், ஏழு நாள், பத்து நாள் என்ற முறைமையில் நிகழ கோயில்களின் வருவாய்கட்கும் செல்வர்களின் உதவிகட்கும் ஏற்ப அரசரும், மக்களும் அக்காலத்திலேயே வரையறை செய்து வழக்காக்கி உள்ளனர்.

ஒரு தெய்வத்திற்குப் பத்துநாள் திருவிழா அமைந்ததாயின் பத்து நாளும் வெவ்வேறு ஊர்திகளில் அத் தெய்வத்திற்குரிய செப்புத் திருமேனியினை மலர்களாலும் மணிகளாலும் ஒப்பனை செய்து காட்சிக்கு அமுதமாக வீதியுலா வரச் செய்தல் வழக்காகியுளது.

சிவன், திருமால், காளி, மாரி, ஐயனார், பிடாரி, வீரன் ஆகிய தெய்வங்கட்கு, கிராமங்களிலும் நகரங்களிலும் வீதியுலாக் காட்சிகள் பகலிலும் இரவிலும் நிகழ்ந்து வருவதைக் காண்கின்றோம்.

## சிவனும் - வாகனங்களும் :-

ஓர் ஊரிலுள்ள சிவன்கோயிலில் மாசி மாதத் திருவிழா மகத்திற்குப் பத்துநாள் முன்னதாகத் தொடங்கி பத்துநாளும் பத்து வகை நிகழ்ச்சிகளாக நிகழ்கின்றது.

சிவன் வீதியுலா வரும் வாகனங்களில் உமாதேவி ஒருங்கிருந்த பாங்கிலும், தனித்துவரும் பாங்கிலும் உலா நிகழ்தலுண்டு.

அதுபோது பொதுவாக இரதம், தேர், சப்பரம், பல்லக்கு ஆகியவற்றில் சுவாமியும் அம்மனும் வீதியுலா வருவதை ஊர்திகள் என்று கொள்ளவியலாது. பல்லக்கினை ஆள்கள் சுமந்து வருவர். தேரினை வடமிட்டு பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஈர்த்து வருவர்.

எனவே, இம்முறையிலில்லாமல், சிவன் கோயில்கட்கென்றும், சிவன் உமாதேவிக்குரியதென்றும் ஆகமங்களும் சமய வழக்கும் கற்பித்தபடி வாகனங்களில் வீதியுலாவினை அமைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறமைந்த சிவன்கோயில் வாகனங்களுள் இடப வாகனமே முதன்மை பெறுவதாகும். தொடர்ந்து குதிரை, யானை, அன்னம், கிளி, சிம்மம், யாளி, காமதேனு ஆகிய வாகனங்களில் உமையும் சிவனும் ஒருங்கேயமர்ந்து உலா வருதல் வழக்காகவுளது. [24]

## திருமாலும் – வாகனங்களும் :-

காத்தல் கடவுளாகிய திருமாலுக்கமைந்த கோயில்களிலும் மாத விழாக்கள் நிகழ்கின்றன. அவற்றுள் சித்திரைப் பெருவிழா 14 நாட்கள் நிகழும் ஸ்ரீ வில்லிப்புத்தூர் போன்ற வைணவத் தலங்களும் உள்ளன. தஞ்சை வெண்ணாற்றங்கரை நீலமேகப் பெருமாள் கோயில், மணிகுன்னப் பெருமாள் கோயில், வீரநரசிம்மர் கோயில் ஆகிய வைணவக் கோயில்களில் வேனிற்கால வசந்த உற்சவங்கள் 10 நாள் விழாவாக நடைபெற்று வருகிறது. திருமால், தாயாரெனும் இலக்குமியுடன் வீதியுலா வருதற்கு நாளும் ஒரு வாகனம் நயந்துள்ளனர். கருடன், அனுமன், சேடன், குதிரை, யானை, அன்னம் ஆகிய வாகனங்களுடன் யாளி, பத்மம் ஆகியவற்றையும் வாகனமாகக் கொண்டு திருமகளும் நிலமகளும் இருபுறமும் வீற்றிருக்க திருமால் உலா வருவர். [25]

இவ்வாகனங்களுள் திருமாலுக்குரிய சிறந்த வாகனம் கருடவாகனமேயாகும். சிவனுக்குரிய சிறந்த வாகனம் இடபமாகும். முதல் மூன்று பெரிய தெய்வங்களுள் பிறப்புக்குரிய நான்முகன் என்னும் பிரமன், திருமாலின் உந்தியிலிருந்து தோன்றிய தாமரை மலரையே இடமாகக் கொண்டதினால், பிரமனுக்கு வாகனம் தனித்து அமையாமல் தாமரை இருக்கையில் பத்மாசனமிட்டு அமர்ந்துள்ள நிலையே நிலைபெற்றுள்ளது. அன்னப்பறவையும் வாகனமாயிற்று.

முப்பெருந் தெய்வங்களாகிய இவர்கட்குரிய தேவியர்க்கும் தனிச் சிறப்புடன் வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிவனின் தேவியாகிய உமைக்கு இடபம் சிறந்த வாகனம்.

திருமாலின் தேவியாகிய திருமகளுக்கு பத்மம் சிறந்த பீடம். இரு யானைகள் சிறந்த வாகனம். [26]

பிரமன் தேவியாகிய கலைமகளுக்கு அன்னம் சிறந்த வாகனம்.

இவையன்றி சிவன், திருமால், உமை ஆகிய தெய்வங்கள் உலகில் அன்பர்களையும் ஆருயிர்களையும் அறத்தையும் தவத்தையும், அரசையும் காக்கும் பொருட்டு அவரவர் வேண்டிய வடிவிலும், தாம் தாம் விரும்பிய வடிவிலும் அவதாரம் செய்தபோது, போர் குறித்தும், பெருமிதம் குறித்தும் இத்தெய்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் பல்வேறு திருவுருவமெடுத்ததோடு பல்வேறு வாகனங்களையும் உடையாராகத் தோன்றியுள்ளமையைச் சிவ, விஷ்ணு புராணங்கள் கூறுகின்றன. [27]

சிவன் பூத வாகனமேறியுள்ளார். திருமால் அனுமனை வாகனமாகக் கொண்டும் ஆதிசேடனை வாகனமாகக் கொண்டும் பல திரு அவதாரங்கள் செய்துள்ளார். உமாதேவி அரக்கரை அழிக்குமுகத்தான் போரிடுவதற்கு சிங்க வாகனத்தைச் சிறப்பாகக் கொண்டுள்ளார்.

இவ்வகையே, அவதாரத்திற்கேற்புடையதாக தெய்வங்கள் அவ்வப்போது அமைத்துக்கொண்ட தெய்வத்தன்மை பொருந்திய வாகனங்கள் பலவாக உள்ளதைப் புராணங்களில் காணமுடிகின்றது.

அம்முறையினாலேயே சிவத் தலங்கள், திருமால் தலங்கள் ஆகியவற்றில் ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழும் பெருந் திருவிழாக்களில் இறைவன் இறைவியுடன் உலா வரும் காட்சியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனங்களில் திருமேனிகள் அலங்கரிக்கப்பெற்று வருதலைக் காண்கின்றோம். இவ்வமைப்புக்குரிய நியதிகளை, காமிகாகமம் சிறப்பாக வகுத்தளிப்பதாக அர்ச்சகர்கள் நியதி கூறுவர்.

இவ்வரையறையினாலும், அன்பர்களின் விருப்பத்தினாலும் தெய்வங்கள் அமர்ந்து வரும் விழாக்கால ஊர்திகளாகும் வாகனங்களை வகுத்துக் கூறலாகும்.

## சிவன் கோயில் விழாக்களில் :-

இடபம் - முதன்மை
யானை - இராவதம்
பூதம்
சிம்மம்
குதிரை
அன்னம் - உமைக்கு முதன்மை
காமதேனு

ஆகிய வாகனங்கள் விலங்குகளாகவும் மனிதரினும் ஆற்றலும் உடலும் பெற்ற பூதமாகவும் அமைந்துள்ளன.

இவையன்றி வாகனங்கள் என்னும் பெயர் வழக்குடன் இருக்கையமைப்புகளும் சிவபெருமானின் திருவிளையாடல்களின் திறங்களுக்கு இலச்சினைகளாக உலாக் காலங்களில் இடம்பெறுகின்றன. அவை,

சூரியன்
சந்திரன்
மேரு - (மலை)
கைலாயம் - (பூதகணம் சூழ) (இராவணன் கீழே மலையினைத் தூக்குவது போல இருக்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை

குறுந்த மரம் - (தக்கணாமூர்த்தம்)

சிம்மாசனம்

இரத்தின பீடம்

ஆகியன.

இரதம்

சப்பரம்

தேர்

ஆகிய ஊர்திகள் சிவன் கோயில் விழாக்களில் இடம்பெற்றுள்ளன.

உமாதேவிக்குரிய வாகனங்களில் இடபமே முதன்மை பெறுவதாயினும், சிங்க வாகனம், உமை, சக்தியின் முதன்மையாதலின் அதற்குரிய தகுதியுள்ள வாகனமாக அமைந்துள்ளது. மற்றும் உமாதேவி அமர்ந்துவரும் வாகனங்கள் -

கிளி

அன்னம்

மான்

காமதேனு

என்பனவாகவும் இருப்பதனை உலாக் காலங்களில் தனித்து உலா வரும் உமாதேவியின் திருக்கோலத்தாற் காணலாகும்.

## திருமால் தலங்களில் - விழாக்கால வாகனங்கள் :-

திருமாலுக்குரிய வாகனம் கருடனேயாகும். இதனாலேயே திருமாலுக்கு அமைந்த ஆயிரம் பெயர்களுள் ஒன்று கருடவாகனன் என்பதுமாகும். கருடன் தெய்வ நலமும் வலிமையும் பெற்ற பருந்தினமாகும். [28]

இவ்வாகனத்துடன் திருமால் அமர்ந்து உலாவரும் வாகனங்கள் -

அனுமன்

ஆதிசேடன் (பாம்பு)

யானை

குதிரை

அன்னம்

ஆகியவைகளாகும். திருமகளாகும் தாயார் அமர்ந்து வரும் வாகனம் தனித்து இல்லையாயினும், கோயில்களில் சிறப்பாக நவராத்திரி காலங்களில் தாயார் உலா வரும்போது,

தாமரை

அன்னம்

ஆகிய இரண்டும் வாகனங்களாக இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, தமிழகத்தில் சிவன் கோயில்களிலும், திருமால் கோயில்களிலும் இடம்பெற்றுள்ள வாகனங்களைக் கொண்டு பாகுபடுத்தி அறிவோமாயின் அவை பறவை, விலங்கு ஆகிய உயிரின வகைகளாகவும் தாவர வகைகளாகவும் மலை, பீடம் போன்ற பொருள் நிலை வகைகளாகவும் அமைந்திருப்பதை அறிய முடிகின்றது.

## சிறு தெய்வ வாகனங்கள் :-

கிராமம் பழமையானது. மக்கள் முதற்கண் சேர்ந்து வாழ்ந்த இடம் கிராமமேயாகும். கால வழக்கில் கிராமம் வளர்ந்து ஊராகியது. ஊர் வளர்ச்சிபெற்று பேரூராகியுளது.

கிராமங்கட்கு உரியதாகப் பண்டைய மக்கள் அமைந்து வழிபட்ட தெய்வ நிலையங்கள், மேடைகள், கோயில்கள் யாவும் தொன்மைக் காலத்தே மக்கள் மாண்புடன் வழிபட்ட நடுகல், வீரக்கல், மாசதிக்கல் ஆகியவற்றின் வளர்ச்சியாகவும் மக்களது நாகரிகப் போக்கிற்கு இலக்காகி மாற்றுருப் பெற்ற எழுச்சியாகவும் இருக்கின்றனவெனலாம்.

இக்கணிப்புடன் சிறு தெய்வங்கள் என்ற படைப்பில் மக்கள் வழிபடும் தெய்வங்கள், வீரன், மாடன், சங்கிலி, ஐயனார், காத்தவராயன், கருப்பு, பதினெட்டாம்படி கருப்புசாமி என்பன போன்ற ஆண் தெய்வங்களும்,

பிடாரி, காளி, உருத்திரமாகாளி, பச்சைக்காளி, பவழக்காளி, ஆங்காரக்காளி, பெரியாச்சி, குந்தவைநாச்சி, வீரபத்ரகாளி, அங்காள அம்மன், செல்லியம்மன் ஆகிய பெண் தெய்வங்களும் கிராம தெய்வங்களாக வணங்கப்பட்டுள்ளன.

நகரங்களிலும், பேரூர்களிலும் இத்தகைய சிறு தெய்வ வழிபாடுகள் இன்றும் இடம்பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இன்றைய பேரூர்கள் முன்னொரு காலத்தில் கிராமங்களாகத் தோன்றியிருந்தவையேயென்பது வெளிப்படை. எனவே, அன்று மக்கள் வழிபட்ட சிறு தெய்வங்கள் இன்றும் நிலைபெற்று மக்களால் வழிபாடு செய்யப்பெறுவது மக்களின் நாகரிக வளர்ச்சி நிலையில் ஒரு கூறுபாடென்றே கூறலாகும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏதோ ஒரு நிகழ்ச்சியை, தெய்விக நிகழ்ச்சியைக் கொண்டு அதற்குரிய தெய்வம் அமைக்கப்பட்டு மக்களால் கொண்டாடப் பெறுகின்றது.

ஓரூரில் கிராம தேவதை அருஞ்சுனை காத்த ஐயனார் என்றால் மற்றோரூரில் அஞ்சுவட்டத்தம்மன் கிராம தேவதையாகவுளது. இப்படியே சிறப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்களுடன் அமைந்த தெய்வங்களுள் ஒவ்வொன்று ஒவ்வோரூரில் முதன்மையான கிராம தெய்வமாக வணங்கப்படுவதை தமிழகமெங்கும் காணமுடிகின்றது. கிராம தெய்வங்களே சிறு தெய்வங்கள் எனப்படும். அவற்றுள் ஐயனார் பொதுவாக எல்லா கிராமங்களிலும் ஊர்களிலும் இடம்பெற்றுள்ளார். ஐயனார் சிவ அம்சம் பெற்றவரென்றும், அரி அயன் கூட்டம்சம் பெற்றவரென்றும் புராணங்கள் கூறும்.

## ஐயனார் - வாகனங்கள் :-

ஐயனாருக்குரிய வாகனங்களுள் குதிரை வாகனம் சிறப்பிடத்தைப் பெறுவதாகும். ஐயனார் வீர வழிபாட்டு வழிமுறையில் சிறப்பிடம் பெற்றவராகவே கிராமங்கள்தோறும் நிறுவப்பட்டுள்ளார். இவரை குதிரை வீரர் என்றும் கூறுவர். இவரது வாகனங்கள் -

குதிரை
யானை
காளை
புலி

ஆகியனவாகும்.

ஐயனார் கோயில்கட்கு முன்னர் இவரது வாகனங்களில் குதிரையும் யானையும் செங்கல் கதை வேலைப்பாட்டில் பெரிய வடிவில் செய்து நிறுத்தப்பட்டுள்ளதை எங்கும் காணலாகும். இவரை சிவகுமாரருள் ஒருவர் என்னும் புராண வழக்கினால் அருகிய நிலையில் ஒவ்வோரிடங்களில் காளை வாகனத்தையும் அமைத்துள்ளனர்.

## பைரவர் :-

சமயங்கள் பலவாகும். அவற்றுள் கபாலிகம் என்பது சிவ வழிபாட்டில் ஒரு புதிய பிரிவாகப் பிற்காலத்தில் தோன்றி சோழர் காலத்தில் வளர்ந்துள்ளது.[29] கபாலிகர்கள் ஆடையின்றி உடல் முழுதும் சாம்பல் பூசி, திரிசூலமும் மண்டை ஓடும் மனித எலும்பு மாலையும் கொண்டு திரிபவர். இவர்கள் உருவாக்கிய தெய்வம் கபால தேவதை எனும் பைரவ தெய்வமாகும். இத் தெய்வத்தினைக் கிராம தேவதைகளுள் சிறந்ததாகவும் கொண்டிருந்தனர். பைரவருக்குரிய வாகனம் நாய் என்னும் பிராணியாகும். பைரவரின் வாகனமாக இருப்பதால் இப்பிராணியின் பெயரும் பைரவர் என்று வழங்கப்பட்டது.

## பிடாரியார் :-

பிடாகை என்ற இடப்பெயர் கல்வெட்டுக்களில் கூறப்படுவதாகும். பிடாகை என்றால் சிற்றூர். பெரிய நகரைச் சார்ந்துள்ள சிற்றூர் என்றும் கூறப்பெறும். சிற்றூரினைக் கிராமம் என்றும் குறிக்கலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றூராகிய பிடாகையின் காவல்தெய்வம் பிடாரியாகும். தமிழக வழக்கில் சத்தியின் வடிவே முதன்மைபெறும். மக்கள் வழக்கு என்பதை இலங்கை அரசன் இராவணன் தன் நகர் காவலுக்கு பெண் அரக்கியரைக் காவல் வைத்திருந்ததைக் கூறும் இராமாயணத்தால் அறியலாகும்.[30] எனவே பெண் தெய்வங்கள் தமிழர் வழக்கில் கிராமக் காவல் தெய்வங்களாகி வழக்குற்றன.

## பிடாரியாரின் வாகனங்கள் :-

சிம்மம் - சிங்கமுகம் வலிய தோற்றம் யாளி முகம்
குதிரை
(பேய்)

பெரும்பான்மையும் சிம்மம் அல்லது யாளி வாகனமே தமிழக வழக்கில் பிடாரியாரின் வாகனங்களாக இருந்து வருகின்றன.

## மாரியம்மன் :-

கிராம காவல் தெய்வம் பெண் தெய்வமாக இருப்பதுடன் குடி காக்கும் தெய்வமாக ஒவ்வொரு ஊரிலும் கிராமத்திலும் மாரியம்மன் கோயில் கொண்டுள்ளதைத் தமிழகம் முழுவதும் காணலாகும். கொங்கு நாட்டிலும், பாண்டி நாட்டிலும் இவ்வம்மனை பல்வேறு பெயர்களுடன் பெருவழக்காக வழிபட்டு வருவதனைக் காணமுடிகின்றது. இவ்வம்மன் குடி காத்தாள், செல்லாயி, மாரி, மகமாயி, மஞ்சளாடையாள், வேப்பிலை மாலையாள், வேம்படி ஆத்தாள், செல்லி அம்மன் என்ற முறையிலும் இன்னும் பற்பல காரணப் பெயர்களுடனும் ஆங்காங்கே விளங்குகின்ற தெய்வமாகும். மாரியம்மனுக்கு விருப்பமான வாகனம் யாளி வாகனமே என்பர். மற்றும்

யாளி
சிம்மம்
அன்னம்
இடபம்

ஆகிய வாகனங்களும் மாரியம்மனுக்குரிய வாகனங்களாக இருந்து வருகின்றன. மாரி என்றால் மழை. மழையைப் பெய்வித்து நாட்டில் வெப்பத்தைத் தணித்து மக்களைக் காக்கும் தெய்வமாதலின் மாரியாத்தாள், மாரி அம்மன் என்ற பெயர்களை முதன்மையாகப் பெற்ற தெய்வமாகத் திகழ்வதுடன், சிவ அம்சம் பெற்ற உமாதேவியின் ஓர் அவதாரம் தாயன்பின் தனி உருவம் என்பதாலேயே உமைக்குரிய இடபம் இத்தெய்வத்திற்கும் வாகனமாகக் கொள்ளப்பெற்ற வழக்கு விழாக்களில் இடம்பெற்றுளது. தஞ்சை, வலம்புரி, வேளூரின் கிராம தேவதையாகத் திகழும் குந்தாளம்மனுக்கு யாளி வாகனமே சிறப்புறக் கொள்ளப்படுகின்றது. இனி ஏனைய தெய்வங்கட்கும், தேவர்கட்கும் உரிய வாகனங்களைப் பற்றி வழக்கில் உள்ள அளவில் கூறலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரன் :-

இந்திரனுடைய வாகனம் ஐராவதம் என்னும் வெள்ளையானையாகும். இதற்குரிய தந்தங்கள் பக்கத்திற்கு ஆயிரம் என்பர். ஆயின் கஜ சாஸ்திரத்தில் பக்கத்திற்கு நான்கு தந்தங்கள் என்ற குறிப்பேயுள்ளது. [31]

## துர்க்கை (கொற்றவை) :-

வெற்றிக்குரிய பெண் தெய்வமாக வீரர்களால் வணங்கப்பட்டு சமயச் சார்பில் வளர்ச்சியடைந்து சிவன் கோயில்களில் தெய்வ மாடங்களிலும் தனித்தும் இடம்பெற்றுள்ள இத்தெய்வம், மகிடாசூரன் என்னும் எருமை மாட்டுத் தலையுடன் கூடிய அசுரனைக் கொன்று மக்களைக் காத்ததினால் மகிஷாசுரவர்த்தனி என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கும் தெய்வமாகும். [32] இக்கருத்திற்கேற்ப இத்தெய்வம் அவ்வசுரனின் தலைமேல் நிற்பதாகவும், அவ்வசுரனையே அடக்கி வாகனமாகக் கொண்டதாகவும் புராணங்கள் கூறும். எனவே இவருக்கமைந்த வாகனங்கள் -

*சிங்கம் - (மகாபலிபுர துர்க்கை)*

*மகிடாசூரன் - (பதாமி குகைச் சிற்பம்)*

ஆகிய இரண்டும் சிறப்பிடம் பெற, பொதுமையில் துர்க்கை உமா தேவியின் திரு அவதாரங்களில் ஒன்றாதலின் இடபமும் உலாக் காலங்களில் வாகனமாக இருப்பதை அறிய முடிகின்றது.

## முருகன் :-

சிவன் அருளிய மகனார்கள் இருவர். மூத்தவர் விநாயகர். இளையவர் முருகன். முருகன் அழகன். முருகன் தமிழக தெய்வ வழிபாட்டால், சிவன் கோயில்களில் உள்வாயில் வலது பக்கம் உறைபவன். தனிக் கோயிலிலும் இடம் கொண்டுள்ள தமிழ்க் கடவுள். முருகனைப் பற்றி பத்துப்பாட்டின் முதல் பாட்டாம் திருமுருகாற்றுப்படை நன்கு கூறும். முருகனுக்குரிய வாகனங்களுள் பிணிமுகம் என்ற பெயருடைய யானையே முதன்மையும் பழமையும் பெற்றதாகும். [33]

இரண்டாவதாக சூரனை வென்று கொன்றபோது அவனுடல் முருகன் வேலால் இரண்டாகப் பிளக்கப்பட்டது. இருவேறாகிய கூறுகளுள் ஒன்று சேவலாகியது. மற்றொன்று மயிலாகியது. முருகன் மயிலை வாகனமாகக் கொண்டு, சேவலைக் கொடிமீது கொண்டமர்ந்தான் என்பதும் தமிழிலக்கியச் செய்தியாகும். [34] இதனால் முருகனுக்குரிய வாகனம் மயில் ஆகும். பழமையான முருகனுக்கு யானை வாகனமாயினும் கந்தபுராண வழக்கு மிகுதியால் மயில் வாகனமே கோயில் விழாக்களில் சிறப்பாகக் கையாளப் பெறலாயிற்று. எனவே முருகனுக்குரிய வாகனங்களுள் சிறந்தன -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிணிமுகம் (யானை)
2. மயில் (சூரன்)

என்னும் இரண்டுமாகும். மற்றும் முருகன் சிவகுமாரனும் வீரனும் ஆதலின் இடப வாகனமும் ஏறி உலா வருதலை சுவாமிமலை போன்ற தலங்களில் காணமுடிகின்றது. குதிரையில் ஏறி முருகன் சூரசம்ஹாரம் செய்தலை இன்று விழாவில் நிகழ்த்துவதால் குதிரை வாகனமும், சூரனை அடக்கியதற்கு, இலச்சினையாக சூர வாகனமும் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே முருகனுக்குரிய வாகனங்கள் -

1. பிணிமுகம்
2. மயில்
3. குதிரை
4. இடபம்
5. சூரன்

என்ற அளவில் தமிழக வழக்கில் கோயில் விழாக்களில் இடம்பெற்றுள்ளன வென்பதை அறியமுடிகின்றது.

## மயிலின் இருநிலை :-

முருகனுக்குரிய மயில் வாகனத்தின் பார்வைப் பக்க அமைப்பு இரு வகைப்படும். ஒன்று முருகனின் வலக்கைப்புறம் தலையும் இடப்புறம் தோகையும் உள்ளவாறு அமைக்கப்படும் மயிலாகும்.

மற்றொன்று இடப்புறம் தலையும் வலப்புறம் தோகையும் உள்ள மயிலாகும். இவ்வாறு இரு வகைத் தோற்றத்தில் மயில் வாகனம் முருகனுக்கு அமைக்கப் பெற்றுள்ளதற்கமைந்த நிலையினை ஆங்காங்கே உள்ள சிலைகளைக் கொண்டு ஆராய்வோமானால் -

வலக்கைப்புறம் தலையுள்ள மயில் வாகனம் பாலமுருகனுக்கும் வள்ளியுடன் அமைந்த குமரனுக்குமே அமைக்கப்பட்டுள்ளதையும், சண்முகனாக முருகன் விளங்கியதற்குரிய தத்துவ வடிவிற்கு இடப்புறம் தலையுடைய மயில் வாகனம் அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாகும். இதற்கு ஏற்ற சான்றெனக் குன்றக்குடி சண்முகனது மயில் வாகனம் காணப்படுகிறது.[35]

## விநாயகர் :-

இவர் சிவகுமாரருள் மூத்தவர். யானை முகம் படைத்த தெய்வம். இவருக்கு கணேசர் என்ற திருநாமமும் உண்டு. இவருக்குரியதாக ஆகமம் கற்பித்திருக்கும் வடிவம் யானை முகம். அதற்கேற்ற பருத்த தொந்தியும் கை கால்களும் (மனித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவில்) உடைய குள்ளமான ஆனால் பருத்த வடிவம். இவ்வளவு பெரிய வடிவமுள்ள தெய்வம் அமர்ந்து வருவது, மூஷிகம் என்னும் மூஞ்சூறு வாகனமாகும். மூஞ்சூறு எளிய, சிறிய, கொடுமையில்லாத, அச்சம் தராத சிறு பிராணியாகும். வீடுகளில் இப்பிராணி எலிகட்குரிய இடங்களில் தங்கி வாழும் இயல்புடையது. உள்ளங் கைக்குள் பிடித்தடக்கும் உருவ அளவுடையது.

இவ்வளவு சிறிய உருவமுள்ள மூஞ்சூறு, யானை போன்ற வடிவுடைய விநாயகருக்கு வாகனமாகக் கொள்ளப்பட்டுள்ளது. மூஞ்சூறு வாகனத்தை நாட்டு வழக்கில் "பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனனே" என்று மாற்றிக் கூறியும் வழிபடுவர். ஆதலின் மூஞ்சூறுக்குப் பதில் பெருச்சாளியைப் பிள்ளையார் வாகனமென வழிபடும் முறையும் உருவாகியுளது.

## தெய்வப் பெருமையும் எளிமையும் :-

தமிழக தெய்வ வழக்கு நெறியில் கோயில் எதுவாயினும் முதலில் இடம்பெறும் பெருமையுடைய தெய்வம் விநாயகராகவே அமைக்கப்பட்டுளது. வீதி உலாவில் சிவனும் உமையும் வருவாரானால், முதலில் விநாயகர் திருமேனியே செல்லும். சிவன் கோயில் தேர்கள் பலவாயினும் முதலில் வீதி வலம் வருவது விநாயகர் தேரேயாகும். இதனை குடந்தை கும்பேசுவரர் மாசிமகத் தேர் விழாவில் காணலாகும்.

யார் எந்தக் காரியம் தொடங்கினாலும் விநாயகர் வழிபாடு செய்த பின்னரே யாவும் தொடரப் பெறுகின்றது. வைகறையில் கோயில் நாள் நடைமுறைத் தொடக்கம் விநாயகர் வழிபாட்டிலிருந்தே தொடங்குகின்றது.

இத்தகைய ஆகம சாஸ்திர தெய்விக நியதிகளால் விநாயகர் தெய்வ வழிபாட்டிலும் மக்கள் வாழ்வியல் நெறிகளிலும் முதலிடம் பெற்று உயர்வுடன் விளங்குகின்றார்.

இந்நிலையிலேயே அரிச்சுவடி படிக்கும் பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகளின் படிப்புக்கு முதல் வணக்கமாகப் பாடி வணங்கப்பெறும் எளிமையும் விநாயகருக்கே உரியதாக இருக்கின்றது.

மற்றும் விநாயகர் திருக்கோயில்களில் உயர்விடங்களிலும் தெருக்கோடியில் திட்டின்மீதும் ஆற்றங்கரை, குளத்தங்கரை அரசமரத்தடியிலும் சுடுகாட்டு வழியிலும் தரிசிலும் எளிய நிலையில் அமைக்கப்பட்டு மக்களால் உயர்ந்த மதிப்பில் இடம்பெற்று விளங்குகின்றார்.

இத்தகு அற்புத தெய்வத் தன்மைக்குரிய சான்றாகவே எளிய மூஞ்சூறு வாகனமாக அவருக்கு இருப்பதைத் தத்துவமாகக் கற்பித்து வடிவமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்லவர் விநாயகராதலின் எளிய எலிக்கும் தெய்விகம் தந்து ஏறிச் சென்று அருள்பாலிக்கும் தெய்வமாக விளங்குகின்றார். எனவே இவரது வாகனம் -

1. மூஷிகம் (மூஞ்சுறு)
2. பெருச்சாளி

என அழைக்கப்பட்டுள்ளதெனலாகும்.

## அடிக்குறிப்புகள்

1. *Darvinism, outlines of Zoology, M. Ekambaranatha Ayyar, Revised Edu,Madras, 1964. First Edn. 1954, pp 695 - 697*
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா எண் **32.**
3. மேலன. நூற்பா எண் **33.**
4. சிவஞானபோதம் முதல் நூற்பா,
   "அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
   தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
   அந்தமாதி என்மனார் புலவர்"
5. செங்கம் நடுகற்கள். கல்வெட்டியல், பக். **152.**
6. அகநானூறு, பாடல் எண்கள் : **67, 53, 179**
7. பன்னிரு பாட்டியல், நூற்பா எண் : **198**
8. *Stephen Inglish, A Village Art of South India, p - 62*
9. கல்வெட்டியல், பக் **152**
10. தஞ்சை பனகல் கட்டிடத்தின் கிழக்குப்புறத்தே இத்தகைய மாசதிக்கல் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதனை மராட்டியர் காலத்ததாகக் கொளற்கிடமுண்டு.
11. திருச்சோற்றுத்துறையில் இத்தகைய நடுகல் ஒன்றுள்ளது.
12. *Elements of Hindu Iconography, Vol.II, Part - II, p - 372.*
13. *Ibid, Vol.I, Part - I, p - 80*
14. *Ibid, Vol.I, Part - I, p - 375*
15. *Ibid, p - 295*
16. *Mackenzie A Donald, Egyptian Myth and Legend, p - 63 (I.M.L)*
17. *Mackenzie A. Donald, Myths of create and pre-Hellenic Europe, p Int. XXXII(M.P.H.E.)*
18. *Casson Lionel ,Ancient Egypt, pp. 71 - 73*
19. இக்காமதேனு வாகனம் சிவன் கோயில்களின் அம்பாள் புறப்பாட்டிற்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
20. *A Village Art of South India, pp. 60 - 65*
21. தேவாரம். பாடல் எண் : **123**
22. சிலம்பு **5 : 64**
23. மேகலை **1 : 7 - 8**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கரந்தை வசிட்டேசுவரர் கோயிலின் திருவிழா வைகாசி மாதத்தில் விசாக நக்ஷத்திரத்தில் திகழ்கிறது. பலவிடங்களில் சித்திரை மாதத்தில் நிகழ்கிறது.
25. தஞ்சை வெண்ணாற்றங்கரை நீலமேகப் பெருமாள் கோயில் திருவிழா இவ்வண்ணம் அமைந்துள்ளது.
26. இரு யானைகளுடன் கூடிய திருமகளின் திருவுருவினை 'கஜலட்சுமி' என வழங்குவர்.
27. விஷ்ணுபுராணம், பக் 165
28. M.P.H.E. Int. XIVII
29. *Nilakanta Sastry, K.A., Colas, p - 642*
30. கம்பராமாயணம், சுந்தரகாண்டம், ஊர்தேடு படலம், பாடல்கள் 180 - 191
31. கஜ சாஸ்திரம், பக் 8.
32. *Elements of Hindu Iconography, Vol.I. Part - II p. 345 - 346*
33. திருமுருகாற்றுப்படை வரி - 247
34. மேலன வரிகள் 210 - 11
35. பார்க்க படம் எண் : 49


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# தேர்த் திருவிழா
# இறைவனுக்குரிய ராஜோபசாரம்

*பேராசிரியர், கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்,*
முன்னைநாள் இந்துநாகரிகப் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்.

இறைவனின் உறைவிடம் கோவில் எனப் பிரசித்தமான பெயர் பெற்றது. கோ என்பதற்கு அரசன் என்று பொருள் உண்டு. இல் என்றால் வீடு எனப் பொருள்படும். கோவில் என்பது அரசன் வசிக்கும் மாளிகை. அரசனைத் தெய்வமாகப் போற்றும் பாரம்பரியம் நெடுங்காலமாக இந்துப் பண்பாட்டில் நிலவி வருவது. எல்லாத் தெய்வங்களின் அமிசங்கள் திரண்டு உருப்பெற்றதன் விளைவு அரசன் என மூல நூல்கள் கூறும், அரசன் தெய்வம் என்ற இரு நிலைகளும் வேறுபாடு இன்றி நெருங்கி ஒற்றுமை பெற்றதன் விளைவை கோயில் என்ற பிரயோகம் தெளிவாகக் காட்டுகின்றது.

உபசாரங்கள் பெரியவர்களுக்குச் செய்யும் உயரிய மரியாதையாகும். அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ப மரியாதை செலுத்தும் மரபு இன்றும் எம்மிடை நிலவி வருகின்றது. தெய்வத்திற்குச் செய்யும் உபசாரம் தேவோபசாரம், அரசருக்குச் செய்யும் உபசாரம் ராஜோபசாரம். சந்தனம், மலர், தூபம், தீபம், நைவேத்தியம் என்ற ஐந்தும் அடிப்படைகளான தேவோபசாரங்கள். இவை 16 ஆக விரிந்து ஷோடசோப சாரங்கள் எனப்படுகின்றன.

அரசனுக்குச் செய்யும் உபசாரங்கள் பல. இவற்றை அரசன் கொலுவீற்றிருக்கும் வேளை நிகழ்ந்ததாக நூல்கள் வருணிக்கின்றன. ஆஸ்தான மண்டபத்தில் அரசன் சிங்காசனத்தில் கொலுவீற்றிருப்பது அரச மரியாதைகளில் முதன்மையானது. அவனைச் சுற்றிப் பணியாளர் பலர் பலவகை உபசாரங்களைச் சமர்ப்பிப்பர். இவற்றுள் முக்கியமானவை சாமரை இரட்டல், குடை பிடித்தல், ஆலவட்டம் ஏந்தி நிற்றல் முதலியன. அரசன் பவனி வருதல், வரும்பொழுது நெற்பொரி, மலர் தூவுதல், குதிரை ரத கஜ பதாதி அணிவகுப்புகள், யானை, ஒட்டகம் முதலியன முன் செல்ல அரசன் பவனிவருதல் தனிச்சிறப்பு வாய்ந்து அரசனின் பெருமதிப்பை வெளிப்படுத்தி நிற்பன. இவ்வகை உபசாரங்களில் முக்கியமானது அரசன் தேரில் பவனிவருதல். போருக்குப் புறப்படும் வேளையும் வேட்டையாடும் வேளைகளிலும் அரசனுக்கு தேர், குதிரை ஆகியன ஊர்திகளாக அமைந்தன. இன்று இதுவரை கூறப்பட்ட ராஜோபசாரங்கள் தேரில் பவனி வருதல் உட்பட கோயிலில் எழுந்தருளியிருக்கும் கோவாகிய இறைவனுக்கு நிகழக் காண்கின்றோம். கோயில்களில் நிகழும் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் யாவுமே ராஜோபசாரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையக் காண்கின்றோம். மாலைகளால் வகைவகையான அணிகலங்களால் தங்க வைர கிரீடங்களால் அணிசெய்தல், பலவகை ஊர்திகளில் - வாகனங்களில் - பவனி வரும்படி எழுந்தருளச் செய்தல் யாவுமே ராஜோபசாரங்கள். இவ்வாறு நிகழும் ராஜோபசாரங்கள் மரபு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு விரியலாயின. இம் மரபை விபரித்துக் கூறுவன ஆகமங்கள்.

இவ்வகை உபசார வரிசைகளுள் ஒன்றாயமைவதும், தலை சிறந்ததும் தேர்த் திருவிழாவாகும். பிரமோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா ஆலயங்களில் நடைபெறும். பிரமோற்சவத்தில் நிகழும் விழாக்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது தேர்த்திருவிழா. தேர் அரசர்களால் போரில் பெரிதும் உபயோகிக்கப்பட்டதைப் பழைய காலத்துப் போர்முறைகளின் வருணனைகளிலிருந்துதெரிந்துகொள்ளலாம். குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் பெரும் ஊர்தியாகிய இரு பொருத்தமான சில்லுகள் இரதத்தை இயங்க வைப்பன. குதிரைகளைச் செலுத்தியும் சாரதி தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருப்பான். அரசன் தேரின் நடுவில் கம்பீரமாக இருந்து போர் நிகழ்த்துவான். போரே அரசனின் வீரத்தைப் பிரகடனம் செய்யும் நிகழ்ச்சி. போரில் ஈட்டும் வெற்றியே அரசன் வீரத்தை, பெருமை, புகழை உயர்த்திக்காட்டும்.

அரசனே கண்கண்ட தெய்வம். தெய்வம் அரசனெனப் போற்றற்குரியது என்று அரசனுக்கும் தெய்வத்திற்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படை நிலையில் கோயில் வழிபாட்டு முறை இராஜோபசாரங்களை கோயில்களில் இடம்பெறச் செய்தது. வீரத்தினால் சிறப்பு மிகும் அரசனைப் போன்று தெய்வமும் வீரம் மிக்க தோற்றமும் பொலிவும் பெற உருவானதில் வியப்பெதுவுமில்லை. அட்டவீரட்டங்கள் இறைவனின் எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்த இடங்கள், முப்புரங்களை எரித்தது. காமனைக் காய்ந்தது, காலனை உதைத்தது, அந்தகனை அழித்தது முதலான எட்டு வீர நிகழ்ச்சிகள் நிகழ்ந்த எட்டுப் பெருந்தலங்கள் சிவபிரானைத் தலைசிறந்த வீரனாகச் சித்திரிக்கக் காண்கின்றோம். சிவபிரானினின்றும் அபின்னமான முருகன் ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு தோற்றும் பொழுது அவன் பன்னிரு திருக்கரங்களும் தலைசிறந்த வீரனுக்குரிய சின்னங்களையும் படைக்கலங்களையும் தாங்கி நிற்கக் காண்கின்றோம்.

இதுவரை கூறிய கருத்துக்களை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது தேரில் இறைவனை எழுந்தருளுவித்து விழா எடுப்பதன் காரணம் தெளிவாகும். முன்னர் கூறியவாறு தேரமைப்பிலும் மரபு, வழிகளை வகுத்து வரையறை செய்கின்றது. தேர் இவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகமங்களும் சிற்பநூல்களும் வரைவு காண்கின்றன. தேர் அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் என்றே சொல்லலாம். கோயில் கருவறைபோல் விமானம் தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில் மிகுந்து விளங்குவது கவனிக்கற்பாலது. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கும்பொழுது கோவில்கள் கூட தேரின் அமைப்பை ஏற்று இருபாகங்களிலும் பெரும் சில்லுகள் பொருந்தியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரைகளால் இழுக்கப்படும் நிலையில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கோயில்களில் விமானங்களில் இறைவன் வீரச் செயல்களையும் கோலங்களையும் சித்திரங்களையும் இடம்பெறச் செய்திருப்பது போன்று, தேரின் அடித்தளம் அதாவது சில்லிலிருந்து பீடம் வரையுள்ள பகுதிகளை, 3 தளங்களாகவோ 5 தளங்களாகவோ வசதிக்கேற்பப் பிரித்து ஒவ்வொரு தளத்திலும், இறைவன் திருவருட் கோலங்களையும், பெருமைகளும், வீரச் செயல்களையும் சித்தரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

சிவபிரான் நிகழ்த்திய அட்ட வீரட்டங்களில் முப்புரங்களையெரித்த நிகழ்ச்சி திரிபுர தகனமெனப்படும். இத்திரிபுர தகனத்திற்காக இறைவன் புறப்பட்ட கோலாகலமான வைபவத்தை புராணங்கள் வருணிக்கக் காணலாம். உலகமே தேர்; வாசுகி நாண்; சூரிய சந்திரர்கள் இரு சில்லுகள்; நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள்; பிரமன் சாரதி; மேரு வில்; விஷ்ணு வில்லிலிருந்து விடுபட்டு அரக்கர்களை அழிக்கும் அம்பு. தன்னிலேதான் அரக்கர்களின் அழிவு நிகழப் போவதையிட்டு விஷ்ணு இறுமாப்பெய்தினார். இவ்விறுமாப்பு இறைவனுக்குப் பெரும் சிரிப்பை ஊட்டியது. இச்சிரிப்பு அட்டஹாஸம் எனப்படும். இச்சிரிப்பின் வலிமை முப்புரங்களையும் சாம்பராக்கியது. இங்கு இறைவன் தேரில் போருக்காக இவர்ந்ததும் தேரின் அமைப்பு பற்றிய வருணனையும் தெளிவாகக் காணலாம்.

தேர்ச் சில்லிலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங்கள் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம் வரை ஆண்டுதோறும் விழாவின்போது தடி, கம்பு முதலியவற்றாலும் பல கலைநுட்பம் வாய்ந்த பொருட்களாலும் கட்டிக் கோயில் அமைப்பினைக் கொண்ட விமானம் தூபி முதலியன விளங்கச் செய்வதும் மரபு.

திருவாரூர்த் தேரழகு என்ற மொழி பிரசித்தமானது. இந்தியாவில் பிரசித்தமான ஆலயங்களில் எல்லாம் தேர் இவ்வாறே பீடம் வரை சித்திரவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு மேல்வேலை, மேற்கூறியவாறு பல வண்ணத் துணிகளாலும் பல நுட்பமான பொருட்களாலும் அமைக்கப்படுவதை அங்கு காணலாம். இதைத் தேர் என்று சொல்வது மரபு. மேல்வேலையையும், வருடந்தோறும் கட்டி அமைக்காது நிரந்தரமாகச் சிற்பநுட்பங்களுடன் செய்யும் வழக்கத்தை இலங்கையில் உள்ள கோயில்களில் கூட்டு வேலைப்பாடுகளுடன் தேரைக் கட்டி எழுப்புவதுண்டு. மேல் வேலையையும் மரத்தினால் சித்திரவேலைத் திறமை நிரந்தரமாக மிளிரும் அமைப்பைக் கொண்ட இவ்வகை யூர்தியை இரதம் என்று சொல்லுவது மரபில் வந்துவிட்டது. பழனி, திருப்பதி போன்ற தலங்களில் தங்க இரதங்களில், வெள்ளி இரதங்களில் இறைவன் பவனிவரக் காணலாம்.

தேரில் வீற்றிருந்து சகல உபசாரங்களுடன் பவனிவரும் தெய்வத்தைத் தரிசித்தல் இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன்தரும் என நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# இலங்கையில் விஸ்வகர்மா

## – விரிவான வரலாற்றுப் பார்வை –

*பூ. ம. செல்லத்துரை*

சமஸ்கிரதம் வடமொழி ஆரியர் மொழி. இது ஆரம்பமொழி. திராவிட மொழிக்கெல்லாம் முந்திய மொழி எனச் சிலர் கூறிப் பெருமைப்படுவதுண்டு. ஏட்டிலும் வரைந்து ஏற்றம் செய்திருக்கின்றார்கள். பல தமிழ் பண்டிதர்களும் நுனிப்புல் மேய்ந்து அவற்றை ஒத்தூதி இருக்கின்றார்கள். பாவம் தமிழ் பண்டிதர்கள் தாங்களும் படித்தவர்கள் என்பதற்காகவும் உண்மையைக் கண்டறிய விருப்பமில்லாததாலோ அல்லது சோம்பல் தனத்தாலோ ஆய்வென்னும் நிலைக்குத் தங்களை ஆட்படுத்தாது அரைத்த மாவையே அரைத்துக் கொண்டு காலத்தைக் கழித்தார்கள். "எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற வான்மறை தந்த வள்ளுவன் வாக்கை மறந்து துறந்து வாய்க்கு வந்தவாறு எல்லாம் வாழ்த்திப் போற்றியிருக்கின்றார்கள்.

நாமாவது நம் வான்மறை தந்த வள்ளுவரை ஏற்று அவர் காணச் சொன்ன மெய்ப்பொருளை காண்போம். முதலில் சமஸ்கிரதம் ஆரிய மொழியா? என்பதை அலசிப் பார்ப்போம். சமஸ்கிரதம் என்றால் செம்மை செய்யப்பட்ட மொழி என்பது பொருளாகும்.

இந்த மொழியை வடக்கே வாழ்ந்த ஒரு மக்கள் குழுவினர் பேசி வந்தார்கள். வருகின்றார்கள். எனவே சமஸ்கிரதம் அவர்களின் தாய்மொழியா? அல்ல தத்துப்பிள்ளையா? என்பதே நாம் கண்டறிய வேண்டிய உண்மை! மெய்ப்பொருளாகும்.

முப்பதிற்கு மேற்பட்ட சமஸ்கிரத நூல்களை எழுதி சமஸ்கிரதம் தான் மொழிகளின் தாய் எனக்கூறி ஐரோப்பா எங்கும் தவறான கருத்துக்களைப் பரப்பியவர் மாக்ஸ்முல்லராவார். இவர் நூல்களைப் படித்தறிந்த பல அறிஞர்கள் பல தவறான மொழி ஆய்வுகளேயே செய்து அறிவித்தார்கள். எனினும் மாக்ஸ்முல்லர் தன் கடைசிக் காலத்தில் உண்மையைக் கண்டறிந்தார். அவர் பின்வருமாறு தன் டயறியில் குறித்து வைத்தார். "நான் நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருக்கும்போது அதிர்ச்சியூட்டும் பல செய்திகள் கிடைத்தன. அவை உண்மையானவை என்றும் தெரிந்துகொண்டேன்" "சமஸ்கிரதம் ஒரு செய்யப்பட்ட மொழி என்றும், அதனிலும் அறப் பழைமையான தமிழ்மொழியே இந்திய மொழிகளின் தாய்மொழி" என்றும் அறிந்தேன். ஆனால் என் வயோதிபமும் நோயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய்த தவறுகளைத் தவறு என்று கூறவும் உலகுக்குத் தமிழின் பழமையை அறிமுகம் செய்யவும் இடங்கொடுக்கவில்லை. ஒரு குற்றவாளி நெஞ்சுடன் இருக்கின்றேன். இக்கருத்தை உள்ளடக்கிய ஒரு பதிப்பு வெளிவந்தது. இரண்டாம் பதிப்பை வெளிவராமல் தடுத்துவிட்டார்கள். இருந்தாலும் உண்மையை மூட உலை மூடி கிடைக்கவில்லை. எனவே யார் சமஸ்கிரதத்தைத் தூக்கி நாவிலும் தோளிலும் காவி உலகெல்லாம் பறைசாற்றினாரே இந்த மாக்ஸ்முல்லரே மிகமிகப் பழைமையான மொழி தமிழ் என ஒத்துக்கொண்டார். அவர் கணிப்புப் பிழை என்பதையும் சமஸ்கிரதம் தமிழைவிடப் பிந்திய மொழி என மொழிந்துவிட்டார்.

வட இந்தியாவில் அன்று வழங்கிவந்த தமிழும் தென்னிந்தியாவில் வழங்கிவந்த தமிழும் சற்று வேறுபட்டிருந்தபடியால் இரு பகுதியினரையும் இணைக்க வடஇந்தியாவில் திரிந்து வழங்கப்பட்ட பேச்சுத் தமிழை அப்படியே எடுத்துக் கொண்டு தமிழின் இலக்கணக் கூறுகளை இணைத்து ஒரு இணைப்பு மொழி செய்தனர். இம்முயற்சியில் ஈடுபட்டோர் வட இந்தியாவை ஆண்ட குப்த மன்னர்களும் பல்லவ மன்னர்களும் சங்ககால இறுதியில் பாண்டிய மன்னர்களுமாவர்கள். தொடக்க காலத்தில் இது தமிழாகவே இருந்தது.

வரருசி என்பவர் சற்று மாற்றி இலக்கணம் செய்தார். அவரைத் தொடர்ந்து பாணினி காலம் ஏற்பட்டது. இக்காலத்தில் கிரேக்கப் படையெடுப்புகளும் ஆட்சியும் வட இந்தியாவில் ஏற்பட்டது. இதனால் சொற்களால் தமிழாக இருக்கும் சமஸ்கிரதம் இலக்கணத்தால் சறுக்கி கிரேக்கமாக மாறிவிட்டது எனப் பன்மொழி அறிஞர் சாத்தூர் சேகரம் தான் எழுதிய இடைக்காலத் தமிழ் என்னும் நூலில் பக்கம் 45 இல் கூறியுள்ளார்.

சமஸ்கிரதம் தமிழிலிருந்து செய்யப்பட்ட மொழி. வேத மொழிச் சொற்கள் தமிழ் இலக்கணம் கிரேக்க சாயல். எனவே ஆரியமொழியல்ல.

"ஆரியரல்லாதவர்களுடைய கலைப் படைப்புகளும் கருத்துப்பாடுகளும் தொழில் நுட்பங்களும் சமஸ்கிரதத்தில் காணக்கிடைக்கின்றன. ஆனால் வேத இலக்கியத்தில் இது காணப்படவில்லை. இதனால் ஆரியரல்லாத பழங்கால மக்களின் சிந்தனைகளும், கருத்துக்களும், பழங்கதைகளும் (Legends) திராவிடர்களின் இலக்கியங்களில் நிறையக் கிடைக்கின்றன. இவை ஆகமங்களையும் வேதங்களையும் விடப் பழைமையும் வேறுபாடுமுடையனவாகத் திகழ்கின்றன. மறைமொழிகள் ஆகமங்களில் அடங்கவில்லை" என அறிஞர் கலாநிதி ஆனந்த குமாரசாமி கூறுகின்றார்.

இக்கூற்றை ஆராயப்புகின் பல உண்மைகள் உலகத்திற்குக் கிடைக்கும். ஆரியர்கள் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு நாடோடிகளாகத் திரிந்தவர்கள். நிலையான வாழ்க்கை வாழச் சூழ்நிலை இடந்தரவில்லை. அவர்கள் கூடாரத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர்கள். மந்தைகளுக்கான புல் முடிந்தது. கூடாரத்தை எடுத்துக் கொண்டு வேறு புல்லுள்ள இடந்தேடி நகர்வர்கள். எனவே இவர்களிடம் தொழில் கட்டிடக்கலை வளரவும் வாழவும் எந்தவிதமான சூழ்நிலையும் ஏற்பட வசதி இல்லை என கலாநிதி ஆனந்த குமாரசாமி எடுத்துக்காட்டுவது சிறப்பான உண்மையாகும்.

சமஸ்கிரத மொழியை வளர்த்தவர்களும் ஆக்கியவர்களும் நாகர்களில் ஒரு பகுதியரான கைத்தொழில் வல்லோர்களான விஸ்வகர்ம மக்களாகும். இவர்களே வேத மக்களாவர். அவர்களே வேதங்களை ஆக்கியவர்கள். கட்டிடக்கலை தொழில் நுட்பங்கள், சிற்ப சாத்திரம், ஓவியங்களை, வைத்தியம் போன்ற அருங்கலைகள் வளர்த்தவர்கள். அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புக்களையும், தொழில் நுட்பங்களையும் மாற்றினத்தவர் அறியாதவாறு தன் சந்ததியினர் அறியக்கூடிய வகையில் தங்கள் குலத்தின் தொழில்சார் மொழியாக, மறைமொழியாக சமஸ்கிரதத்தைக் கையாண்டு வந்தார்கள். இன்றும் விஸ்வகர்ம மக்கள் சம்மந்தமான வரலாற்று உண்மைகள் அனைத்தும் சமஸ்கிரத நூல்களில் சுலோகங்களாகவுண்டு.

விஸ்வகர்ம ரிஷிகளுக்குப் பூப்பறித்துக் கொடுத்துத் தொண்டு செய்து கொண்டிருந்தவர் வியாசராவார். அவர் கலையில் வல்ல விஸ்வகர்ம ரிஷிகள் ஓதும் மந்திரங்களையும் சுலோகங்களையும் கேட்டுக் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டார். வியாசர் நல்ல ஞாபகசக்தி வாய்ந்தவர். ஞாபகசக்தியின் வல்லமையாலும் அடக்கத்தாலும் விஸ்வகர்ம ரிஷிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றுச் சமஸ்கிரத மொழியைக் கற்றார். ஆனால் எழுத்தை அவர் கற்றுக் கொள்ளவில்லை. அதனால் தான் ஆரியரிடம் எழுத்து வடிவமில்லாத மொழியாக இருந்துவந்தது. சமஸ்கிரதத்துக்குரிய வரிவடிவு நாகர்களே அமைத்துக் கொடுத்தார்கள் என பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் கூறியுள்ளார்.

"இந்து மதம் ஆரியர் மதமல்ல". இது சம்மந்தமான அறிஞர் சார்லஸ் எலியட் கூறுவதைப் பார்ப்போம். "இந்து மதம் இந்திய மதம் என்பதை திராவிட சமயம் எனக் கூறுவது மிகப் பொருந்தும். பக்கம் சாராமல் நடுநின்று பார்க்கில் இந்த உண்மை விளங்கும். ஆரியர்கள் வாழும் பாரசீகத்திலோ அல்லது கிரேக்கத்திலோ இந்த சமய நெறிகள் கிடையாது. எனவே திராவிடர்களின் சமயத்தைக் கற்றுத் தமதாக்கிக் கொண்டார்கள். இக்கருத்தை அறிஞர் சடாஜியும் கலாநிதி ராதாகிருஷ்ணனும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

எனவே இந்து சமயம் திராவிட சமயம். சமய அடையாளங்களான விபூதி, உருத்திராட்சைமாலை, பூநூல், திலகமெல்லாம் திராவிடக் கலாசாரச் சின்னங்கள். தங்கள் வயிறு வளர்ப்புக்காகத் திராவிடர்களின் கலையும் கலாசாரத்தையும் தமதாக்கிக் கொண்டுள்ளார்கள் ஆரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பூசை புனக்கார விதிகள், சமயம் சம்பந்தமான தத்துவங்கள் எல்லாம் அன்று ஆச்சாரிகளால் வரிவடிவில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. இந்த நூல்களின் சொந்தக்காரரர்கள் அவற்றை ஆக்கியவர்கள் தங்கள் பெயர்களை கோபாலாச்சாரி கிருஷ்ணாச்சாரி போன்று ஆச்சாரி என்று பெயரின் இறுதியில் வரக் கூடியதாகப் பெயர்களை வைக்கத் தொடங்கினார்கள். இதை விஸ்வகர்ம மக்கள் நீதி மன்றங்களில் வழக்காடித் தடுத்துமிருக்கின்றார்கள்.

அன்று தொடக்கம் இன்று வரை விஸ்வகர்ம மக்களே ஆலயங்கள் அமைப்பதும் சிற்ப வேலை செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள். சிற்ப சாஸ்திரமும் கட்டிடக் கலை நூல்களும் சமஸ்கிரதத்தில் இருக்கின்றன. இந்தத் தொழில் நுட்பத்தின் மூல புருஷர்கள் விஸ்வகர்ம மக்கள். ஆரியர்கள் அல்ல. எனவே இந்த மொழி விஸ்வகர்ம மக்களின் மறைமொழி. தொழில்சார் மொழி என்பது உறுதி.

இன்று வடமொழியிலுள்ள நூல்களைக் கொண்டு அவை அனைத்தையும் ஆரிய நாகரிகத்தின் பெருமையைக் காட்டுவதாகக் கொள்ளக்கூடாது. இதற்கு மாறாக அக்காலத்தில் இருந்த மக்களின் நாகரிக வாழ்வில் கண்டவற்றைக் கருத்தாகப் போற்றிப் பற்பல நூல்களாக ஆக்கிய முயற்சியின் சிறப்பைப் போற்றவேண்டும். இவ்வாறு எழுத்து வடிவில் பல நூல்களைப் பெற்று வடமொழி சிறப்பு எய்தியபின் இருந்த திராவிட அறிஞர்களும் அம்மொழியைக் கற்று தம் சாதனையையும் அம்மொழியிலே எழுதி வளமாக்கினர்கள் என பேராசிரியர் மு. வரதராசன் அவர்கள் தான் எழுதிய மொழி வரலாற்றில் கூறுகின்றார்.

சமஸ்கிரத மொழியை தம் மறை மொழியாகவும் தொழில் சார் மொழியாகவும் கையாண்டு வந்த ஆச்சாரிமார் பல்லிடங்கட்கு பிரிந்து சென்றாலும் வியாசருடைய கதைகளை நம்பி அரசர்கள் ஆச்சாரிமார் பார்த்துவந்த இராசகுரு, பூசகர் போன்ற பதவிகளை வியாசரின் சந்ததிக்கு வழங்கியதால் ஆத்திரமும் அவமானமும் அடைந்த ஆச்சாரிமார் நாடுகளை விட்டகன்றதாலும் அவர்கள் தொழிலின்றி கஷ்டப்பட்டதாலும் கல்வியை இழந்தார்கள். பல தொல்லைகட்டு ஆளானார்கள். இன்றும் சிறப்பாச்சாரிமார் அனைவரும் சமஸ்கிரதம் கற்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆலயக் கட்டடங்களை சிற்பம் சம்பமந்தமான சகல கலை நுட்பங்களும் சமஸ்கிரதத்தில் தானிருக்கின்றது. எனவே வடபகுதியில் வாழ்ந்த கைத்தொழில் வல்லவர்களான நாகர்களான விஸ்வகர்ம மக்களின் மறைமொழி தொழில் சார் மொழியாகும். ஆரியர்கள் இதை ஆச்சாரிமாரிடமிருந்து தத்தெடுத்துக் கொண்டார்களே ஒழிய இது அவர்களின் சொந்த மொழியல்ல. இன்றும் சிற்பாச்சாரிமார்களும் தவசிமார்களும் சமஸ்கிரதத்தைத் தம் தாய்மொழியாகவே கொண்டுள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகமடைந்த திராவிடப் பண்டிதர்கள் சமஸ்கிரதத்தை தேவ நாகரிக எழுத்தில் எழுதியதோடு கல்வி அறிவில்லாத மக்களுக்கும் படிப்பித்தனர் என மாக்ஸ்முல்லர் கூறுகின்றார். இந்தியாவைத் தவிர உலகின் வேறு எந்தப் பாகத்திலும் வாழும் ஆரியர்கள் சமஸ்கிரதத்தை அறிந்துதெரிந்து புரிந்தவர்களாக இல்லை. சமஸ்கிரதத்தில் விஸ்வகர்ம சம்மந்தமான விடயங்களும் நுணுக்கங்களும் சமய சம்மந்தமான விடயங்களும் நிறைய உண்டு. ஆரியர்கள் இந்திரனை வழிபடுகின்றவர்கள். அப்படிப்பட்டவர்கள் விஸ்வகர்ம மக்கள் சம்மந்தமான வரலாறுகளை தொழில் நுட்பங்களை தங்கள் மொழியில் எழுதிப் பாதுகாப்பார்களா? இல்லை. எனவேதான் சமஸ்கிரதம் ஆரியர் மொழியல்ல ஆசாரிமார் மொழியாகும்.

ஆரியரின் சூழ்ச்சியால் அரசர்கள் ஆசாரிமாரை அவமானப்படுத்தியதால் நாட்டைவிட்டு ஆசாரிமார்களின் குருமாரும் கற்றோரும் சென்றுவிட்டதால் மற்றவர்கள் மொழியைப் பாதுகாக்காததால் மொழியைத் தாம் ஏற்று ஆரியர் தமதாக்கினார்கள். உண்மையில் சமஸ்கிரதம் அவர்கள் மொழியல்ல.

## பெரு – மெச்சிக்கோ வாழ் மயேரிஸ் மக்கள்

இலங்கை மாந்தையில் வாழ்ந்த மயன் பரம்பரைக்கு விமானம் செய்யவும், கப்பல் கட்டவும், மின்சாரத்தையும் காந்தத்தையும் தொழில்படுத்தும் திறமையைப் பெற்றிருந்தார்கள் என்பதை ரொனாட் ரெனைட் என்பவரும் பேர்குசன் என்பவரும் எழுதிய இலங்கைச் சரித்திரம் கூறுகிறது. இராவணன் வைத்திருந்த வானவூர்தியும், குபேரனிடமிருந்த புஷ்பவிமானமும் மாந்தை வாசிகளான விஸ்வகர்மாவாலும் மயனாலும் செய்யப்பட்டவை என இராமாயணம் காட்டுகிறது.

எனவே மாந்தைவாசிகளிடம் விமானங்களும், கப்பல்களும் இருந்தன என்பது உறுதி. சடுதியாக ஏற்பட்ட விபத்திலிருந்து தப்ப விமானங்களையும், கப்பல்களையும் அவர்கள் பாவித்திருக்கலாம்.

விமானத்தில் சென்றவர்கள் விரைவாக வெகுதூரம் சென்று குடியேறி இருக்கலாம். அவ்வாறு சென்ற மயன் சந்ததியினரே அமெரிக்காவில் பெரு - மெச்சிக்கோவில் குடியமர்ந்த இலங்கையராகும்.

அவர்தான் அமெரிக்காவின் மூத்த முதல் குடியினர் என்பது கடலோடியான கொலம்பஸின் கண்டுபிடிப்பிலிருந்து அறிந்து, தெரிந்து, புரிந்துகொள்ளலாம்.

கொலம்பஸ் செவ்விந்தியர் என்றும், வரலாற்றாசிரியர்கள் மயோரிஸ் மக்கள் என்றும் அழைப்பவர்கள் வேறுயாருமல்ல. மாந்தையில் வாழ்ந்த மயன் பரம்பரையே ஆகும். மயன் மக்களை மயோரிஸ் என ஆங்கிலேயர் வழங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கலால் எழுதிய (Hindu America) "இந்து அமெரிக்கா" என்னும் நூலில் பின்வரும் முக்கிய தடயங்கள் தரப்படுகின்றது.

1. இம்மக்கள் சர்ப்ப - லிங்க வழிபாடு உடையவர்கள்.
2. மொழி - தமிழைப் போன்ற ஒட்டுமொழி
3. ஸ்வர ஆட்சி முறை
4. பெரு - மெச்சிக்கோ பகுதிகளில் பெரிய நாக கோயில்களும், சிவாலயங்களும் உண்டு.
5. தேவதைகட்கு கன்னிமாரைப் பலியிடும் வழக்கமுடையவர்கள்.
6. தொழில் - கட்டிடக்கலை, நாடு நகரமைப்பதில் சிறந்தவர்கள்.

இலங்கை மாந்தையில் வாழ்ந்த கம்மாளர்கள் நாக இனத்தைச் சேர்ந்தவர்கள். சர்ப்ப - லிங்க வழிபாட்டை உடையவர்கள். மொழி - தமிழ். ஸ்வர ஆட்சி முறையைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு இலங்கையில் இன்றுமிருக்கின்ற ஸ்வர ஆலயங்களே அழியாத சாட்சியாகும். மாந்தையில் கண்டுபிடித்த கிணறும் பெரு - மெச்சிக்கோ பகுதியில் காணப்பட்ட கிணற்றில் பெறப்பட்ட தடையப் பொருட்களை ஒப்புநோக்கில் இவை இரண்டும் ஒரே தடையப் பொருட்கள் நிறைந்தவையாகவும் அவை தேவதைகட்குரிய பலிபீடங்களாகவும் இருக்கின்றன. தொழிலைப் பொறுத்தவகையில் மாந்தைவாசிகளும், பெரு - மெச்சிக்கோ வாசிகளும் கட்டிடக்கலையிலும், நாடு நகர் அமைப்பதிலும் சிறந்தவர்களாக இருக்கிறார்கள்.

மாந்தையை உருவாக்கிய மாதுவட்டா, சகலகலாவல்லவர். வானசாஸ்திரம், வைத்தியம், சிற்ப, ஓவிய, கட்டிடக்கலைகளில் எல்லாம் சிறந்து விளங்கினார்கள் என்பதை தட்சண கைலாயபுராணமும், விஸ்வபுராணமும் எடுத்துக்காட்டுகின்றன. இதையே பட்டணத்தாரும் சுட்டிக்காட்டியுள்ளார். மாதுவட்டாவைப் போன்றே விஸ்வேஸ்வரனும், மயனும் ஆற்றல், அறிவு, திறமை மிக்கவர்களாக விளங்கினார்கள் என வரலாற்று ஏடுகள் வாய்திறந்து பேசுகின்றன.

மாந்தைநகரின் நாகரிகச் சிறப்புக்களை அறிந்து, தெரிந்து, புரிந்து, தெளிவு கொள்ளக்கூடிய வகையில் தமிழ் இலக்கியங்கள் இலங்கை வரலாற்று நூல்கள், தட்சண கைலாய புராணம், விஸ்வ புராணம், மாந்தைப்பள்ளு, திருவாளர் சி. இராசநாயகம் எழுதிய "பூர்வீக இலங்கை", அருள் செல்வநாயகம் எழுதிய "சீர்பாதகுல வரலாறு" என்ற நூல்கள் இருப்பது போல, அமெரிக்காவின் பெரு - மெச்சிக்கோ நாகரிகத்தை அதன் அடிச்சுவடு தெரியாமல், அழித்தொழிக்க முயன்ற ஸ்பானிய, பிரான்ஸ் கத்தோலிக்க மாதிரிமாரும், மயன் மக்களின் விலைமதிக்க முடியாத கலைச் செல்வங்களையும், பெறுமதிமிக்க நூல்களையும் ஒன்றுதிரட்டி எரிக்க முனைந்த "யுகேதன் நாட்டின்" ஆயரான "டைகோடி லாண்டா" என்பவரும், மயன் மக்களின் நாகரிகச் சிறப்புக்கள் அனைத்தையும் பதிவுசெய்து வைத்திருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவிலும், அகல்விளக்கு கிடைத்தது. பெரு - மெச்சிக்கோவில், ஆனால் சிந்துவெளியில் வந்த ஆரியர்கள், திராவிடர்களின் விலைமதிப்பற்ற கலைச்செல்வங்களை எல்லாம் அழித்ததுடன், ஆற்றல், அறிவு நிறைந்த நூல்கள் அனைத்தையும் தம்மொழிக்கு மாற்றிவிட்டுத் திராவிடர்களின் நூல்களையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கினார்கள். அதன் மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள், சரித்திர ஏடுகளில் தரித்திர மக்களாக்கப்பட்டார்கள். வந்தவன், இருந்தவனை அழித்தான், ஒழித்தான், துரத்தினான், வாழ்வைத் தனதாக்கிக் கொண்டான், வாழ்ந்தவன் வாழ்விடம் மட்டுமல்ல வாழ்க்கையையே இழந்தான். அரசிழந்தான், ஆண்ட பிரதேசம் இழந்தான், ஆய கலைகள் பலதை இழந்தான், அம்மண்ணில் வாழ்ந்த வரலாற்றையும் இழந்தான். வரலாற்றுக்கு வேண்டிய தடையப் பொருள் அனைத்தையும் ஆரியர் சாம்பலாக்கியதால், சிந்து சிரிக்கவில்லை. சிணுங்கிக் கொண்டிருக்கிறது.

பெரு - மெச்சிக்கோ மக்களின் உன்னத நாகரிகம் பற்றி, அவர்கள் வாழ்ந்த உயர்ந்த வாழ்வு பற்றி "த மொடேன் என் சைக்கிளோ பிடிய ஒப் பிரிட்டானிக்கா" என்னும் கலைக் களஞ்சியம் பின்வருமாறு கூறுகிறது.

"ஐரோப்பியர் காட்டுபிராண்டித் தன்மையில் மூழ்கி இருந்தபோது மயன் மக்களின் துறவிகளும் அறிஞர்களும் வானத்திலுள்ள கோள்களிலிருந்து நுணுக்கங்களையும், அதன் துல்லியமான அளவுகளையும் திரட்டிக் கொண்டிருந்தார்கள். ஐரோப்பாவில் அன்றிருந்த கணிதமுறைகளை விடச் சிறந்த முறையில் காலத்தைக் கணிக்கவும், பஞ்சாங்கங்களை உருவாக்கினார்கள் அவர்களின் கணித அறிஞர்கள்.

அவர்களின் கட்டிடக்கலைஞர்கள் அழகும் அதிசயமும் பொருந்திய கட்டிடங்களை நிர்மாணிப்பதில் ஒப்பிலா நிபுணர்களாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பிகள் எழுத்துக்களையும் உருவங்களையும் கல்லில் குடைந்து வரைந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் தலைவர்கள் மிகமிக சாமானிய மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையைச் செப்பனிட்டு அமைப்பதில் திறமை பெற்றிருந்தார்கள். தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அறிவுடனும் ஆற்றலுடனும் செயல்பட்டு வந்தார்கள் எனக் குறித்துள்ளார்கள்.

"எரிக்குவான்" என்னும் அறிஞர் தான் எழுதிய "த சொய்ஸ் ஒப் கோட்" என்னும் நூலில் "மயன் மக்கள் சிறந்த உயர்ந்த கணித மேதைகள். அவர்கள் பூமியின் ஆண்டை 365.225 நாட்கள் எனக் கணித்தார்கள். இன்றுவரை 365.235 எனச் சிறுமாற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. ஐயாயிரம் ஆண்டுக்கான பஞ்சாங்கத்தைக் கணித்து உலக மக்களுக்கும் விட்டுச் சென்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளி வழிபாடும் கம்மாளரும்

கம்மாளர்கள் தங்கள் குலதெய்வமாகக் காளியை வழிபட பல காரணங்கள் உண்டு. விஸ்வகர்மாவின் ஐந்து முகத்திலிருந்து தோன்றிய ஐந்து புதல்வர்களின் மனைவிமாரும் சக்திகளே ஆகும். "தாயிற்சிறந்த கோயிலில்லை" என்பதற்கொப்ப அவர்கள் சக்தியை வழிபட்டார்கள். சூரிய சர்ப்ப வழிபாட்டைத் தொடர்ந்து ஏற்பட்ட வழிபாடு தாய் வழிபாடாகும். கலைகளோடு தொடர்புடைய கலைஞர் சமுதாயம் கம்மாளர்கள், கலைத்தெய்வத்தைக் குலதெய்வமாக்கிக் கொண்டார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் பரமசிவனுக்கும் பார்வதிக்கும் இடையில் ஒரு போட்டி நடைபெற்றது. அதாவது அழகில் சிறந்தவர் யார் என்பதே அப்போட்டியின் தொனிப்பொருள். பரமசிவனுக்கும் பார்வதிக்கும் இடையில் ஏற்பட்ட போட்டிக்கு நடுநின்று தீர்ப்பு வழங்கத் தேவர்கள் முன்வரவில்லை. பிரமனும், விஷ்ணுவும் போட்டிக்குத் தீர்ப்பு அளிப்பதிலிருந்து நழுவிக் கொண்டார்கள். எனவே தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பை தேவகுருவான விஸ்வகர்மாவிடம் ஒப்படைத்தார்கள். விஸ்வகர்மா நிலைமையின் கடுமையைப் புரிந்துகொண்டு ஒரு நிலைக்கண்ணாடியை உருவாக்கிக் கொடுத்து இதில் உங்களை நீங்களே பார்த்து முடிவைத் தெரிந்து தெளிந்து கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டார். பரமசிவன் பார்த்தார். கண்ணாடியில் தன் உருவம் காட்டிய கோலம் கண்டு தலைகுனிந்தார். பார்வதி கண்ணாடியைப் பார்த்தார். பரவசத்தால் குதித்தார். குதூகலித்தார். போட்டி என்றால் பொறாமை எழாதிருக்காது. அது பரமசிவனையும் பாராது பார்த்திபனையும் பாராது. வெட்கித் தலை குனிந்த வேதனை ஒரு பக்கம். எதிரியின் கேலிக்கையால் ஏற்பட்ட தாக்கம் ஒரு பக்கம் வாட்டி வதைக்கத் தன்னை மறந்தார் பரமன். கோபக்காரனுக்குப் பாவம் புரிவதில்லை, பழிபாவத்திற்கு அஞ்சமாட்டார்கள் என்பதைப் பரமனே காட்டினார். சினந்தார், சீறிப்பாய்ந்தார். தன்னைப் படைத்த விஸ்வகர்மனுக்கே பிடி சாபம் என்றார். "உன் குலம் என்றும் ஒற்றுமை இன்றி வாழும்" என்றார். சாபத்தைப் பெற்ற சாது சும்மா இருப்பாரா? விஸ்வப்பிரமம் அல்லவா? "உடனே பிடி சாபம்" என்றார். இன்று முதல் என்றும் நீ அருபியாகவே இருப்பாய் என்றார்.

இவ்வாறு இருவருக்கும் இடையில் நடைபெற்ற சாபப் போட்டியைப் பார்த்த பார்வதி, தன்னால் ஏற்பட்ட சாபத்தை தீர்ப்பதற்காக விஸ்வகர்ம குலமக்களைக் காக்கும் காவல் தெய்வமாகத் தன்னை அர்ப்பணித்தார். அன்றுமுதல் விஸ்வகர்ம குலமக்கள் தங்கள் குலதெய்வமாகக் காளியை வழிபடத் தொடங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரத்தேர் நிர்மாணத்தின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# இந்துப் பண்பாட்டில் தேர்
# கலை வரலாற்று நிலை நிற்கும் ஓர் ஆய்வு

***வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்,*** *M.Phil.*

## தேர் : பொது அறிமுகம்

'தேர்' என்ற சொல் பற்றியும் அதன் வடிவங்கள் பற்றியும் இந்து சமய, கலை மரபில் அதன் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக ஆராய்தல் அவசியமாகின்றது. "தேர்" எனும் தமிழ்ச் சொல், வினையாகிய இரு வடிவங்களிலும் தமிழ்மொழியில் வழங்குவதாகவும், 'தேர்' என்பதற்குரிய ஒத்தபொருட் சொற்களாக அரி, இயந்திரம், எந்திரம், இரதம், கவரி, குயவு, கூவிரம், கொடிஞ்சி, சயநடதன், திகிரி, யந்திரம், விமானம், வையம் என்பவை அமைகின்றன. அதேவேளையில் 'தேர்' என்ற சொல்லிற்குப் பதிலாக நடைமுறை வழக்கிலமையும் 'இரதம்' என்ற சொல்லின் ஒத்த பொருட்சொற்களாக அரைஞாண், அவயவம், இரசம், இனிமை, உடல், குணம், உமிர்நீர், சாத்தியம், சுவைசூதம், தேர் பண்டி, பல், பாதம், புணர்ச்சி, மாமரம், வாகனம், சாறு, வண்டு, பாதரசம், இரசலிங்கம், பாவனன் என்பவை அமைக்கின்றன.

தேர் இரதம் என்பவை பற்றிய கருத்து முரண்பாடு ஒன்று தற்கால மரபிலே தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். தேரும் இரதமும் ஒரே வடிவாயினும் அமைப்பு முறையில் மாறுபட்டன அல்லது சிறிது மாறுபட்டன என்ற கருத்துமுளது. மேல்விதானம், இயற்கையாக அமையும் ஊர்தியை "தேர் என்று சொல்வது மரபு" என்றும் "அது நிரந்தரமாக அமையும் ஊர்தியை இரதம் என்று சொல்வது மரபில் வந்துவிட்டது" என்றும் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் இம்மரபினை எடுத்துரைப்பார்.

'தேர்' என்பது தமிழ்ச் சொல் என்றும் 'இரதம்' என்பது வடமொழிச்சொல் என்றும் கவனத்திற் கொண்டு நோக்கும்போது ஒரே ஊர்தியைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களாகவே அவை அமைந்திருப்பதை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்திலே 'தேர்' எனும் சொல்லாட்சியே பொதுவாக நடைமுறையிலுள்ளது. தமிழகத்திலே மேல்விதானம் இயற்கையாக உள்ள தேர்களே பெருமளவிற் காணப்படுகின்றபோதிலும் 'இரதம்' என்ற சொல்லாட்சியே அங்கு இடம்பெறுவதென்பதை நாம் அவதானிக்கலாம். 'மேல் விதானம் நிரந்தரமாக அமைக்கப்படுவது இரதம்' என்னும் மரபிற்கு ஆதாரமேதும் இருப்பதாகத் தெரியவரவில்லை. இம் மரபுக் கொள்கையின் அடிப்படையில் 'தேர்' என்று வழங்கப்படவேண்டிய மாவிட்டபுரம் கந்தசாமி தேர் மகோத்திர மஹாரதம் என்று வழங்கப்படுவதை உற்றுநோக்கும்போது 'தேர்', 'இரதம்' என்னுமிரு சொற்களும் ஒரே ஊர்தி வடிவினைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களே என்னும் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை அறியமுடியும். ஆகவே "இரதம் என்னும் முதன்மைப் பொருளிலே தேர் என்னும் சொல்" அமைகின்றது என்று கொள்வது பொருத்தமாகின்றது.

கானல் நீரைப் "பேய்த் தேர்" என்றும் உரோகினி நட்சத்திரத்தை 'தேர்' என்ற தமிழ்ச் சொல்லின் பெயர் வடிவம் அமைய அதன் வினைவடிவம் ஆராய்தல், அறிதல், சிந்தித்தல், தெரிதல், தெரிந்தெடுத்தல், பயிற்சி அடைதல் எனும் நிலைகளைச் சுட்டுவதாகும்.

'தேர்' என்னும் 'இரத'த்தின் சிறப்பினை ஆராய்கையிலே 'இரதம்' என்னும் சொல்லின் சிறப்பு இந்து மரபில் எத்தகைய முக்கியத்துவமுடையது என்பது தெளிவாகும். 'இரதம்' போன்ற பொலிவும் விரைந்த செயலும் எல்லாவற்றையும் குறித்து நிற்பது தெரியவரும். வானிலே பறக்கும் தேர்களை விமானம் என்று கூறுதல் மரபு. ஆயினும் அதனை 'வானரதம்' என்று கொள்வதும் கூட, அதன் சிறப்பினையே எடுத்துரைக்கும். கற்பனையாற்றலை அல்லது அதன் வேகத்தை 'மனோரதம்' என்றும் அறிவாற்றலை 'ஞானரதம்' என்றும் வாதத்தில் அல்லது தர்க்கத்திற் சிறந்த சைவ சித்தாந்த தத்துவத்தை 'வாதரதம்' என்றும் 'இரதம்' சித்திரக் கவி மரபிலும் 'இரதபந்தம்' என்றும் இடம்பெறுவதாகும். சிறு பிரபந்த இலக்கியங்களில் ஒன்றாகிய பிள்ளைத்தமிழில், ஆண்களுக்குரிய இலக்கணத்தில் 'சிறுதேருருட்டடல்' என்று பத்தாவது பருவமாகவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறப்புப்பெற்ற இரதமே இந்துசமய பெருங்கடவுளாகிய சிவபெருமான் திரிபுரதகனம் செய்வதற்காக ஊர்ந்து சென்ற ஊர்தி எனும் இந்து பௌராணிக மரபில் உயர்வு பெறுவதாகும். விஸ்ணுவைத் தாங்கித் திரியும் வாகனமாகிய கருடன் 'விஷ்ணுரதம்' என்று சிறப்பிக்கப்படுவதும் கூட, இரதத்தின் சிறப்பு நோக்கியே எனலாம்.

தேர் அல்லது இரதம், சிறந்த ஊர்தியாக மாத்திரமல்லாது சிறந்த படைப் பிரிவாகவும் படைக்கலமாகவும் அமைந்ததாகும். இரதம் செலுத்துவதில் சிறப்புப் பெற்றவர்களை 'அதிரதன்' என்றும் 'மகாரதன்' என்றும் மகாபாரதம் உட்பட பல காவிய இதிகாசங்கள் கூறும். பத்துத் திசைகளிலும் இரதம் செலுத்தும் ஆற்றல் பெற்றமையால் அயோத்திய மன்னன் அஜகுமாரன், 'தசரதன்' என்று பெயர் பெற்றமையை இராமாயணம் கூறுவது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து, ஊர்தி ஆகியவற்றின் அடிப்படையில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை எனும் நால்வகைப் படைப்பிரிவுகளில் இரண்டாவதாக இடம்பெற்ற தேர், ஆயுதங்களின் அடிப்படையை ஓரளவு கருத்திற் கொண்ட வேல், வாள், வில், தேர், குதிரை, யானை எனும் அறுவகைப் பிரிவுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் தேர், ஓர் 'ஆயுதமே' எனும் கொள்கையும் கவனத்திற்குரியதாகும்.

'தேரை மையமாக வைத்து நடைபெறும் போர்க்கள நிகழ்ச்சிகளைப் பாடுவதற்காகப் பல திணை துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை நிரல்படக் கூறியுள்ளது. இவ்வகையில் யுத்த முறைகளிலும் தேர்பெறும் இடம் சிறப்பானதேயெனலாம்.

## தேர் வடிவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

### வரலாற்றுப் பின்னணி

### 1. சிந்துவெளி நாகரிக காலம்

இந்திய வரலாற்றினதும் நாகரிகத்தினதும் தொட்டில் என்று கூறப்படும் தென்மைமிக்க சிந்துவெளி நாகரிக காலத்திலேயே 'தேர்' என்ற ஊர்தி இந்தியாவில் அறிமுகமாகியிருந்தது என்ற கருத்து வரலாற்று ஆய்வாளர்களின் ஆராய்ச்சி உரைகளில் இருந்து தெரிவதாகும். அக்கால நகரங்களில் புகழ்பெற்றதாகிய 'ஹரப்பா'விற் கிடைத்த இலச்சினைகள் சிலவற்றில் தேர்வடிவங்கள் அல்லது தேரையொத்த வடிவங்கள் காணப்படுவதாக மேலைத்தேய ஆய்வாளரான வண. ஹெரஸ் கருதுகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்துவெளி காலத்தில் இந்தியாவிற்கு வருகைதந்த புதிய இனத்தவராகிய ஆரியர்கள் "தேரூரும் மக்களாகவே" ஆய்வாளரால் இனங்காணப்படுவதும் இக்காலத்தில் தேரூர்தி அறிமுகமாகியிருந்ததை உறுதிப்படுத்தும். அவர்கள் இந்தியாவிற்கு வருகைதரும்போது பயன்படுத்திய தேர்கள், போரூர்தியாகவும் போக்குவரத்தூர்தியாகவும் விளங்கின. ஆரக்காற் சில்லுகளுடைய இத்தேர்கள் குதிரைகளால் இழுக்கப்படும் அமைப்புடையன. இந்திய சுதேச மக்களுக்கும் இவர்களுக்கும் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற யுத்தங்களில் இவர்களின் யுத்த ஊர்தியான "பளுவில்லாத தேர்களிற் பூட்டிய ஆரியரின் கபில நிறக் குதிரைகள் இந்துவெளி மக்களையும் நடுக்குறுத்தியிருத்தல் வேண்டும்", என்று கூறும் பேராசிரியர் ஏ.எல்.பசாம் சிந்துவெளி வீழ்ச்சிக்குரிய காரணிகளை யூகிக்கையில்,

> "கி.மு இரண்டாம் ஆயிரமாண்டிலே முழு நாகரிகவுலகத்தின்
> முகத்தையே மாற்றியமைத்த தேரூரும் மக்களின் இயக்கத்திலே
> இப்பெரு நாகரிகத்தின் வீழ்ச்சியும் ஒரு நிகழ்ச்சியாயிருத்தல்
> கூடும்"

என்று குறிப்பிடுவதும் கூட, இக்காலத்திலேயே தேர்கள் அறிமுகமாகியிருந்தன என்பதை உறுதிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இருக்கு வேத காலம்

சிந்துவெளி காலத்தின் வீழ்ச்சியுடன் ஆரம்பமாகும் புதிய சகாப்தமான ஆரிய நாகரிகத்தின் ஆரம்ப இலக்கியமாக இருக்கு வேதம் விளங்குகின்றது. "வேதகாலத்தில் தேரே தலைசிறந்த போர்க் கருவியாகத் திகழ்ந்ததுடன்" போக்குவரத்து ஊர்தியாகவும் அமைந்தது. இத்தகைய "தேர்களை இழுப்பதற்கு மாடுகளையும் குதிரைகளையும் அவற்றிற் பிணைத்தனர்". இங்கே காணப்படும் தெய்வங்கள் பற்றிய வர்ணனைகளில் அவர்களுக்குரிய தேர்களின் இயல்புகள் சிலவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. சூரியன் தேரை ஏழு குதிரைகளும் இந்திரன் தேரை இரு குதிரைகளும் இழுத்துச் செல்ல, பூஷன் தேரை ஆடுகளே இழுத்துச் செல்வது சிறப்பானதோர் அம்சமே எனலாம். அத்துடன் அஸ்வினி தேவர்கள் இருவரினதும் தேர், இவற்றினின்றும் பிறிதுபட்ட இல்பினையுடையது. மூன்று சில்லுகளுடைய இவர்களின் தேரை, சிறகுகளுடைய குதிரைகளும் பறவைகளும் இழுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இருக்கு வேதத்தில், பிற்காலப் புராண இலக்கியங்களிற் போன்று ஆகாயத்திற் பறந்து செல்லும் தேர் விமானங்கள் பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன என்பர் ஆராய்ச்சியாளர். இவை ஆகாயத்திற் பறந்து செல்வதுடன் கடலிலும் கப்பல் போன்று ஊர்ந்து செல்லும் சிறப்பு மிக்கவையாக விளங்கின. கடலிற் செல்லும் நீராவி இயந்திரங்கள் "அக்கினி ரதம்" என்று இங்கு அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இருக்கு வேதகாலத்தில் சிறப்பிடம் பெறும் யாகங்களுக்குரிய வேதிகைகள், போரூர்தியான இரத வடிவிலே அமைக்கப்பட்டன என்பதை தைத்திரீய சம்ஹிதையிலிருந்து அறியலாம். வேதகால இரதங்கள், இரத வடிவ வேதிகைகளில் இருந்தே ஆலய வடிவம் தோற்றம் பெற்றது என்னும் ஆராய்ச்சியறிஞர் கருத்து மனங் கொள்ளத்தக்கதாகும்.

## 3. இதிகால புராண இலக்கிய காலம்

இலங்கையரசனும்இராமாயணத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒருவனுமாகிய இராவணனுடைய புஷ்பக விமானம், தரையில் மட்டுமல்லாது ஆகாயத்திற் பறந்துசெல்லும் சிறப்புடையது. இப்புஷ்பக விமானத்தினுள் ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததுடன் பைசாசங்கள், மயில், கின்னரப்புள், மகரம் என்பவற்றின் சிற்பங்களும் காணப்பட்டன என்று இராமாயணம் கூறும். சிவனுடைய திரிபுரதகன நிகழ்வு பற்றிய ஐதிகத்துடன் தொடர்புடையதாக சிவபுராணங்கள் பலவற்றிலும் இடம்பெறும் தேர் விளக்கம் அமைகின்றது. 'பிரபஞ்ச வடிவமே சிவன் தேர்' எனும் வகையில் அமைவது இப்பௌராணிக மரபு. யசுர் வேதத்திலிருந்து வளர்ச்சி பெற்று வந்த திரிபுரதகன ஐதிகம், விரிவுற்ற நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலிங்க புராணங்களில் அமைவதும் இதுவே "இந்து தேர்த்திருவிழா பற்றிய தத்துவமாகவும் எழுச்சிபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கன."

சிவனுக்காக விஸ்வகர்மா நிர்மாணித்த வையம் அல்லது பிரபஞ்சம் எனப்படும் தேரில், மந்தரகேசரி மலைகள் அச்சாகவும் சூரிய சந்திரர் சக்கரமாகவும் ஆறு பருவங்கள் சந்திகளாகவும் பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுகளாகவும் ஆகாயம் ஆசனமாகவும் உதய - அஸ்தகிரிகள் கூவிரமாகவும் நதிகள் கொடிகளாகவும் நட்சத்திரங்கள், விதானமாகவும் மோட்ச உலகம், மேல் விரிவு ஆகவும் யாகங்கள், சட்டங்களாகவும் நாள்கள் முதலியன குறுக்குவிட்டங்களாகவும் எட்டுமலைகள், தூண்களாகவும் அட்ட திக்கு யானைகள், தாங்கும் ஆதாரங்களாகவும் ஏழுகடல்கள், தேர்ச்சிலைகளாகவும் அறுபத்து நான்கு கலைகள், முளைகளாகவும் வேதாங்க - பாங்க - னு சாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும் நால்வேதங்கள் குதிரைகளாகவும் பிரமன் சாரதியாகவும் அமைய, 'தேர் முழுமை பெறுகின்றது. பிரபஞ்ச வடிவமாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்கந்த புராணத்தை தழுவி கச்சியப்ப முனிவர் தமிழில் இயற்றிய கந்த புராணத்தில் இடம்பெறும் தேர்கள் பற்றிய விளக்கங்கள் கற்பனா சாமர்த்திய உச்சம் என்றுதான் சொல்லவேண்டும். இதன் அடிப்படையில் இடம்பெறும் உண்மைகள் யாவையாக இருக்கலாம் என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு முதலில் கந்தபுராண தேர்கள் பற்றி ஆராய்தல் பொருத்தமானது. இப்புராண யுத்தகாண்டத்தில் இடம்பெறும் சூரபத்மனுடைய தேர் ஒவ்வொன்றும் தனித்தனியே 70,000 எனும் தொகையுடைய சிங்கம், பூதம், குதிரை ஆகியவற்றால் இழுக்கப்படும் பிரமாண்டத் தன்மையுடையது. யுத்தத்திற்கென்றே நிர்மாணிக்கப்படும் இது, அத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அமைவதாகும்.

சூரனுக்கு அவன் யாகத்தில் சிவனால் வழங்கப்பட்ட 'இந்திர ஞாலம்' என்னுந்தேர் "உண்ணிலா மாயைவல்ல வொருதனித் தேர்" என்று அதாவது வேறு துணையின்றித் தானே இயங்கும் தேர் என்று குறிப்பிடப்படுவது இங்கே ஆராய்தற்குரியது. இது இந்த விஞ்ஞான தொழிநுட்ப அறிவு பற்றிய சாதனை மதிப்பீடாகவும் அமையும். தற்கால நவீன விஞ்ஞானத் தொழிநுட்பம் மூலம் உருவாகும் தானியங்கி ஏவுகணைகள், விமானங்கள் போல் செயற்படும் நிலையில் 'இந்திர ஞாலம்' அமைகின்றது. சூரனுடைய ஏவலையேற்று, சஞ்சீவி மலையை அது எடுத்து வருவதும் "திருத்தமற்ற மழலை வார்த்தையைப் பேசும் சிவன் சேய்பாற் கூட்டமாக நிற்கின்ற பூதங்களையும் வில் வீரர்களையும் எல்லாம் நீயள்ளிக் கொண்டு போய் அண்ட முகட்டில் வைத்துக் கொண்டிரு" என்ற ஏவலையேற்று அவர்களைக் கைப்பற்றிச் செல்வதும் இவ்வற்புதத்தேரின் அதிசிறந்த செயற்பாடாக இங்கே கூறப்படினும் இந்து விஞ்ஞான தொழிநுட்ப சாதனையின் காவிய வடிவமாகவே இது அமைகின்றது என்று கூறுதல் பொருத்தமானது. இத்தகைய விமானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட வேண்டிய தொழிநுட்ப முறைகளை பரத்வாஜர் எழுதிய 'இயந்திர சர்வாஸ்தா' என்னும் இந்து சிற்ப, இயந்திர சாஸ்திரம் குறிப்பிடுவது இங்கே ஒப்பு நோக்குவதற்குரியது.

இந்து இலக்கியங்களில் வரும் தேர்களின் செயற்பாடுகள் பற்றிய பிற நாட்டறிஞர்கள் ஆராய்ச்சி செய்துள்ளமை குறிப்பிடற்குரியது. அமெரிக்க ஆய்வாளரான திருமதி லீலர்வில்சாக்ஸ், "வான் இயலை எடுத்துக்கூறி அதில் செலுத்தக்கூடிய விமானம் ஏவுகணை ஆகியவற்றைப் பற்றி அவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கின்றார்கள் " என்று இந்து சாஸ்திர ஆசிரியர்களைப் பாராட்டுவதும் 'வாஸ்லூத் - விண்வெளி வீரர்' என்ற நூலின் ஆசிரியர், "இவற்றை வெறும் கற்பனைகளாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அன்றே புழக்கத்தில் இருந்த கருவிகளையே அவர்கள் நுட்பங்களுடன் குறிப்பிட்டு இருக்கிறார்கள்" என்று இவர்களைப் போற்றுவதும் மனங்கொளத்தக்கன. கந்தபுராணம் உட்பட இந்து இலக்கியங்களில் வரும் தேர்களின் உண்மைநிலை எதுவாயிருப்பினும் அவை முற்றுமுழுவதும் "பௌராணிக மரபே" என்று கொள்ளப்பட முடியாதன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 4. வரலாற்றுக் காலம்

இதுவரை ஆராய்ந்த இலக்கியங்களில் இடம்பெற்ற தேர் பற்றிய விபரங்களிலிருந்து சற்று விடுபட்ட நிலையில், வரலாற்று ரீதியிலான சில வளர்ச்சி நிலைகளை ஆராய்தல் அவசியமாகின்றது. வேதகால இரதங்கள், இரத வடிவ வேதிகைகளில் இருந்து ஆலய வடிவம் தோற்றம் பெற்றதென்னும் ஆய்வறிஞர் கருத்தினை முன்னர் ஆராய்ந்த நாம் அதன் வளர்ச்சியின் தொடர்ச்சியை குப்தர் காலத்தில் அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் சிறப்பிடம் பெறும் தேர், குப்தர்களின் சாஞ்சி சிற்பங்களில் நான்கு குதிரைகளுடைய "எளிதிலியங்க முடியாத பெரியதோர் ஊர்தியாக" அமைந்துள்ளது. தேர் வடிவிலிருந்து தோற்றம் பெற்ற ஆலய வடிவம் தேர் வடிவினையே பிரதிபலிக்கும் வகையில் சில்லுகள், குதிரைகளுடன் அமைந்தமையை ஆரம்ப, மத்திய காலக் கோவில்கள் பலவற்றிலும் கண்டுகொள்ளலாம். திருக்கடம்பூர், திருவதிகை என்பன இவ் வகையிற் குறிப்பிடத்தக்கன. இவற்றின் கருவறைகள் இத்தகைய அமைப்புடையன. மாமல்லபுரம் 'பஞ்சபாண்டவர் ரதங்கள்' எனப்படும் கற்றேர்களில் இருந்தே தமிழக ஆலய வடிவம் மத்திய காலத்தில் மறுமலர்ச்சியுற்றதாகும். கற்றேர்கள் எனும் வகையினதாக பதினான்காம் நூற்றாண்டிற்குரிய கொனாரக சூரியன் கோவில், விஜயநகரத்தில் எழுச்சி பெற்ற ஹம்பி நகர கற்றேர் (கி.பி. 15 - 16) என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்து ஆலய வடிவினையே தோற்றுவித்த தேர் எனும் கலையூர்தி வடிவம், கலைச்சிறப்புடன் வளர்ந்தது, தமிழகத்திலேயே எனலாம். சோழ, விஜயநகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் பெரு வழக்கில் இடம்பெற்ற தேரமைப்புக்கலை, இன்றைய நிலையில் வளர்ச்சியுற்றதொன்றேயெனலாம். மரச் சிற்பத் தேர்களாக இறைவனின் ஊர்தியாக வீதிவலம் வரும் சிறப்புடையவை இத்தேர்கள். தங்கரதம், வெள்ளிரதம் போன்றனவும் சிற்சில இடங்களில் நடைமுறையிலுண்டேனும் அதேயாலயங்களில் தேர்த் திருவிழாவிற்குரியதாகவும் மரச் சிற்பத் தேர்களே பெரும்பாலும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் சிறப்புப் பெறும் தேர்களில் திருவாரூர், திருவிடை மருதூர், ஸ்ரீ வில்லிப்புத்தூர், திருச்செந்தூர், மதுரை போன்றவை குறிப்பிடத்தக்க சிறப்புடையனவாக அமைகின்றன என்று கூறின் அது மிகையல்ல.

## தேரும் தேர்த்திருவிழாவும் சமூகத்தில் பெறும் முக்கியத்துவம்

தேர் அமைப்பு முறைமைகளை விபரிக்கும் ஆகம, சிற்ப சாஸ்திரங்கள், தேர்த்திருவிழா நடைமுறை பற்றியும் விபரிப்பது குறிப்பிடத்தக்கதாகும். தேர்த்திருவிழா, ஏழாம் நாளில் நடைபெறவேண்டும் என்று காரணாகமம் கூறும். இன்று அம் மரபு, பெரும்பாலும் தளர்ந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தேர்த்திருவிழா, இன்றைய நிலையில் ஆலய திருவிழா நாட்களின் அடிப்படையில் இறுதிக்கு முதல்நாள் அமைவது அவதானித்தற்குரியது. பத்துநாள் விழாவாயின் ஒன்பதாவது நாளிலும் சில ஆலயங்களில் இறுதி பத்தாவது நாளிலும் பன்னிரு நாள் விழாவாயின் பதினோராவது நாளிலும் பதினைந்து விழாவாயின் பதினான்காவது நாளிலும் பதினெட்டு விழாவாயின் பதினேழாவது நாளிலும் இருபத்தைந்து விழாவாயின் இருபத்துநான்காவது நாளிலும் அமைவது இன்றைய நடைமுறை எனலாம்.

இன்றைய நிலையில் தேர்த்திருவிழா அல்லது இரதோற்சவம் நடைபெறுவதன் தத்துவமாக "திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுதற்காக" என்னும் இந்து சமய, பௌராணிக தத்துவத்தை ஏற்பது பொருத்தமானது. இதனையே சைவசித்தாந்த நூலாகிய திருமந்திரமும் "முப்புரம் ஆவது மும்மல காரியம்" என்றும் குறிப்பிடுகின்றது. திருமூல தத்துவத்தின் அடிப்படையில் அமையும். தேர்த்திருவிழா ஆலய விழாக்களுள் சிறப்புடையதாகும். இது பற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார்,

> "தேர்த்திருவிழாவைப் போல மகிழ்வைத் தரத்தக்க விழா
> வேறொன்றில்லை. சமயநெறி தழுவிய சமுதாய அமைப்பிற்குத்
> தேர்த்திருவிழாவே அரண் செய்கிறது"

என்று குறிப்பிடுவது பொருத்தமுடையதேயாகும். சமுதாய அமைப்பினையே நெறிப்படுத்தும் தேர்த்திருவிழா, இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் ஓர் 'பதி புண்ணிய விழா' வாக அமைவதுடன் "இறைவனுக்குரிய ராஜோபசாரம்" என்று போற்றப்படுவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறந்த தேரில்லாத ஆலய வழிபாடு தலையில்லாத உடம்பை போசிப்பது போன்றது"

என்று இந்து மரபு கூறுவதிலிருந்து தேர்த் திருவிழாவின் முக்கியத்துவம் இத்தகைய சிற்பாகம அடிப்படையிலமையும் சிறந்த தேரிலேயே தங்கியுள்ளது என்னுமுண்மை தெளிவாகின்றது எனலாம்.

தேரோட்டம் நடைபெறும் ஆலய மூலமூர்த்தி சிவனாயின் நடராஜர் அல்லது சோமாஸ்கந்தரும் விநாயகராயின் பஞ்சமூல விநாயகரும் முருகனாயின் ஆறுமுகனும் விஷ்ணுவாயின் வரதராஜப் பெருமாளும் சக்தியாயின் அதன் பல்வேறு வடிவபேத மூல மூர்த்திகளுக்கும் அமைய அவ்வவற்றின் சிறப்பார்ந்த வடிவமும் தேர் எழுந்தருளி மூர்த்தமாக அமைய, சைவாலயங்களில் ஆண் தெய்வங்களாயின் சண்டேஸ்வரரும் பெண் தெய்வங்களாயின் சண்டேஸ்வரியும் அவ்விழாவின் தரிசன பலன் அல்லது பேறு அளிப்பவராக இறுதியில் சிறிய தேரில் அல்லது மூலவருடன் சேர்த்து பெரிய தேரில் எழுந்தருளுவதும் சிறப்பாக அவதானிக்கக்கூடிய பொது நடைமுறையாகும். ஏனைய தெய்வங்களையும் சில சொரூபமாகவே தரிசனம் செய்தல் இவ்விழாவின் நுண்மை தழுவிய தத்துவமாகும். இத்தகைய தேர் விழா வேளையில் 'தேர் வடிவம்' முழுவதும் 'சிவ வடிவம்' அல்லது 'சிவசொரூபமாகவே அமையும்'. இவ்வாறு இறைவன் தேரில் எழுந்தருளும் தேர்விழா, 'சார்வத்ரீக தீக்ஷை' என்று குறிப்பிடப்படுவது சிறப்புடையதாகும்.

தேரோட்ட வேளையில் தேரின் பொது வடிவம் தாமரை மொட்டினைப் போன்று அக்கினி சுடர்விடும் அல்லது சுவாலிக்கும் தோற்றமுடையதாக அமைய, அதில் இறைவன் அமர்ந்து, ஆன்மாக்களின் இதயத் தாமரையில் அவன் அமர்ந்திருப்பதனையும் அவன் ஏறியவுடன் தேர் ஓடுவதும் இறங்கியவுடன் நிற்பதும் அவனருளின்றி ஆன்மாவால் இயங்க முடியாது என்பதனையும் குறிக்கும் தத்துவார்த்தமாகும்.

இத்தகைய சிறப்பினை உடைய தேர்த்திருவிழா, இந்து சமூகத்தை சிறப்பாக யாழ்ப்பாணத்து இந்து சமூகத்தைப் பொறுத்தவரையில் ஓர் 'தேர்க் கலாசாரம்' என்று போற்றத்தகும் உள்ளார்ந்த சிறப்பினை உடையதாகும். இது இந்து சமூக நிலையில் பொதுமை தழுவிய பண்பினை எடுத்துரைக்கும் சமூக தத்துவமாகவும் அமையும். இச்சமூக பொதுமைத் தத்துவம் 'பிரபஞ்சத் தேர்' என்று குறிப்பிடப்படுதலும் பொருத்தமுடையதொன்றே என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# "வரலாற்றில் வெள்ளோட்டம் காணும் வடநீர்வை இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர்"

***வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்,*** *M.Phil.*
*முன்னைநாள் துணை விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

யாழ்ப்பாண இந்து - தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் புராதன இலங்கைப் பண்பாட்டையும் மத்திய சோழர்கால இந்துப் பண்பாட்டையும் ஆகம சிற்பாகமப் பண்பாட்டையும் ஒருங்கே பிரதிபலித்து நிற்கும் பேரருட் பிரவாகமாய் விளங்குபவர் அன்னை இராஜராஜேஸ்வரி. அத்தகைய அதியுயர் சிறப்புப்பெற்று விளங்கும் அன்னை, நீர்வேலி வடக்கு எனும் புனித பதியில் அரசகேசரி விநாயகர், நீர்வேலி தெற்குக் கந்தசுவாமி, வாய்க்காற்றரவைப் பிள்ளையார், நீர்வேலி பத்திரகாளி அம்மன், கருணைமிகு காமாட்சி அம்மன், கதிர்காம சுவாமி ஆகிய தெய்வாலயங்களின் நடுநாயகமாய் அமர்ந்து அருளாட்சி செய்து வருகின்றார்.

யாழ்ப்பாணத்தின் புராதன கலை, கைத்தொழில் சமூகமாகிய விஸ்வப் பிரம்ம குலத்தவர்களின் முக்கிய கேந்திரங்களில் ஒன்றென விளங்கும் நீர்வேலியம்பதியின் விஸ்வப் பிரம்ம நாயகியாம் இராஜராஜேஸ்வரி அம்மன், பவனி வருவதற்கென்று உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது யாழ்ப்பாணத்து இந்துப் பண்பாட்டுலகின் அருட்பேறே எனலாம்.

ஆலயத்திற்கேற்ப அளவும் அமைப்பும் கொண்ட இத்தேர், தேர் நிர்மாண ஸ்தபதி பற்றிய இவ்வறிமுகம்,

1. ஸ்தபதி த. ஸ்ரீதரன் உருவாக்கம்,
2. தேர் நிர்மாண ஸ்தபதியாக,
3. எழில்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் தேர் : அமைப்பும் சிறப்பும்,

என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டதாக சில உள்ளார்ந்த பண்பியல் வெளிப்பாட்டுடன் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஸ்தபதி த. ஸ்ரீதரன் உருவாக்கம்

புராதன யாழ்ப்பாண அரசுப் பாரம்பரியத்தை இன்றும் நினைவுபடுத்தி நிற்கும் மகா விஸ்வப் பிரம்மஸ்ரீ விலாடசங்கிலித் தவண்டைக் குருக்கள் ஆச்சாரியாரின் ஆரம்ப, இடைக்கால வாசஸ்தலமாகிய மயிலிட்டி ஓர் முக்கிய கேந்திரமாகவும் விளங்கும் பெற்றியது. அவரால் நிறுவப்பட்டதும் வழிபடப்பட்டதுமாகிய சங்கவத்தையம்பதி அம்பலவாண சுவாமி மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், தெய்வீக அருள்மழை பொழியும் புராதனச் சிறப்புடையது. அத்தகைய புனிதம் நிறைந்த பேராலயத்தை வழிபடுதலமாகக் கொண்ட அரும்பெரும் பேறு பெற்று நிற்கும் விலாடசங்கிலி மரபினர் மயிலிட்டி, மாவிட்டபுரம், நீர்வேலி, திருநெல்வேலி, அச்சுவேலி, புத்தூர், வீமன்காமம் ஆகிய இடங்களில் வதிந்தும் கலை, தொழில்நுட்பம் வளர்த்தும் நிற்பது, யாழ்ப்பாண சமூக, பண்பாட்டு வரலாற்றின் இயங்கியலிற் குறித்துரைக்கத்தக்கதோர் உயிர்ப்புரிமை பெறுவதாகும்.

அத்தகைய பெருஞ் சிறப்புப் பெற்ற விலாட சங்கிலி கண்ட மயிலிட்டியில் அச்சுவேலியைச் சேர்ந்த காளிப்பிள்ளை தம்பிப்பிள்ளையின் இரண்டாவது மகனாகவும் நான்காவது பிள்ளையாகவும் **1974** ஆம் ஆண்டு பிறந்தவர் விஸ்வப் பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரன் ஸ்தபதி அவர்கள். மயிலிட்டியின் புராதன கல்வி - கலைக்கூடமாம் யா/ மயிலிட்டி வடக்குக் கலைமகள் வித்தியாலயத்திலே தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைக் கற்றுத் தேறலானார். தமிழும் சமயமும் துறைபோகிய பேராசான். பண்டிதர் சி. அப்புத்துரை, சித்திரக் கலைப் பேராசான் செ. செல்லத்துரை ஆசிரியர் ஆகியோரின் பேரன்பினையும் மதிப்பினையும் பெற்று கல்வியில் மேற்கிளம்பிய சிறுவன் ஸ்ரீதரன், மயிலிட்டியின் புகழ்பூத்த பெருங் கலைஞர், தொழில்நுட்பக் கலா நிபுணர்களிடம் தமது கலை, தொழிற் கல்வியைத் தொடரலாயினான்.

தன் தந்தையும் சிறந்த சிற்பியும் ஆகிய கா. தம்பிப்பிள்ளையிடம் சிற்பக் கலையின் அரிச்சுவடி பயின்ற ஸ்ரீதரன், **1986**ஐத் தொடர்ந்த மயிலிட்டி இடப்பெயர்வின் பின்னர் சிறுவிளான் க. சுப்பிரமணியம் அவர்களிடம் மரக் கட்டுமானத் தொழில்நுட்பத்தினை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். வளர்ச்சி பெற்றுயர்ந்து செல்ல விரும்பிய இளங்கலைஞன். இலங்கை கண்ட கலைப் பேராசானும் தேர்க் கலை நிபுணருமாகிய கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களை ஞானகுருவாக ஏற்றமை, அவர் வாழ்வில் மட்டுமன்றி கலாகேசரியின் இறுதிக்கால வாழ்விலும்கூட ஓர் பசுமைப்புரட்சியையே ஏற்படுத்திற்று எனலாம்.

எண்பதுகளின் இறுதியில் ஆரம்பித்த சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேர் நிர்மாணம் சற்று காலம் நீடித்துக் கொண்டே சென்ற நிலையில் மயிலிட்டி இளந்தளிர்கள் ஸ்ரீதரனும் ந. ரவீந்திரனும் துடிப்பும் செயற்றிறனும் மிக்கவர்களாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தூர் மட்ட மூலநாயகியாக இராஜராஜேஸ்வரி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடித்தளத்தின் பூசாந்தர மடக்கையின் அழகுத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்திரத்தேரின் சித்தூர் மட்ட முகப்புச் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரத்தேரின் சித்தூர் மட்ட பின்புறச் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாகேசரி கலாலயத்தினுட் புகுந்து கொள்கின்றனர். முதுமைப் பருவத்திற் தளர்ச்சியுற்றிருந்த கலாகேசரிக்கு தன்னைச் சுற்றி இளங் கலைஞர்கள் திரள்வதைக் கண்டு முன்னரைப் போன்றதோர் உற்சாகமும் உந்துதலும் ஏற்படலாயிற்று. இத்தேர் நிர்மாணப் பணிக்கு அவர் ஏற்கனவே மயிலிட்டிக் கலைஞர்களிடம் உதவி கேட்டிருந்தமை கவனத்திற்குரியது. செ. சண்முகநாதன், செ. தியாகராசா, ந. செல்லேந்திரன் ஆகியோர் இங்கு நேரடி நிர்மாணப் பங்களிப்புச் செய்திருந்தனர். ஆரம்ப காலத்திலும் இடைக்காலத்திலும் பயிற்சி பெற்றுயர்ந்து தனியே இயங்கும் மாணவர்களாற் பெரிதும் பாதிக்கப்பட்டவராகவே கலாகேசரி விளங்கினார்.

இத்தகைய கலாகேசரியின் பிற்கால வாழ்வு, ஒழுங்காக நடைபெறுவதற்கும் ஏன் அதையும் தாண்டி சிறப்பாகச் சில சாதனைகளை நிகழ்த்துவதற்கும் உறுதுணையாளனாக வாய்க்கப்பெற்றவன், தம்பி ஸ்ரீதரன் என்பதை யாழ்ப்பாணக் கலை வரலாற்றுச் சமூகமே ஏற்றிப் போற்றிநிற்கும் விடயமாகும். இது, எவராலும் மறுத்துவிடவோ அல்லது மறைத்துவிடவோ முடியாததோர் பண்பாகும்.

கதிரமலைச் சிவன் தேர் (1992), இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் (1993) தேர் ஆகிய நிர்மாணத் தளங்களிற் கலாகேசரியின் பிரதமசீடனாக அமர்ந்து, தேர்க் கலை நிர்மாணத்தின் சகல துறைகளிலும் பெற்றுக்கொண்ட பயிற்சியே ஸ்ரீதரன் என்னும் இளங்கலைஞனை ஓர் தேர் நிர்மாண ஸ்தபதியாக மேற்கிளர வைத்தது எனலாம்.

## 2. தேர் நிர்மாண ஸ்தபதியாக...

கலாகேசரியின் மறைவு, தனித்தியங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஸ்ரீதரனுக்குத்தர, அவர் தேர் நிர்மாண ஸ்தபதியாகத் தனது பணியை ஆரம்பித்தார். கல்லியங்காடு சட்டநாதசிவனுக்கு சாதாரண அடித்தளத்துடன் கூடிய சிறிய தேர் (1995) ஒன்றினை நிர்மாணித்ததன்மூலம் வயதிற் குறைந்த இளம் ஸ்தபதியாக அவர் தன்னை இனங்காட்டினார். வலிகாம இடம்பெயர்வின் (1995) பின்னர் வவுனியா சென்று தன் பணி தொடர்ந்தார். பல சித்திரத் தேர்களை நிர்மாணித்திருந்த போதிலும் வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கோணேச்சரம் கோணநாதருக்கு அமைத்த நாகர மரபுத் தேர் (2003), ஸ்ரீதரனின் கலை வாழ்விற் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திற்று எனலாம். அன்று தொடக்கம் அவர் யாழ்ப்பாணம், இலங்கைத் தேர்க்கலை உலகில் ஏறுமுகம் பெற்று விரைந்து வளர்ந்து செல்வதை எம்மால் அவதானிக்கமுடிகின்றது.

சங்கானை கிழக்கு சித்தி விநாயகர் (2007), காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் - ஐயனார் (2008) ஆகிய தேர்கள் தமது ஒன்றுவிட்ட தமையனார் ச. ஜெயகாந்தன் ஸ்தபதியின் ஒப்பந்தமாயினும் அவற்றின் கலையாக்க வெளிப்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தக்காரன் இந்த இளம் ஸ்தபதி, த. ஸ்ரீதரன் அவர்களே என்பது பற்றி இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகின்றது.

அச்செழு, கொக்கிருந்தபதி மீனாட்சி அம்மனுக்கு 2009ல் நிர்மாணித்த திராவிட முகபத்திர மரபுத் தேர், மேற்குறித்த தேர்களின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் ஆகத் திகழ்ந்து, வீண் கதைவாணர்களின் கதைகளுக்கெல்லாம் பதில் சொல்வது போன்று ஓங்கி நிமிர்ந்து நிற்பது அனைவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை முதலாய இலங்கையின் பல பிரதேசங்களிலும் தேர் நிர்மாணித்துப் புகழ்பெற்ற ஸ்ரீதரன், யாழ்ப்பாணத்துத் தேர்க்கலை நிபுணர்களே வியந்து நின்று பார்த்தும் காரசாரமாக விவாதித்தும் வரும் உயிர்ப்புநிறை கலைஞன் என்பது கலை உள்ளங்களாற் போற்றப்படவேண்டியதாகும்.

## 3. எழில்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் தேர் : அமைப்பும் சிறப்பும்

விலாட சங்கிலித் தவண்டைக் குருக்கள் மரபில் மயிலிட்டியில் அச்சுவேலி கா. தம்பிப்பிள்ளைக்கு மகனாகத் தோற்றிய ஸ்ரீதரன், நீர்வேலி சங்கணவைப்பதி இராஜராஜேஸ்வரி அம்மனுக்கு தேர் நிர்மாணிப்பது என்பது **'விஸ்வப் பிரம்மானுக்கிரகம்'** என்றே சொல்லவேண்டும். நீர்வேலிப் பிரதேசத்திற் தேரோடும் முதலாவது **'விஸ்வ சமூக நாயகி, இராஜராஜேஸ்வரி அம்மனே'.**

அளவின் அடிப்படையில் சிற்றாலயம் எனத்தகும் இவ்வாலயம், 7':2" என்னும் காற்புறவாயின் பரிணமிப்பில் உருவாகியது. 21':06" உயரமுடைய இத்தேர், திராவிட உத்தரமட்டம், முகபத்திரம் என்னும் இரு கலை மரபுகளை இணைத்து உருவாகியது. நான்கு சில்லுகளும் 6 பார்களும் உடைய பார்விதானம், உபபீடம், அதிஷ்டானம், கமலாகாரப் பண்டிகை, நராசனமட்டம், தேவாசன மட்டம் ஆகிய தளங்களைக் குறு நிலையிலும் இணைப்பு நிலையிலும் உருக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உபபீட சித்தூர் மட்டத்தில் 28 தெய்வீக மூர்த்த அருளியற் சிற்பங்கள் இடம்பெறுகின்றன.

நான்கு குதிரைகளும் சாரதி பிரம்மிணியும் தேரின் சாரத்திய அம்சத்தைப் பிரதிபலித்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

எட்டுப் பெரும் பவளக்கால்களும் அழகிய ஏற்றம் - இறக்கம் கொண்டு விளங்கும் பந்தலும் உடைய மணிமண்டபம் அழகு ததும்பும் கலைப் பரிணமிப்புடன் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு யாளித் தூண்களாற் தாங்கப்படும் விமானம், திரிதளமுடையது. அதன்மேல் சிகரமும் கலசமும் உச்சிக்குடையும் தேரின் தத்துவத்தினை முழுமைப்படுத்துவது பரவசமூட்டுகின்றது. இவ் விமானம், முக பத்திர மடக்கை மீட்பின் சிறப்பினைத் தன்னகத்திற் கொண்டுள்ளது. இத்தேர் முப்பத்து ஆறு இலட்சம் ரூபா செலவில் உருவாகியது.

## நிறைவுரை

மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் சுமார் 5 மாதமும் இல்லாத கால அளவினுள் நிர்மாணப் பணிகள் யாவும் பூர்த்தியாகி வெள்ளோட்டம் காணும் நீர்வைநகர், சங்கணைவைப்பதி இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரச் சிறுதேர், யாழ்ப்பாணத்து இந்து தேர்க்கலைப் பாரம்பரியத்தில் ஓர் பரிணமிப்பும் விதந்துரைப்பும் என்பதில் ஐயமேதுமில்லை.

சுருக்கமாகக் கூறின், விஸ்வப் பிரம்ம சமூக நிலைப்பட்ட சிற்பக் கலைப் பாரம்பரியம் தந்த தேர்க்கலை என்னும் உயர்ந்த கலைவடிவம், இன்றும் உயிர்ப்புடன் நிலைபெற்று வருவதற்கு பாரம்பரிய நிலைப்பட்ட கலைக்குழுக்களின் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்பும் உதவி நல்குகையும் ஓர் காரணி என்பதற்கு மயிலிட்டி விஸ்வப் பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரன் ஸ்தபதியின் இத்தேர் சிறந்ததோர் உதாரணம் என்றுகூறின் அது மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : III

## ஆலய பக்தி இலக்கியம் :

## பதிகம் - ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய கோபுர கும்பாபிஷேகத்தின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# இராசராஜேஸ்வரி பதிகம்

***விஸ்வப்பிரம்மஸ்ரீ த. சண்முகதாஸ்,***

தலைவர், தியானமூர்த்தி திருநெறி மன்றம்,

ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயம், பேர்வின்.

## விநாயகர் துதி

வையத்தார் வாளவென வாய்க்காற் றரவைதனில்
கையைத்தா லாட்டியருள் கணபதியே - சையமிகு
நீர்வேலிப் பதிநின்று நிலமாளு மிராசேசின்
பேர்புகழ் வருவாய் பொலிந்து.

## கலைமகள் துதி

கம்பன ழைத்திடக் களிப்புடன் பணிசெயும்
உம்பர்கோன் சோலைக் கொழுந்தே - செம்மையுடன்
சங்கணவைப் பதியிராசரா சேஸ்வரியைப் பாட
ஐங்கரனோ டிருப்பாய் இசைந்து.

## நூல்

**1.** கருவி முகில்வந்து கவிந் தொழுகி
மருவி எழில் மல்கு நீர்வேலியால்
தருவி னிழலமர்ந்த இராசரா சேஸ்வரி
திருவி லுயர்ந்தபதி போற்றி செய்வாம்.

**2.** விண்ணின் மணியவன் விளைத்த நல்மணிகள்
பொன்னின் மணியென பொலிதரு வயல்செறி
மண்ணின் பெருமை மலிதரு நீர்வேலிக்
கண்ணின் அருளமுதே இராசரா சேஸ்வரியே.

**3.** கொல்ல ருலையில் பழுத்திடு கொழுவந்து
வெள்ள மேவிய வயலினைச் சேறாடி
நெல்லு வளர்ந்து பல்லுயிர் வாழ்வதெல்லாம்
மல்குமுன் னருளம்மா இராசரா சேஸ்வரியே.

**4.** கரந்தனிலே கன்னல் கதிர் விரிந்தொளிர்
இரந்தனர்க் கினியநல் லருளமு தூட்டி
அரந்தையு மோட்டி அகவிருள் போக்கி
பரிந்துலகு புரக்கும் இராசரா சேஸ்வரியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தைப்பூசத் திருநாளில் தன்மக்கள் புடைசூழ
தப்பாமற் காவடி சண்முகர்க் கேந்துமுன்
முன்பாலுறை நாகமுத்து முழங்கு பறைகேட்டு
இன்புற் றருள்நல்கும் இராசரா சேஸ்வரியே.

6. அன்பாகி அறிவாகி என்புருகு காதலாகி
உண்ணுமுலை உதிர்த்தி லுறவாகு தாயாகி
கண்ணொடு கருத்தினி லினியன வெல்லமாகி
என்னுளே ஒளிருமெங்கள் இராசரா சேஸ்வரியே.

7. அறியாத நெஞ்சிலே அறிவாகி ஒளிர்ந்து
பொறியாவும் பொருந்தி இழையோடி நித்தம்
வறியாது பேரின்ப வலைகொண்டு மோதியெனை
நெறியா லுயர்த்தியருள் இராசரா சேஸ்வரியே.

8. போதலகு பொன்வண்ணன் புலர் பொழுதில்
காதினுழை பறவைகளி னமிர்த ராகம்
மேதினியி லுனதருளாய் மென்காற்றிற் கலந்து
வேதமதை ஓதுதம்மா இராசரா சேஸ்வரியே.

9. வெப்பினால் வயிற்றுநோவும் வெதும்பியவாயிற் புண்ணும்
துப்பிலா வறியவாழ்வும் துரத்தியே அழிப்பா யம்மா
ஒப்பிலா உன்னையல்லால் ஒண்பொருள் வேறுஏதும்
இப்புவி மீதில்காணேன் இராசரா சேஸ்வரியே.

10. நின்பதி வந்து நித்தமும் துதிசெய்யா
என்விதி நொந்து மிகஅழ லானேன்
என்று தீர்த்தருள்வாய் தமிழரெம் இன்னல்
கன்றுகள் கதறுதம்மா இராசரா சேஸ்வரியே.

11. மாரியென அருள்பொழியு மீனிநிகர் திருவிழிகள்
சூரியனை மிஞ்சிவரு சோதியுடை இராசேசின்
பேரினுடை பாடல்கள் பத்தினையும் பாடிவர
வேரினொடு நோய்விலகி விழுமியங்கள் சேருமம்மா.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

## நீர்வேலி – சங்கணவைப்பதி,

# ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் திருவூஞ்சல்

*விஸ்வப்பிரம்மஸ்ரீ தெ. கோபாலசிங்கம்*

வருத்தலைவிளான், தெல்லிப்பழை.

### காப்பு

சீர்பூத்த கலைஞர்பல ரும்தாம் போற்றச்
சிவம்பூத்த தவம்திகழ்நீர் வேலி மேவும்
ஏர்பூத்த சங்கணவைத் தேவி யார்க்கே
எழில்பூத்த திருவூஞ்சல் ஏத்திப் பாடத்
தார்பூத்த திருமகுடந் தலைமேல் ஏந்தித்
தரணியைத்தன் றாள்களிலே தாங்கி யாடும்
பேர்பூத்த பிஞ்ஞகச்செம் பிரானா ரீந்த
பிரணவ வினாயகன்றாள் காப்ப தாமே!

### நூல்

பேசுமுயர் நால்வேதங் கால்க ளாகப்
பெயரிய சிவாகமங்கள் விட்ட மாக
வீசுதிரு மந்திரங்கள் ஞாண்கள் ஆக
விழுமியநற் பிரணவமே பலகை ஆகத்
தேசுமிகு மட்சரங்கள் அணைகள் ஆகத்
தெருளீயும் அருளூஞ்சல் தனிலே யேறி
ஈசுவர பாசமிகு நீர்வை மேவும்
இராஜரா ஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

நேமேவு தொண்டர்பலர் யாழை மீட்ட
நெறிமேவு சீரடியார் சுருதி கூட்டப்
பூமேவு பூவையர்கள் தாளம் போடப்
புகழ்மேவு புனிதர்பலர் பாடல் பாடத்
தேமேவு திறத்தர்திரு நடனம் ஆடத்
திருமேவு மூதறிஞர் ஆசி கூறப்
பாமேவு பத்தர்குழாம் பரவு நீர்வைப்
பதியுறை ராஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புதுடி சங்கமொடு முரசம் ஆர்ப்பக்
கோதில்சே மக்கலத்தின் ஒலியும் ஆர்ப்பத்
தும்துமென மத்தளத்தின் ஒலியும் ஆர்ப்பத்
தூய்மைபெறு மாமணியி னோசை ஆர்ப்ப
அம்மையணி மணியார மசைந்தே யார்ப்ப
ஆகாகா எனவடியார் ஆடி யார்ப்ப
அம்புலியும் நிறைவுபெற அரசும் ஆர்ப்ப
ஆலடிரா ஜேஸ்வரியார்த் தாடீர் ஊஞ்சல்.

மாலவன்பூ மகளொடுமோர் வடந்தொட் டாட்ட
மலரயன்நா மகளோடுமோர் வடந்தொட் டாட்ட
வேலவனும் வள்ளியுமோர் வடந்தொட் டாட்ட
வெய்யோன்சந் திரனொடுமோர் வடந்தொட் டாட்டக்
கோலமுயர் நான்மறைமங் களங்கள் பாடக்
கொற்றவர்வா ழியவாழி யென்றே வாழ்த்த
ஞாலமதில் தழைத்தோங்கு நீர்வை மேவும்
நல்லவிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

மகரமுல விடுகடலி லாழ்ந்தே யாடி
மாபெருமண் டலங்களெலா மோடி யாடிச்
சிகரமிகு மலைகள்பல தாண்டி யாடிச்
சீர்த்தாடு சிங்கமதி லெங்கும் ஆடிக்
ககனவெளி தனிலுமொளி கூட்டி யாடிக்
கங்காத ரன்பாதி யாய்வந் தாடி
இகபரசு கந்தருமிவ் வருளா ரூஞ்சல்
ஏறியிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்.

சீரோங்கு புவனமெலாஞ் சென்றே யாடிச்
சிவமோங்கு சீரியர்க்கா யாடீ ரூஞ்சல்!
பாரோங்க வருண்மழைநீ பெய்தே யாடிப்
பகவதியே பார்வதியே யாடீ ரூஞ்சல்!
பேரோங்கு பிரணவத்திற் பரனோ டாடும்
பெட்புநிறை பேடேயீங் காடீர் ஊஞ்சல்!
நீரோங்க நிலமோங்க நீர்வை யூர்க்கண்
நிறையுமிரா ஜேஸ்வரியே யாடீர் ஊஞ்சல்

கலைகளினின் றுயர்ந்துகக னத்தே யாடிக்
கானவொலி தனிற்கலந் தெங்கணும் நீயாடி
அலைகடலுந் துளங்கிடநீ யாழ்ந்தே யாடி
ஆதியிரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகள்மடு குளங்களெலாஞ் சென்றே யாடி
மாபெரிய தலங்களில்ம கிழ்ந்தே யாடிக்
கலைகள்பயில் கம்பியரோ டுரைந்தே யாடிக்
களிக்குமிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

கவியருளுங் காரிகையே யாட ரூஞ்சல்
களிப்பருளுந் தனிப்பொருளே யாட ரூஞ்சல்
நவிலுபவர் நற்சுருதீ யாட ரூஞ்சல்
நனியினிக்கும் நற்கரும்பே யாட ரூஞ்சல்
புவியினரின் நற்புணையே யாட ரூஞ்சல்
புத்தொளியே வித்தகியே யாட ரூஞ்சல்
தவிசிலிருந் தருளாடி யெம்மைக் காக்கும்
தாயிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

தானந் தவமிரண்டுந் தழைத்தே தோன்றத்
தரணிசெழிப் புறநின்றிங் கார்த்தே தோன்ற
வானங் கறுத்துமழை பொழிந்தே தோன்ற
வையம் மகிழ்ந்துவனப் புற்றே தோன்ற
மோனம் நிலைத்ததவத் தோர்கள் தோன்ற
மோட்சந் தனைவிழையு முயிர்கள் தோன்ற
ஞானப் பெருந்தாயா யொளிர்ந்தே தோன்றும்
நடனவிரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

ஆர்த்தநற் றவவடிகள் ஆட ஆட
அருமறைக ளவனியெலா மாட ஆடக்
கார்த்திகைப் பெண்கள்களித் தாட ஆடக்
கவினார்சீ ரடியரெலாம் ஆட ஆட
ஆர்த்தாடு மம்பலத் தோன் ஆட ஆட
அண்டியடித் தொண்டுசெயு மன்பர் தம்மை
ஈர்த்தாடுந் திருவடிகள் எடுத்த சைந்தே
இராஜரா ஜேஸ்வரியே யாட ரூஞ்சல்.

**வாழி**

மதிதருநல் லறிவருளு சைவம் வாழி
மன்னுகலை நீதியுயர் மறைகள் வாழி
கதிதருநல் லறநெறியா கமங்கள் வாழி
கவின்குலவு மகளிர்நிறை கற்பும் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியமறை யவர்கள்தவ முனிவர் வாழி
மூதறிஞர் போற்றுகலை முதலும் வாழி
நிதிதருநெல் வயல்கள்மலி நீர்வை தன்னில்
நிறையுமிரா ஜேஸ்வரியே வாழி வாழி!

### எச்சரிக்கை

காரார்குழல் மாதேசிவ காமி எச்சரிக்கை
கவினார்மதி வதனிஜெய கௌரி எச்சரிக்கை
தீராவினை தீர்த்தேயருள் தேவி எச்சரிக்கை
திகழ்சுத்தசத் தியளெயருட் டேனே எச்சரிக்கை
பேராலடி ராஜேஸ்வரிப் பெயரா ளெச்சரிக்கை
பெட்பார்சிவ சத்தியருட்பேடே எச்சரிக்கை
ஆராவமு தேதேனிகர் ஆத்தா ளெச்சரிக்கை
அடியார்க்கருள் தினமுந்தரும் ஆதி எச்சரிக்கை.

### பராக்கு

கற்றவர் போற்று சிவ காமி பராக்கு
காந்தாரி தாபரிக பாலி பராக்கு
நற்றவத் தோரர்த்த நாரி பராக்கு
நரர்சுரர் ஏத்துபர நீலி பராக்கு
அற்புத விலாசினி ஆதி பராக்கு
ஆங்கார தெய்வவோங் காரி பராக்கு
விற்பன விலாசபர வீரி பராக்கு
வீரரா ஜேஸ்வரி விஜையே பராக்கு.

### மங்களம்

தங்குநிதி பொங்குமெழில் நீர்வைநகர் மேவுமிறை சத்தியே திரு மங்களம்
தளிரடி யெடுத்துநட மிடுபுவன சுந்தரி தயாபரி திரு மங்களம்
சிங்கமதி லேறிவிளை யாடிவினை சாடிவரு சிவையம்மை திரு மங்களம்
சீருயர் வனப்புமிகு சேவடி யசைத்துவரு சிவகாமி திரு மங்களம்
அங்கையினி லேந்தியெரி யாடுமெம தன்னையுமை ஆரணி திரு மங்களம்
ஆயகலை கள்பலவு மன்றுமென் றும்அருள் அம்பிகை திரு மங்களம்
சங்கணவை மண்ணிலுய ராலடி யமர்ந்துசிவ சங்கரி திரு மங்களம்
சந்தத மெமக்கருளு மன்னைபர ராஜரா ஜேஸ்வரி திரு மங்களம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி : IV

# அம்மனை வாழ்த்திநிற்கும் விளம்பரதாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்

# பிரசாத் நகை அகம்

## தங்கப்பவுண் நகை வியாபாரம்



**நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்**



**22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.**

# பிரசாத் நகை அகம்



**177A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**



**T.P. : 021 2225906**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



# செல்லமுத்தூஸ்



## புடவை மாளிகை

திருமணப் பட்டுப்புடவைகள், சேட்டிங், சூட்டிங்ஸ்,

சிறுவர்களுக்கான ரெடிமேட் ஆடைகள்

# Sellamuthus Textiles

*Wedding Silk Sarees, Shirtings, Suitings &*

*Readymade Dresses*

நெல்லியடி, Nelliady,

கரவெட்டி. 0212263238 Karaveddy.

இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

சிறப்புற வாழ்த்துகின்றோம்

# TITANIC RESTAURANT

**Nelliady**

*Chinese & Jaffna Special Food*

*We under take Catering*

*for special occation*

Mr. R. Kumaran Tel : 021 226 2323,

077 408 4862





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்



# YASO TEX



திருமண வைபவங்களுக்கேற்ப பட்டு வேட்டி,
கூறைச் சேலைகள், பிடைவைகள்,
ஆண்களுக்கான ரவுசர், சேட், ரீசேட், சேட்டிங், சூட்டிங்,
சிறுவர்களுக்கான சூட், கவுண் வகைகள்
ஆகியவைகளுக்கு

# யசோ ரெக்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

# அபிஷா நகைமாடம்

22 கரட் ஓடர் நகைகள் குறித்த நேரத்தில்
செய்து தரப்படும்.





*உரிமையாளர் :*
*S. சிவபாலன்*
*T.P. No : 0774912849*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# ஒளிரதி

## டிஜிற்றல்
## வீடியோ அன் போட்டோ

பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.

தொ.பே. : 077 7116805, 021 3213150

இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# Pillaiyaar Stores

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

(பல்பொருள் வாணிபம்)

*Hardware Merchants, Importers of Building Materials, Tokyo Super Cement, Mitsui Cement, Asbestos, Electricals, Cables & Accessories, S-Lon Products, Water Tank, Water Tec, Pipe Paints, Cycle Parts & Accessories*

யாழ். பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி

**Jaffna PointPedro Road, Siruppiddy.**

*T.P. No : 021 4591873*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# LEADING CRUSHER WORKS

*No. 118, Poonthoddam Road, Vavuniya.*

**T.P. 024-2222990, 024-3240929, Fax : 024-2222990**

**Building Bridage Road, Contractor, Suppliers & Transporters**

**Hiring for escavator, Dozer, Motor grader, Road Roller, Tipper, Loader.**

e-mail : www.leadingcw@yahoo.com

**Site office : Avarangal 0779361740**

---

இராஜராஜேஸ்வரி அம்மனின்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

# குணாஸ்

**பல்பொருள் வாணிபம்**

இல. 06, நவீன சந்தை,
நெல்லியடி.

---

நீர்வேலி வடக்கு, இராஜராஜேஸ்வரி அம்மனின்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

உயர்ந்த தரமும் உன்னத சுவையும்
கொண்ட ஐஸ்கிறீம் குளிர்பானம்
மற்றும்
உணவு வகைகளையும்
சிறந்த முறையில் பெற்றுக்கொள்ளும்
இடம்

# Lovely Cool Bar & Restaurant

**T.P. No. 021-2263219**

*Prop.: S. Rokesan (Rohan)*

Main Street, Nelliady.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

# ஜெயசெந்தினி நகைமாடம்



உரிமையாளர் : K. ஜெயநாதன்

Tel. : 021 2263217

பிரதான வீதி, நெல்லியடி.

---

அம்பாளின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# VARSAN ELECTONICS

Dealars : T.V., Radio, Fan, Watch, Clock & Electronic items



# வர்ஷன் எலக்ரோனிக்ஸ்

Proprietor : Mr. J. Rajarajan

Mobile : 0777 112122

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

---

அம்பாளின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# JANA CIVIL CONTRACTOR

ICTAD No. : 9415

Building contractor, Materials Suppliers & Hiring for Lorry, Canter & Tractor

Imayanan East, Uduppiddy, Jaffna.

Tel : 0213007592, 0212262077, 0776000970

email - jeyaratnamryahoo.com

---

இராஜராஜேஸ்வரி அம்பாளின் சித்திரத்தேர்
வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# JANA TRADE CENTRE

Hardware, Electrical Goods, Paints & Tractor Spare

Imayanan East, Uduppiddy, Jaffna.

Tel : 0213007592, 0212262077, 0776000970

email - jeyaratnamryahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜராஜேஸ்வரி அம்பாளின்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

LANKA FUEL MART

Visvalingam &
Sons

Point Pedro Road,
Siruppiddy.
021 3211646

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

கோவிலுக்குத் தேவையான
தேர், மஞ்சம்,
ஏனைய வாகனங்கள் ஆகிய
கலைப் படைப்புக்களை
ஆகம மரபுக்கமைய
நிர்மாணித்துத்தர
நாடவேண்டிய இடம்

மயிலிட்டி சிந்துஜா
கலைக்கூடம்

ஸ்தபதியும் முதல்வரும் :
த. ஸ்ரீதரன் ஆச்சாரியார்

இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

செலான் வங்கி

அன்புடன் அரவணைக்கும் வங்கி

நெல்லியடி. தொ.பே. : 021 320 5761, 021 320 5762

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வேலி வடக்கு, இராஜராஜேஸ்வரி அம்பாளின்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

# பவானி களஞ்சியம்

விவசாய உள்ளீடுகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

இராசவீதி, நீர்வேலி.

இராஜராஜேஸ்வரி அம்மனின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்

# ராஜ்மணி

## பந்தல் சேவை

குறுக்குவீதி, நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எல்லாம்வல்ல நீர்வேலி வடக்கு, சங்கணைவைப் பதி, 'இராஜராஜேஸ்வரி அம்மன் சித்திரத்தேர் வெள்ளோட்டச் சிறப்புமலர்' வெளியீட்டுக் குழுவினரின் சார்பில் தேர்த் திருப்பணி, தேர் வெள்ளோட்டச் சிறப்புமலர் தொடர்பில் பங்களித்த, உதவி நல்கிய அனைத்து நல்நெஞ்சங்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

❖ அம்மனின் சித்திரத்தேர்த் திருப்பணியை நிறைவேற்றிடச் சங்கற்பம் பூண்டு, மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் அருளாசியுடன் அயராதுழைத்து நின்ற, எழுதாமறை நிலைத் தேர்த் திருப்பணிச் சபையினருக்கு சிறப்பாக நீர்வேலி வடக்கு, விஸ்வப் பிரம்மஸ்ரீ வல்லிபுரம் தம்பு ஆச்சாரியார் குடும்பத்தினர்,

❖ தேர்த் திருப்பணிக்கும் அதனோடிணைந்த திருத்தேர் மண்டபம், ஆலயக் கோபுர நிர்மாணம் என்னும் இருவேறு திருப்பணிகளுக்கும் பெருமனதுடன் பெருநிதி வழங்கியுதவிய இலங்கை, வெளிநாடுகளைச் சேர்ந்த விஸ்வப் பிராமண சமூக அன்பர்கள், ஏனைய தமிழ் - இந்து அன்பர்கள்,

❖ மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் சித்திரத்தேர் நிர்மாணத் திருப்பணியை **(29.01.2010 - 24.05.2010)** கலைத்திறனும் தொழில்நுட்பத் திறனும் இணைந்து நிற்கும் வகையில் உயிரோட்டம் நிறைந்தவண்ணம் கலை வெளிப்பாட்டாக்கம் செய்து பல்லோர் மனங்களிலும் உயர்ந்து நிற்கும் மயிலிட்டி, விஸ்வப்பிரம்மஸ்ரீ த. ஸ்ரீதரன் ஸ்தபதியாரும் அவர்தம் பணிகளுக்கு முருகனுக்குக் கிடைத்த விநாயகரைப் போல வாய்த்த ஆற்றல்மிகு அண்ணன் த. விக்னேஸ்வரன் ஆச்சாரியாரும் மயிலிட்டி, சிந்துஜா கலைக்கூட கலைஞர்களும்,

❖ திருத்தேர் மண்டபம், ஆலய முகப்புக் கோபுரம் ஆகிய நிர்மாணப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தும் ஈடுபடுத்தியும் பங்களிப்புச்செய்த கலைஞர், தொழில்நுட்பக் கலா நிபுணர்கள், ஆலோசகர்கள்,

❖ சித்திரத்தேர்ச் சிறப்புமலர் சிறப்புற ஆசியுரை, வாழ்த்துரை, ஆலய வரலாற்று சிறப்புக்கள், விஸ்வப்பிரம்ம சமூக வரலாற்றுப் பெருமைகள், அன்னை வழிபாடு, தேர்ப் பண்பாட்டின் பெருமையும் சிறப்பும், தேரமைத்த கலைஞனும் பாரம்பரியமும் ஆகிய துறைகளில் தேர்ந்த ஆய்வுரைகள், கலா விமர்சனங்கள், ஏனைய கவிதையாக்கங்கள் என வழங்கி எம்மைக் கௌரவித்த சமய முதல்வர்கள், குருமணிகள், அறிஞர்கள், ஆய்வறிவாளர்கள், கவிஞர்கள் என்னும் சமூக, பண்பாட்டுப் பேரறிஞர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சித்திரத் தேர் வெள்ளோட்ட மலரை மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் கணனிப்பதிப்புச் செய்தும் அச்சேற்றியும் கட்டமைப்புச் செய்தும் உதவிய நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர்,

❖ விளம்பரம் தந்து தமது ஆதரவின் மூலம் அம்மனின் கருணைக் கடாட்சத்தைப் பெற்றுக் கொண்ட விளம்பரதாரர்கள்,

ஆகிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது தேர்த்திருப்பணிச்சபை சார்பிலும் ஆலய பரிபாலனசபை சார்பிலும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் எல்லாம் வல்ல நீர்வேலி வடக்கு, சங்கணைவைப்பதி, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனின் திருவருள் கிடைப்பதாகுக என்று பிரார்த்தித்து அமைகின்றோம்.

'அம்மனின் பொங்கும் மங்களம் எங்கும் தங்குக'

**வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்,** M.Phil.,
மலராசிரியர்,
**பத்மநாதன் பரமேஸ்வரன்,** B.B.A.,
செயலாளர்,
மலர் வெளியீட்டுக் குழுவினர் சார்பாக,
தேர்த் திருப்பணிச் சபை,
'சங்கணைவைப்பதி',
இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்,

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
*24.05.2010*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org